
மங்கையர் மலர்

Mangayar Malar


செப்டம்பர் '83 ரூ.1.50





(11 – 11) நேர்ப்புள்ளி)

17 புள்ளி 1ல் நிறுத்தவும். (நேர்ப்புள்ளி)



மங்கையர் மலர்

செப்டம்பர் 1983

பக்கம்





எதிர்ப்பக்கக் கோலங்கள்: அகிலாதேவி

அட்டை வண்ணப்படம்: பி. ச. ரமணன்
படத்தில்: ஜெயாக்ருபாசாகர்

சந்தா விவரம்


தனிப்பிரதி ரூ. 1-50
ஆண்டுச் சந்தா ரூ. 18/-
ஆறு மாத சந்தா ரூ. 9/-

Edited, Printed and Published by V. Murali on behalf of Messrs Bharathan Publications Private Limited, at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600032 (Phone: 431543)

Assistant Editor: Manjula Ramesh



அமையல்



காதைக் குடையாதீர்கள்!

சமீபத்தில் எனக்குத் தெரிந்தவர்களுடைய குழந்தைக்குத் திடீரென்று மூச்சுத் திணறல் ஏற்பட்டது. அது வரை நல்ல நிலையில் விளையாடிக்கொண்டிருந்த குழந்தை 'அழவோ, பேசவோ முடியாத நிலையில், பதறியபடியே உறவினர் புடைசூழ, ''குழந்தை மருத்துவ நிபுணரி''டம் அழைத்து வரப்பட்டது.

குழந்தையைக் கவனித்த பின் மருத்துவர், அதற்குச் சிகிச்சை அளித்தபின் அந்தத் தாயிடம் கீழ்க் காணும் அறிவுரைகளைக் கூறினார்:

(1) குழந்தைக்கு விளையாட பொம்மைகள் கொடுத்தால், முதலில் அந்தப் பொம்மையிலிருந்து குழந்தையால் எளிதாக எடுக்கக் கூடிய பொத்தான், பொம்மையின் கண் (மணிகளால் ஆகியிருப்பின்), சிறிய ஸ்குரு, மற்றும் எளிதில் கழலக் கூடிய மோட்டார் சக்கரங்கள் முதலியவற்றைத் தனியே எடுக்கவும்.

2. உங்கள் கைப்பை, தையல் கூடைகள் மற்றும் இது போன்ற உபகரணங்கள் அடங்கிய பைகளை குழந்தையின் கைக்கு எட்டாதவாறு வைக்கவும்.

3. கொண்டை ஊசி, பின்களை மேலே வைக்கவும்.

4. உடைந்த கிரேயான், உடைந்த பொம்மைகளைத் தூர எறியவும்.

5. கடைசியாக நீங்களே ஒரு சிறந்த உதாரணமாக இருங்கள். உங்கள் வாயில் பின்களைக் கடிப்பதோ, நகத்தைக் கடிப்பதோ, பல் குத்தும் குச்சி

ப்ரிட்ஜில் ஒரு ஐ(ஸ்)டியா!

உங்கள் விருந்தினர்களுக்கும் நண்பர்களுக்கும் சர்பத், ஜூஸ்போன்ற குளிர்பானங்கள் தரும்போது அவைகளில்வெறும் ஐஸ் கட்டிகளைப் போடுவதற்குப்பதில் அலங்கார ஐஸ் கட்டிகளைப் போடலாமே!

ஃப்ரீஸ் செய்வதற்குமுன் ஐஸ் டிரேயில் சில சிறு பழத் துண்டுகளைப் போட்டுவிடுங்கள் போதும்! உள்ளே பழத் துண்டுகள் பளபளக்க அழகிய ஐஸ் க்யூப்கள் கிடைக்கும்.

உதாரணமாக: ஆரஞ்சு ஜூஸ் என்றால் பழச் சுளைகளிலிருந்து உதிர்த்த ஆரஞ்சு மணிகள்.



களை உபயோகிப்பதோ குழந்தையின் எதிரில் செய்யாதீர்கள்.

முதலுதவி: சிறிய குழந்தையாக யிருந்தால், குழந்தையின் தலையை உங்கள் கைக்குக் கீழ்ப்புறமாகக் கொண்டு வரவும். பிறகு கூடியவரை தொண்டைக்குள் விரலை விட்டுச் சுத்தப்படுத்தலாம்.

மெல்லியதாக இரண்டு அடிகளைக் கழுத்துப்புறம் அடிக்கவும். பிறகு மருத்துவரை அணுகவும்.

—லட்சுமி நடராஜன்

கத்தரிக்காய் மகாத்மியம்!

கூட்டு, வறுவல், பச்சடி, சாம்பார் போன்ற பல வகைகளில் கத்தரிக்காயின் ருசியை மக்கள் அனுபவித்து வருகின்றனர். என்றாலும், அதன் மருத்துவ இயல்பை அவர்கள் அவ்வளவு அதிகமாகத் தெரிந்திருக்கவில்லை.

ஆண்மையைப் பெருக்கும் தன்மைகள் பல கத்தரிக்காயில் இருக்கின்றன. ஒருசிலமாதங்கள் தொடர்ந்து காலையிலும் மாலையிலும் சமைத்த கத்தரிக் காயைச் சாப்பிட்டு வந்தால், பலவீனமான நிலையில் விந்து வெளியேறும் வீரியக் குறைவைக் குணப்படுத்தலாம்.

ஆயுர்வேதத்தில் பெரும் புலமை கொண்ட பண்டித பலா மிஷ்ரா கத்தரிக் காயால் மண்ணீரல், கல்லீரல் சம்பந்தமான வியாதிகள் குணமாகும் என்கிறார். அதிகாலையில் இரண்டு அல்லது மூன்று பிஞ்சு கத்தரிக்காய் களை உட்கொண்டு வருவதால் பெரிதாகிவிட்ட மண்ணீரல் சுருங்கும். கத்தரிக்காயை ஒழுங்காகச் சாப்பிட்டு, வந்தால் சிறு நீரகத்தில் கற்கள் உற்பத்தியாவதைத் தவிர்க்கலாம்.

வெந்நீரில் வேகவைத்த கத்தரிக் காயின் பசையை சீழ் பிடித்த கட்டியின் மீது தடவி வந்தால், அது விரைவில் சொஸ்தமாகி விடும்.

மாத விலக்கின்போது குறைவான இரத்தப் போக்கினால் அவதிப்படும் பெண்கள் அதற்கு இயற்கை முறையில் சிகிச்சை செய்து கொள்ள விரும்பினால், கத்தரிக்காய்தான் அருமருந்து. பெண் 'முட்டை'களை உருவாக்கும் பாகங்களின் இயக்கத்தை அதிகரித்து கருப் பையைத் தூண்டக் கூடிய கூட்டுப் பொருட்கள் கத்தரிக்காயில் உண்டு.

மேலும், அது மனிதனுக்குத் தேகாரோக்கியமும் சக்தியும் ஊட்டவல்லது. இரத்தத்தின் சிவப்பு அணுக்களையும் அவ்வணுக்களுக்குச் செந்நிறமேற்றும் 'ஹீமோகுளோபின்' சத்தையும் கத்தரிக்காய் பெருகச் செய்கிறது. அதனால் அது இரத்தக் குறைவும் சோகையும் உள்ளவர்களுக்குப் பயன்படுகிறது.

குளிர் காலம்தான் கத்தரிக்காய் களைச் சாப்பிடுவதற்கு ஏற்ற பருவம். ஏனெனில் அது உடம்பில் சூடேற்றுகிறது. கரடு முரடாக உலர்ந்தாற் போலிருக்கும் சருமத்தை வழு வழுப்

எலுமிச்சை ஜூஸ்: சில சிறு சிறு எலுமிச்சப்பழத்துண்டுகள்.

லஸ்ஸி: உதிர்த்த புதினா அல்லது கொத்துமல்லி இலைகள்.

ஸ்வீட் வகைகள்: கருப்பு திராட்சை, கிஸ்மிஸ்.

திருமண நாள், பிறந்த நாள் போன்ற விசேஷங்களில் (ஸ்வீட்களை அழகுபடுத்த உபயோகிக்கும்) வெள்ளி ரேக்குகளை - துண்டுகளாக்கிப் பழங்களுக்குப் பதில் போட்டால் மினுமினுக்கும் வெள்ளிக் கட்டிகளாகஐஸ்துண்டு ஜொலிக்கும்.

எஸ். பட்டம்மாள்



பும், எண்ணெய்ச் சத்தும் உள்ளதாக ஆக்குகின்றன: குறிப்பாக, முகத்திற்கும் சரியான நிறம் தருகின்றன.

கத்தரிக்காய்களுடன் தக்காளி முதலிய காய்கறிகளைச் சேர்த்து வடநாட்டினர் 'பூர்தா' போன்ற சுவையான வியஞ்சனங்களைத் தயாரிக்கின்றனர். அவற்றை மசாலா கலந்து பொறிப்பதை விட நீரில் வேகவைத்து சாப்பிடுவதே நல்லது. கத்தரிக்காய்களை நன்றாகக் கழுவி, தோலுடன் சமைத்தால் நல்ல பலன் கிடைக்கும்.

கத்தரிக்காயைத் தின்றால், வயிற்றில் வெப்ப, வாய்வுத் தொந்தரவுகள் ஏற்படும் என்றும் அதனால் அதைத் தவிர்க்க வேண்டும் என்றும் ஒருசிலர் நினைக்கின்றனர். இது ஒரு தவறான நம்பிக்கைதான். உண்மையில் அது போஷாக்கு நிரம்பியது.

—எஸ். ஏ. காதிர்

பானு அதையா—

ஆஸ்கார் பரிசைப் பெறும் முதல் இந்தியர். அதுவும் பெண்மணி. அழகு செய்வதற்கு ஏற்றவர்கள் பெண்கள் தானே? 'காந்தி' திரைப் படத்திற்கு உடை அலங்காரம் செய்து அழகைக் கூட்டியவர் இவர். காந்தி படம் தான் இவருக்கு திரையுலகில் மிகப் பெரிய அவார்டு என மதிக்கப்படும் 'ஆஸ்கார்' விருதை வாங்கிக் கொடுத்திருக்கிறது. அவார்டு வாங்கிய சமயத்தில் பானு அதையா உணர்ச்சிப் பிழம்பாகி யிருக்கிறார். அவார்டை கொடுத்தவர்கள் யார் என்பதுகூட இவருக்குத் தெரியாதாம்!

ராஜபுத்திர வம்சத்தைச் சேர்ந்த பானு அதையா பெயிண்டிங் பற்றிப் படிப்பதற்காகத்தான் பம்பாய்க்கு வந்தார். முதலில் பெயிண்டிங் கற்றார். சில காலம் பத்திரிகைகளில் டிசைனராகப் பணியாற்றினார். இப்படிக் கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து சினிமா உலகில் உடை அலங்கார நிபுணரானார் பானு. ஹிந்தி திரையுலக நடிகைகள் இவரிடம் அடிக்கடி ஆலோசனை கேட்டு உடைகளை டிசைன்செய்து கொள்வதுண்டாம்.

கலைஞர்களுக்குத் தேவை தனிமை. தனிமையில் இருக்கும் போதுதான் நிறையச் சிந்திக்க முடியும். புதுப்புது சிந்தனைகள் வடிவம் பெறுவது தனிமையில்தான். எனவே தனிமையைத் தான் அதிகம் விரும்புகிறார் பானு.

பாரிஸில் பிரெஞ்சு அரசின் உதவித் தொகையுடன் 1966-67ல் உடை அலங்காரத்தைப் பற்றி டிப்ளமோ படித்ததை நினைவுகூரும் அதையா தனக்குத் தன் தொழிலைத் தவிர வேறு எந்த ஹாபியும் கிடையாது என்கிறார். இனிமையாகப்பேசும் பானு எதையும் சீரியஸாகஎடுத்துக்கொள்வதில்லை. ஆனால் தன்னுடைய தொழிலில் இறங்கி விட்டால் 'செய்யும் தொழிலே தெய்வம்' என்ற பழமொழியை மெய்ப்பித்து விடுகிறார்.

—தாரிணி அருணி





இலவசம்!

**கவர்ச்சியான
ஸ்டெய்ன்லெஸ் ஸ்டீல்
கிண்ணம், 2 டின் ஃபாரெக்ஸ்
வாங்கும்போது.**

சில தேர்ந்தெடுத்த ஊர்களில்
மட்டுமே வழங்கப்படுகிறது.
ஸ்டாக் உள்ளவரை.



க்ளாக்ஸோ வழங்கும் **ஃபாரெக்ஸ்®**

வளரும் குழந்தைகளுக்கான விசேஷ திட உணவு.

CASGLF-43-203 TAM


ஷா வாலஸ் வழங்கும்
சூப்பர் பவர்
ரீகல்
டிடர்ஜெண்ட் கட்டி
அழுக்கைத் தகர்த்திடும்
துணிகளைக் காத்திடும்
ரீகலின் அபார சலவை சக்தி, உங்கள் துணிகளில் விடாப்பிடியாகப் படிந்திருக்கும் அழுக்கைத் தகர்த்து விரட்டுகிறது. உங்கள் துணிகளை அதிவெண்மையாகவும் பளிச்சென்றும் சலவை செய்கிறது.
மேலும் ரீகலின் பாதுகாப்பான சலவை உங்கள் துணிகளுக்கு இதமானது. மென்மையானது... புதுமையான நறுமணத்துடன் கூட.
ACIL 0592/83-Tam-R
Super Power
Regal
Tough on dirt - Soft on clothes
ஷா வாலஸின் தரமான தயாரிப்பு
Shaw Wallace

நாங்களும் மனுஷிகள் தான்

— மஞ்சுளா ரமேஷ் —



"ஐயையோ, நர்ஸுங்களா? அவங்க மனுஷங்களா என்ன? சிடுசிடுங்கறதும், எப்பப் பாரு போ, போன்னு விரட்டறதும்... சீ, இவங்கள்ளாம் பொம்பளைங்களே இடையாது..." என்று சொல்கிறவர்கள் தான் அதிகம்.

"நாங்களும் மனுஷங்கதான், எங்களையும் கொஞ்சம் புரிஞ்சுக்கங்களேன்..." என்று புன்னகையுடன் கூறுகிறார் சென்னைப் பொது மருத்துவமனை நர்சிங் டியூடர் திருமதி சரோஜா வைத்தியநாதன்.

இவரோடு, இவருடன் பணிபுரியும் நாலைந்து நர்ஸுகளுடன் பேசிக் கொண்டிருந்த போதுதான், இவர்களுடைய பணி எவ்வளவு கரடுமுரடானது என்று தெரிகிறது.



முன்பெல்லாம் சேவைக்கென்றே தங்களை அர்ப்பணித்துக் கொண்ட பெண்களே செவிலியர்களாக வந்தனர். இதற்காகவே திருமணம் செய்து கொள்ளாமல் இருந்து விடுவார்கள். எனவே இவர்களுக்கு வாழ்க்கை பிரச்சினை என்று தனியாக எதுவும் இடையாது.

இன்றைக்கு 'நர்ஸ்' களுக்காகத் தனியான மூன்றரை வருடப் படிப்பு என ஆரம்பித்து, அது ஒரு முறைப் படுத்தப்பட்ட வேலையென்றாகிவிட்டது. எல்லா வேலைகளுக்கும் வருவது போலவே இதற்கும் பெண்கள் படித்துப் பட்டம் பெற்று வருகிறார்கள். ஆனால் 'வேலைக்குப் போகும் பெண்களுக்கான பிரச்சினை' யென்றால் அது உண்மையில் இவர்களுக்குத்தான் அதிகம் போலும்!

"டைம்" என்ற, ஒன்று இருக்கிறதே, அதுதான் எங்கள் வாழ்க்கையில் நாங்கள் பல வாய்ப்புக்களை இழக்கக் காரணமாகிறது.



காலையில் ஏழு மணியில் இருந்து ஒரு மணி வரை மீண்டும் மூன்றரையில் இருந்து இரவு ஏழு வரை என டியூட்டி அவர்ஸ் இருக்கும். நைட் ஷிப்ட் ஆக இருந்தால் இடைவிடாத பனிரெண்டு மணி நேர வேலை.

பெரும்பாலான நாட்கள் நாங்கள் காலையில் வரும்போது குழந்தைகள் தூக்கத்திலிருந்தே எழுந்திருக்காது. மீண்டும் ஏழு மணிக்கு வேலை முடிந்து. டிரஸ் மாற்றிக் கொண்டு வீட்டையடையும் நேரம் குழந்தைகள் தூங்கி விட்டிருப்பார்கள். நைட் ஷிப்டுக்கும் இதே கதைதான்.

வீட்டிற்குள்ளேயே கணவனும், மனைவியும் கடிதத்தில்தான் பேசிக் கொள்வோம்! உடம்பு சரியில்லாத குழந்தைக்கு இந்த மருந்தைக் கொடுக்க வேண்டும், காபி இங்கே இருக்கிறது டிபன் இதில் இருக்கிறது என எழுதி வைத்துவிட்டு வந்தால், மறுநாள் பதில் இருக்கும். இப்படித்தான் எங்கள் நாட்கள் போய்க் கொண்டு இருக்கின்றன.

காலையில் நாலு மணிக்கு எழுந்து சமையல் டிபன் முடித்து ஆறுக்கு நாங்கள் கிளம்பி இங்கே ஏழுக்கு இருக்க வேண்டும். அதில் வந்த களைப்பு, குடும்பக் கவலை எனப் பல இருக்கலாம். இதனால் சிலர் கொஞ்சம் சிடுசிடுக்கலாம்.

ஆனாலும் நர்ஸுகளின் பொறுப்பு எத்தகையது. அவர்களுடைய துயரங்கள் எப்படிப்பட்டவை என்பதை மற்றவர்கள் புரிந்து கொள்வதில்லை.''

என்கிறார்கள் இவர்கள். உண்மைதான். ஊருக்கு இளைத்தவன் 'பிள்ளையார் கோவில் ஆண்டி என்பது போல, எல்லா பழியும் இவர்கள் மேல்தான் வந்து விழுகிறது.

> **பெண்களின் கவனத்துக்கு**
>
> காலையில் பழைய பேப்பர்காரன் ஒருவன் வந்தான். நான் கிலோ 3 ரூபாய் என்றால் பேப்பர் போடுகிறேன் என்றேன். சரிம்மா மூன்றுக்கே எடுத்துக் கொள்கிறேன் என வந்தான். என் கணவர்தான் புத்தகம் அனைத்தையும் எடுத்துக் கொடுத்தார். கூடவே இருந்து எடையும் பார்த்தார். அவன் நிறுக்கும் பொழுதே எனக்கு ஒரு கிலோவுக்கு இத்தனை புத்தகமா நிற்கும் என்று சந்தேகம் வந்தது. என் கணவர் எடை போட்டுக் காட்டும் வரை நின்று மூன்றரைக் கிலோ எடை பார்த்து விட்டு அதற்கான பணத்தை ரூபாய் பத்தரையும் வாங்கி என்னிடம் கொடுத்தார்.
>
> ஒரு ஐந்து நிமிடம் கழித்து கடையில் ரவை வாங்கச் சென்ற என் கணவர் எங்கள் வீட்டில் வாங்கிய புத்தகக் கட்டு அங்கே இருப்பதைப் பார்த்தார். விசாரித்ததில் தெரிந்தது. பத்தரைக் கிலோ இருந்த அவற்றை இருபத்தி ஆறு ரூபாய்க்கு அங்கே போட்டுவிட்டுப் போயிருக்கிறான் பேப்பர்காரன்.
>
> —செல்வி கனகராஜ்

வார்டுகளில் கூட்டம் அதிகம் வந்து சேரும்போது, கூச்சலும், குழப்பமுமாக இருக்கும் போது கத்த வேண்டியவர்கள் இவர்கள்தான். டாக்டர்கள் மக்களை விரட்ட முடியாது. சாதாரண பணியாளர்களுக்கும் அது வேலையில்லை. எனவே பொதுநன்மை கருதி பார்வையாளர்களை விரட்டி, கூச்சலை அடக்கி வார்டின் ஒழுக்கத்தை, சுத்தத்தைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பில் இவர்கள் இருக்கிறார்கள். ஆனால் மற்றவர்களோ இவர்களை வெகுச் சுலபமாக ''நர்ஸம்மா கத்துகிறாள், மனுஷியா இவ, நம்ப கஷ்டம் இவளுக்கென்ன தெரியும்?'' என்று பெயர் சூட்டுகிறார்கள்.

இப்படிப் பெருமூச்சு விடும் இவர்களின் வாழ்க்கையும் ஒவ்வொரு விதமாகத்தான் அமைந்து . விடுகிறது.

நர்ஸுகளின் தனிப்பட்ட வாழ்க்கை என்று வரும்போது மிகவும் பிரச்சினைக்குரியதாகத்தான் ஆகிவிடுகிறது. அவள் ஆண், பெண் பேதம் பார்க்காமல் நோயாளிகளைத்தொட்டு கவனிக்கத்தான் வேண்டும். வரும், போகும் மனிதர்களிடம் பேசித்தான் ஆகவேண்டும். டாக்டர்களிடமும் பேச வேண்டும்.

''ஆனால் இதைப் பற்றியெல்லாம் சரியான கண்ணோட்டத்தில் எடுத்துக் கொள்ள எத்தனை கணவர்களால் முடிகிறது? எங்களுக்குத் தெரிந்து பல நர்ஸுகளுடைய வாழ்க்கை இப்படிச் சீரழிந்து !இருக்கிறது.

''இவள் ஒரு நர்ஸ், இவளுடைய வேலை இப்படிப்பட்டது என்று தெரிந்து கொண்டு தான் திருமணம் செய்து கொள்கிறார்கள். பிறகு ஏன் இந்தச் சந்தேகப் புத்தி? அப்பப்பா, அப்படிப்பட்ட பெண்கள் படும் துயரங்களை நாங்கள் பார்த்துக் கொண்டு தான் இருக்கிறோம். இதைவிட நரகம் தேவலை என்றாகி விடுகிறது.

இந்தச் சந்தேகம் என்று வராவிட்டாலும் பெண் என்ற முறையில் பல கஷ்டங்கள் இருக்கின்றன. ஒரு நல்ல நாள், பண்டிகை, விரதம், மடி ஆசாரம்: எங்களுக்கு எதுவும் கிடையாது. ஏழு மணிக்கு டியூட்டி என்றால் நாங்கள் ஆறு மணிக்குப் புறப்பட்டே ஆக வேண்டும்.

மாமியார்களின் வசைகளையும், குழந்தையைக் கூடப் பாக்காம போறா என்ற கணவனின் இடிச் சொல்லையும் கேட்கும் பெண்கள் பலர் எங்களில் இருக்கிறார்கள். நாங்கள் என்ன செய்ய முடியும்? அத்தியாவசியப் பணி என்ற முறையில் எங்களுக்கு அரசாங்க விடுமுறை கூடக் கிடையாது. வீட்டின் கவலைகளைச் சுமந்து கொண்டு இங்கு வந்து, நோயாளிகளின் வசைச் சொல்லை கேட்டுக் கொண்டு, பொது மக்களின் சாடல்களையும் ஒப்புக் கொண்டு வாழுகிறோம்!'' என்று வேதனையுடன் சிரிக்கிறார்கள்.

''இந்த வேலையில்தான் இவ்வளவு துன்பம் இருக்கிறதே. அப்புறம் ஏன் இந்த வேலைக்கு வருகிறீர்கள்?''

என்று கேட்டால் சிரிக்கிறார்கள்.

''சேவை செய்ய வேண்டும் என்ற மனப்பான்மையுடன் வருகிறார்கள் சிலர். பலருக்கு இதன் கஷ்டங்கள் தெரிவதில்லை. எல்லாப் படிப்புக்கும், விண்ணப்பங்களைப் போடுவது போல இதற்கும் போட்டு, படித்து, தேர்ச்சி பெற்று வந்து விடுகிறார்கள். உரிய வயது வந்தவுடன் திருமணமும் செய்துகொண்டு வாழ்க்கையில் எதிர்நீச்சல் போடுகிறார்கள். சிலர் இந்தக் கஷ்டங்களையெல்லாம் பார்த்து விட்டு கல்யாணமே வேண்டாம் என்று இருந்து விடுபவர்களும் இருக்கிறார்கள்''

என்று புன்னகைக்கிறார்கள்.

''அப்படியானால் தப்பித் தவறி இந்த வேலைக்கு வந்து மனநிம்மதியில்லாமல் தவிக்கிறீர்கள், இல்லையா!'' என்றால் இல்லை என்ற பதில்தான் வருகிறது.

''மற்ற எட்டுமணி நேர அலுவலக வேலை என்றிருக்கும் பெண்களை விட நாங்கள் கஷ்டப்படுகிறோம் என்பது உண்மைதான். ஆனால் மனத்தூய்மையுடன், சின்சியராக வேலை செய்யும் எந்த ஒரு நர்ஸும் இதில் அலாதியான ஒரு மனநிறைவை அடைவாள்.

ஒரு மாதம் வார்டில் இருந்து விட்டு, அடுத்த வார்டிற்குப் போகும் நர்ஸின் கையைப் பிடித்துக் கொண்டு கண்கலங்கும் நோயாளிகளைப் பார்க்கும்போது, 'இது தானே உண்மையான அன்பு?' என்று மனம் நெகிழும்.

நோயுற்றவர்களுக்குத்தான் பரிவும், அன்பும் தேவை. அந்தச் சமயத்தில் அவர்களிடம் காட்டும் அக்கறையை எந்த ஒரு மனிதனும் மறக்க மாட்டான். நோயாளிகளைக் கவனித்துக் கொள்வதில் முதலிடத்தை நர்ஸ்தான் பெறுகிறாள். எனவே அவள் உண்மையான அக்கறையுடன் பணியாற்றும் போது அவளுக்குக் கிடைக்கும் மனநிம்மதியை இந்த உலகம் முழுவதும் தேடினாலும் கிடைக்காது....''

என மனம் நெகிழ இவர்கள் கூறுவது உண்மைதான். அதனால்தானே இந்தச் செவிலியர் பணியைப் புனிதமான பணி என்கிறார்கள். இதனால்தானே அன்னை தெரஸா மக்களின் மனதில் நீங்காத இடத்தைப் பெற்றிருக்கிறார்.

இவர்களின் மீது பலர் பலவிதக் குறைகளைச் சொல்வது உண்மைதான். முதலில் இந்தத் தொழிலுக்கு வந்தவுடன் உற்சாகமாக உழைத்தாலும், நாளா வட்டத்தில் சரியாகக் குடும்பத்தைக் கவனிக்க முடியவில்லை, வேலைக்கு வந்தாலும் நோயாளிகளின் முனகல், மருந்துகளின் நெடி எனப் பார்க்குமிடமெங்கும் துயரங்களின் சாயலையே இருக்கும்போது இவர்கள் சிடுசிடுப்பாகி விடுகிறார்கள்.

இருந்தாலும் தாங்கள் ஏற்றுக் கொண்டிருப்பது ஒரு புனிதமான பணி என்பதையும், பெண்மைக்கே உரிய கருணை, அன்பு, இரக்கம், பொறுமை இவற்றையும் கைக்கொண்டார்களானால் இவர்களிடம் இருக்கும் அவப்பெயர் நீங்கும்.

''எங்களை ஒரேயடியாக அப்படிப் புறக்கணித்து விடாதீர்கள். எங்களுக்கும் ஒரு மனிதன் படும் துயரைக் கண்டு சந்தோஷமாகவா இருக்கும்? அல்லது வேண்டுமென்றே சத்தம் போடுகிறார்களா! சிலர் சில சமயங்களில் அப்படி நடந்து கொள்ள வேண்டியதாக உள்ளது.

ஒரு வார்டில் நாற்பதிலிருந்து நூறு படுக்கைகள் வரை இருக்கும். அவற்றிலுள்ள நோயாளிகள், அவர்களின் உடைமைகள், வார்டிலுள்ள மருந்து மாத்திரைகள், மற்ற உபகரணங்கள் அனைத்திற்கும் அந்த வார்டின் நர்ஸ்தான் பொறுப்பு. ஏதாவது என்றால் முதலில் நர்ஸ்தான் பொறுப்பாகிறாள். இப்படிப்பட்ட நிலையில் வார்டின் பாதுகாப்புப் பொறுப்பையேற்றிருக்கும்

பூக்கிண்ணத்தில் அழகு தெரிய...

இலை
மலர்களைப் பறிக்கும்போது
களுடனும், பெரிய கிளையுடனும் கூடிய
தாகப் பார்த்துப் பறிக்க வேண்டும்.
மலர்களையும் இலைகளையும் நன்றாகக்
கழுவவும்.
மலர்களும், இலைகளும் பூக்கிண்
ணத்தை மறைக்கக் கூடாது.
மலர்க் கிளைகளும், இலைக் கிளைகளும்
ஒன்றுக்கொன்று கிராஸ் செய்யுமாறு
அமையக் கூடாது.
பலமாகக் காற்று அடிக்கும் இடங்
களில் பூக் கிண்ணம் வைக்காதீர்கள்.

நர்ஸ் கவனமாக இருப்பதில் என்ன தவறு இருக்க முடியும்?''

என்று சூடாகக் கேட்கிறார்கள்.

''அம்மா, நான் எழுந்திருக்கறதுக்கு முன்னாடியே அப்பா போயிடறார், ராத்திரி தூங்கிட்டப்புறம் வர்றார். அப்பாவைப் பார்த்தே ரொம்ப நாள் ஆச்சு, எப்படிம்மா இருப்பார் அப்பா'' என்று ஒரு குழந்தை கேட்பது போல ஒரு துணுக்கைப் படித்திருக்கிறேன். அல்லது பொறுப்பில்லாத தந்தையைப் பற்றியும் அப்படிச் சொல்வதுண்டு. ஆனால் பெற்ற தாயே அப்படிப்பட்ட நிலையில் வேலை செய்ய வேண்டியவளாகிறாள். இங்கே கடமைக்காக ஓடும் இந்த நர்ஸ்களின் வாழ்க்கை அவசரமயமானது. நேரம் —

அது இவர்களைப் பொறுத்தவரை கிடைக்காத ஒன்று!

ஜெயசக்தி பைனான்சியர்ஸ்

கவர்ச்சிகரமான வட்டி விகிதங்களில் பிக்சட் டெபாசிட்டுகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன

1-வருடம்	2-வருடங்கள்	3-வருடங்கள்	5-வருடங்கள்
17%	18%	19%	22%

நான்கு ஆண்டுகளில் 'சுமங்கலி டெபாசிட் திட்டத்தில்' தங்கள் முதலீடு இரட்டிப்பாகிறது ரூ. 5000/ம் அதற்கு மேலும் டெபாசிட் செய்பவர்களுக்கு ஒரு அழகிய 'வெள்ளி குத்து விளக்கு' அன்பளிப்பாக வழங்கப்படும்

ஜெயசக்தி சிட்ஸ் & பைனான்ஸ் பி. லிட்.

எமது புதிய குருப்புகள்

மாதங்கள்	அங்கத்தினர்கள்	சந்தா தொகை	சீட்டு மதிப்பு
40	40	250	10,000
40	40	125	5,000
25	25	2000	50,000
25	25	1000	25,000
20	20	500	10,000
20	20	250	5,000
20	20	100	2,000

ஏல முறை: காப்புத் தொகையுடன் பகிரங்க ஏலம்.
'காப்புத் தொகை' ஏலத்தன்றே திருப்பித்தரப்படும்.

முதலீடு செய்ய, சீட்டுகள் சேர, தொடர்பு கொள்க:

நிர்வாக அலுவலகம் : 39, நடேச ஐயர் தெரு, 2வது மாடி
(சிவா-விஷ்ணு கோயில் அருகில்)
உஸ்மான் ரோடு, தி. நகர், சென்னை-600 017 போன் : 447186

பெங்களூர் : 24/1-A, மார்கோசா ரோடு (10வது கிராஸ்) மல்லேஸ்வரம், பெங்களூர்-560 003 போன் : 366971
தஞ்சாவூர் : எண் : 2 & 3, முதல் மாடி, ஜீ.ஏ. கனால் ரோடு, தஞ்சாவூர். போன் : 1626
திருவண்ணாமலை : 14/A, ஆனைக்கட்டி தெரு, திருவண்ணாமலை-606 601. போன் : 483
பட்டுக்கோட்டை : 9-A, தலையாரி தெரு, பட்டுக்கோட்டை. போன் : 453

C.A. BALOO Managing Director

ஜெயசக்தி — நம்பிக்கைக்கு பெயர் பெற்றது

CHARI

பெண் குலத்திற்கோர் வழிகாட்டி!



உலகத்தை யெல்லாம் தன் குரலாலே மயங்கச் செய்து, பக்தியுணர்விலே ஆழச் செய்து, இறைவனுடன் இரண்டறக் கலக்கும் அனுபவத்தைத் தந்து... தான் மட்டும் அடக்கமே உருவாக, தமிழ்ப் பெண்மைக்கே உரிய அன்பும், அருளுமாக... இத்தனைக்கும் பாத்திரமாக விளங்குபவர் எம். எஸ். என்று எல்லோராலும் அன்புடன் அழைக்கப்படும் திருமதி எம். எஸ். சுப்புலட்சுமி!

இத்தனை பண்புகளுக்கும் மேலே அவரிடம் சிறப்புடன் குடிகொண்டிருக்கும் குணம் தயாள குணம். இவர் தன் கச்சேரிகளின் மூலமும், பாடல்கள் அடங்கிய ரெகார்டுகளின் மூலமும் அள்ளி வழங்கிய கோவில்கள் தான் எத்தனை! வளமடைந்த நிறுவனங்கள்தான் எத்தனை! திருப்பதி தேவஸ்தானம் முதல், ஜவஹர்லால் நேரு மெமோரியல் ஃபண்ட் வரை எத்தனையோ!

அள்ளிக் கொடுப்பவர்களுக்கு மீண்டும் மீண்டும் தரவேண்டும் என்ற அவாவை அடக்க முடியாது போலும். மீண்டும் அந்தத் தாகம் எழுந்திருக்கிறது, திருமதி எம். எஸ்.ஸிற்கு!

காஞ்சித் தவ முனிவர் சந்திர சேகரேந்திர சரஸ்வதி சுவாமிகளின் அத்யந்த பக்தர் டாக்டர் பத்ரிநாத். முனிவரின் ஆசியோடும், பத்ரிநாத்தின் அயராத உழைப்போடும் இன்று இந்தியாவின் தலைசிறந்த மருத்துவ மனைகளில் ஒன்றாகத் திகழ்வது சென்னையிலுள்ள சங்கர நேத்ராலயா. ஆயிரக் கணக்கான துயருறும் நோயாளிகளின் துயர் தீர்க்கும் நிறுவனமாக விளங்கும் இக் கண் மருத்துவ மனையின் வளர்ச்சிக்காகத் தேவையான பொருள் வசூலிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்காகப் பாரதியார் பாடல்களடங்கிய நீண்ட நேர மூன்று எல்.பி. ரிகார்டுகளையும், மூன்று மாபெரும் கச்சேரிகளையும் செய்யத் திட்டமிட்டுள்ளார். இதன் ராயல்டி தொகை முழுவதும் சங்கர நேத்ராலயாவிற்குச் செல்கிறது. செப்டம்பர் 10ம் தேதி பம்பாய் ஷண்முகாநந்தா ஹாலிலும், பின்னர் கல்கத்தா, டெல்லியிலும் அவருடைய கச்சேரிகள் நடக்கவிருக்கின்றன.

கானக் குயிலின் கருணாமிர்தமான இசை ரசிகர்களின் பரவசத்திற்குக் கேட்பானேன்! தனக்கென வாழாது, சமூகத்துக்காகத் தன் குரல் மூலம் மாபெரும் தொண்டாற்றி வரும் இந்தப் பெண்மணியைப் பெண் குலத்திற்கோர் வழிகாட்டி என்று சொன்னால் அது மிகையில்லையே! — எம்.ஆர்.

புதிய ஊர், புதிய வீடு, புதிய உறவு, புதிய பாஷை சின்னுவுக்கு மறுபிறவி எடுத்தாற்போல இருந்தது. பாஷை தெரியாமல், கடைக்குப் போய் ஒரு கிலோ அரிசி ஒரு நெருப்புப் பெட்டி வாங்குவதற்குக் கூட கணவன் ஆபீஸிலிருந்து வரும் வரை காத்திருக்க வேண்டியிருந்தது. எதிர்த்தாற்போல் இருந்த ஃப்ளாட்டுக்காரர்கள் எல்லோரும் யார் என்றே தெரியவில்லை. எல்லோரும் அவளை விரோதமாகப் பார்ப்பது போலிருந்தது. சமையல் பண்ணத் தெரிந்திருந்தாலும் முதல் முதல் உப்புப்போடும் போதெல்லாம் தயக்கமாக இருந்தது. ப்ரெஷர் குக்கர் சப்தம் போடுவது பயமாக இருந்தது. காலை கேட்கும் இந்தி சப்தங்கள் பயங்கரமாக இருந்தது. கார் ஹார்ன் ஸ்கூட்டர் சப்தம் எல்லாமே அச்சமளித்தது. உறவுகளைப் பிரிந்த துக்கத்தில் பாரம் வேறு நெஞ்சு பூராவும் கனத்தது. ஒன்பதுக்கு ராமச்சந்திரன் ஆபீஸ் கிளம்பி தன்னை மிகத் தனிமையில் விட்டுப் போவது அச்சுறுத்தியது. அழவேண்டும் போல இருந்தது.

சின்னுவுக்கு அந்த ஆரம்ப நாட்களில் டில்லி என்பது ஒரு சன்னல்தான். அதன் வழியே பார்க்கும் போது எதிர்வீட்டில் டெலிவிஷன் கம்பி தெரியும். தோளில் துண்டைப் போட்டுக் கொண்டு இரண்டு மலையாளப் பையன்கள் துரத்தி விளையாடுவது தெரியும். அந்தப் பக்கம் சிவப்பாக ஒரு பஞ்சாபிப் பெண் மார்பு மூடாமல் நிற்பதும் தெரிய சர்தார்ஜி சைக்கிள் கடை வைத்திருந்ததும் அதில் தொங்கும் ட்ரான்ஸிஸ்டரும் அழகழகாக குழந்தைகள் வெள்ளை கவுனும் இடுப்பில் சிவப்பு பெல்ட்டும் அணிந்து கொண்டு அதிகாலையில் பள்ளிக்குச் செல்வதும் ''பாட்டில்ஜி'' என்று பால்காரன் கைவண்டியில் பாட்டில் பால் கொண்டு வருவதும் ஒரு தாத்தா போர்த்தி கொண்டு நடந்து போவதும் பெரிசு பெரிசாக எருமைகள் நல்லாவின் அருகில் கட்டியிருப்பதும் எல்லாம் அந்த சன்னல் வழிதான் டில்லி. ராமச்சந்திரன் வரும்வரை இருக்கிற வீட்டைத் திருப்பித் திருப்பி சுத்தம் பண்ணிக் கொண்டிருப்பாள். கட்வாலிப் பெண் ஒன்று பாடிக்கொண்டே தரை துடைக்க வரும். அதன் ஹிந்தி அவளுக்குப் புரியாவிட்டாலும் ஏகப்பட்ட நகைகள் ஒலிக்க ஏதாவது பேசிக்கொண்டே இருக்கும்.

சின்னுவுக்கு தன் கல்யாணத்தின் அர்த்தமே புரியவில்லை. தன்பாட்டுக்குச் சந்தோஷமாக இருந்தவளை சட்டென்று பேசி முடித்து பார்ஸல் பண்ணி டில்லிக்கு அனுப்பிவிட்டதில் ஒரு துரோகம் இருந்தாற்போலத்தான் தோன்றியது. ராமச்சந்திரன் என்பவன் அவன் வந்து சேர்ந்த கணத்திலிருந்து வீடு வாசல் வேலை போல மனைவி என்கிற ஒரு சொத்தையும் ஏற்றுக்கொண்டு தனக்குள் அனுமதித்துக் கொண்டு காலை பிரிந்து சாயங்காலம் திரும்பி வந்தால் வாசலில் நிற்க வேண்டியவள் என்கிற ஒரு அர்த்தத்தில்தான் அவளை கவனிப்பதாகப் பட்டது. ஞாயிற்றுக்கிழமை வெளியே போவது கூட ஒருவாறு மிஷின்தனமாக இருந்தது. காலை கொஞ்சம் நேரம் கழித்து எழுந்திருந்து மெஸ்ஸில் போய் இட்லி சாம்பார் வாங்கி வந்து புத்த ஜெயந்திபார்க் அல்லது நேரு பார்க் ஏதாவது புல்வெளிக்கு கடமை போலச் சென்று அங்கே கொஞ்ச நேரம் அதிகம் பேசாமல் உட்கார்ந்திருந்துவிட்டு போலாமா என்று கிளம்பி யாராவது நண்பர்கள் வீட்டுக்குச் சென்று அங்கே இவள் மற்றொரு சின்னுவிடமும் அவன் மற்றொரு ராமச்சந்திரனுடனும், பேசிவிட்டு மறுபடி 'போலாமா!' அதன்பின் இண்டியாகேட்டில் அல்லது ஏதாவது இடத்தில் உலாவி ராத்திரி ஏழுமணிக்குள் வீட்டுக்கு வந்து சேர்ந்து கொண்டிருக்கும் போதே ராத்திரி படுத்து கொள்வதற்கான உத்தேசங்களைரகசியமாக பேசிக் கொண்டு — சின்னுவுக்கு இதில் எல்லாம் வெறுப்பு என்றில்லை. ஆனால் கொஞ்ச நாள் போனால் வெறுப்பு வந்து விடும்தான்.

ராமச்சந்திரன் ஆபீஸ் விஷயமாக நிறைய பேசினான். எச். ஆர். ஏ. அரியர்ஸ், மல்ஹோத்ரா போன்ற வார்த்தைகள் எல்லாம் கேட்டுக்கேட்டு சின்னுவுக்கு அத்துப்படியாகி விட்டது. ரீடர்ஸ் டைஜஸ்ட் படி, உன் நாலெட்ஜ் இம்ப்ரூவ் ஆகும் என்றான் ராமச்சந்திரன். எதிலும் ஒரு ஒழுங்கு உள்ளவன் காலை ஷேவ் செய்து ப்ளேடை அதன் கூர் மழுங்காமல் அலம்பி வைப்பது நாசுக்காக இருக்கும். ஹிந்துஸ்தான் டைம்ஸை சரியாக மடித்து வைத்துக் கொண்டு சரியான வெளிச்சத்தில் படிப்பான். ஷேர்களைப் பற்றி கொஞ்சம் பேசுவான். டி.டி.ஏ. யில் ஒரு ஃப்ளாட்டுக்கு மனு போட்டிருப்பதால் டி. டி.ஏ. பற்றி என்ன வந்தாலும் சின்னுவைக் கூப்பிட்டு படித்துக்காண்பிப்பான்.

இரவு படுத்துக் கொள்ளும் போது அவளை இன்றைக்கு பத்திரமான நாளா என்று

எப்போதும் பெண்

சுஜாதா



விசாரித்து விட்டுத்தான் தொடுவான். இல்லையெனில் சட்டென்று அந்தப் பக்கம் திரும்பிக் கொண்டு விட்ட சற்று நேரத்தில் குறட்டைவிட்டு தூங்கிப் போய்விடுவான் மறுநாள் காலை பிளேடு அலம்பவும் இந்துஸ்தான் டைம்ஸைப் பிரித்துக் கொள்ளவும்.

சின்னுவுக்கு இந்த நாட்களில் எல்லாம் அழுகை வந்தது. 'போர்' அடிக்கிறது என்று ஒரே ஒருமுறை ராமச்சந்திரனிடம்சொல்லபோய் அதற்காக கோபித்துக் கொண்டு ராத்திரி வரை பேசாமல் இருந்தான். கல்யாணம் ஆனபின் அதுதான் முதல் தடவை. நான் என்ன சொல்லிவிட்டேன் என்று சின்னுவுக்கு ஆச்சரியமாக இருந்தது. நேரம் போவது அவளுக்கு பிரச்சினையாக இருந்தது. ஒருமுறை கண்ணாடியில் பார்த்துக் கொண்ட போது திடுக்கிட்டாள். நிறைய சதைபோட்டு மாமிபோல ஆகிவிட்டாற் போல இருந்தது.

படுக்கை அறையைப் பார்த்து பயமாக இருந்தது. சன்னல் திரைகளும் அப்பா வாங்கிக் கொடுத்த மெத்தையும் 'ஸ்வீட் ட்ரீம்ஸ்' என்று எம்ப்ராய்டரி போட்ட தலையணை அதில் லேசான வாசனையும் லேசான எண்ணெக் கறையும் தினத்தின் கடைசி சரண். தினம் தினம் இரண்டுபேரும் கடமை போல வந்து படுத்துக்கொள்ள வேண்டிய களம். கேட்டும் கேட்காமலும் வந்து எல்லாவற்றையும் பரிசோதனை பார்க்கும் களம். அஞ்சு வருஷத்துக்குக் குழந்தை பெத்துக்கக் கூடாது என்று சொல்லியிருந்தான். அஞ்சு வருஷம் என்பது மலைப்பாக இருந்தது. அடுத்த சம்மருக்கு காஷ்மீர் போவதற்கு இப்போதே எல்.டி.ஸி. எல்லாம் போட்டிருந்தான் உற்சாகமாக. சுமாரான போட்டுக்கு எத்தனை மட்டக் குதிரை சவாரி எத்தனை என்று அடிக்கடி கணக்கைப் போட்டாலும் சின்னுவுக்கு அங்கே போயும் இதே தான் என்று மலைப்பாக இருந்தது. இதுநாள் வரை அவளுக்கு நிஜமான சந்தோஷம் இல்லை என்று தான் சொல்ல வேண்டும். இரண்டு பேரும் ஒருவரை ஒருவர் அடையாளம் கண்டு கொள்ளவில்லை. ராமச்சந்திரன் செய்யும் சில சின்னச்சின்ன விஷயங்கள் அவளுக்கு ரொம்பப் பிடித்திருக்கும். திடீர் என்று அவள் காலை எடுத்து தன் மடிமேல் வைத்துக் கொண்டு நகங்களை ஆராய்வான். ரொம்பப் பிடித்திருக்கும். கல்யாணம் என்பது இயல்பான உறவைக் கொச்சைப் படுத்தி கடமையாக்கி விடுகிறது. மென்மையான உணர்ச்சிகள் எல்லாம் கடமை என்பதில் உறைந்து போய் மனைவிக்கு ஏதோ விலைபோன மாதிரி ஏமாற்றமும் இருந்தது. ஆரம்ப நாட்களில் ஆண் பெண் என்கிற நிலையால் இருந்த கவர்ச்சிகரமான சந்தேகங்களும் ஆறு மாசத்தில் தீர்ந்து போய்விட்ட பின் எஞ்சியிருப்பது ஒரு விதமான சரணாகதிதான். உடல் உறவில் இருந்த பயமும் குற்ற உணர்ச்சியும் விலகிப் போய் விட்டாலும் சில தினங்களின் ராத்திரிக் கணங்களை அவள் அனுபவிக்கவில்லை என்று சொல்ல முடியாது. இந்த தினங்கள் மிகவும் அரிதாகத்தான் இருந்தன. குழந்தை டயம் அதனாலே பற்பல கட்டுப்பாடுகள் அவையெல்லாம் இல்லாமல் ஒன்றிரண்டு நாட்கள்: இருவரும் ராமச்



சந்திரன் சின்னு என்றில்லாமல் ஒரு ஆண் ஒரு பெண் என்று மட்டும் உறவாடும் போது சின்னுவுக்கு பூர்ணமாக ஆனந்தம் இருந்ததுதான் இருப்பினும் உடல் சம்பந்தம் என்பது அவர்கள் உறவின் மொத்தபிம்பத்தின் ஒரு பகுதிதான். மற்றதெல்லாம் கொஞ்சம் பாலை நிலம் போலத்தான் இருந்தது.

இதனால் அவள் எதிர்ப்புக் குரல் தெரிவிக்க ஆரம்பித்தாள் என்றில்லை. எப்படியோ அவள் வளர்ந்தவிதமும் வம்சமும் அந்த விதியை முழுவதும் ஒப்புக்கொள்ளும் தகுதியை அவளுக்கு அளித்திருந்தன. எப்போதாவது அம்மாவுக்கு இன்லண்ட் லெட்டர் எழுதும்போது கண்ணீர் வருவதைத் துடைத்துக் கொண்டு எழுதுவாள். ஆனால் இங்கு இவர் சௌக்கியம் போனவாரம் ஆக்ரா மதுரா போயிருந்தோம். ரொம்ப நன்றாக இருந்தது. எப்பப் பார்த்தாலும் 'சின்னு சின்னு' என்று அன்பாக இருக்கிறார் இத்யாதி...

மனசுக்குள் இருந்தாலும் சொல்லக்கூடிய அளவுக்கு யாரும் அவளுக்கு நெருக்கமில்லை.

> **பூ அலங்காரம் செய்பவர்களுக்கு...**
>
> பொதுவாக அழுத்த நிறப் பூக்கள் அடிப்புறமாகவோ அல்லது நடுப்புறமாகவோ இருக்கலாம். அதே போல் மெல்லிய நிற மலர்கள் மேற்புறமாகவும், ஓரங்களிலும் அமையலாம். சில சமயங்களில் வெள்ளை மலர்களை நடுவிலோ அல்லது இணைப்பு மலராகவோ பயன்படுத்தினால் அழகு கூடித் தெரியும்
>
> —லட்சுமி

ஒருவேளை மது வீவுக்கு வந்தால் சொல்லுவாளோ என்னவோ.

ராமச்சந்திரனுடன் முதன் முதலாக பெரிய சண்டையும் போட்டாகி விட்டது. பனியனில் இங்க் கறை பட்டிருந்ததை சரியாகத் தோய்க்கவில்லை என்று கோபப்பட்டான். சின்னு இங்க் கொட்டும் பேனாவைத் தூக்கி எறியச் சொன்னாள். 'உங்களால் முடியும். உங்கப்பா ரொம்பப் பணக்காரர்'' என்றான். ''கேலிப் பண்ணுவதாக இருந்தால் என்னைப் பண்ணுங்கள் எங்கப்பாவை வேண்டாம். நாங்கள் எல்லாம் ஏழைதான் அதைக் குத்திக் காட்ட வேண்டாம்'' என்றாள். ''இன்றிலிருந்து நானே பனியனைத் துவைத்துக் கொள்கிறேன்'' என்றான். உங்க இஷ்டம் என்றாள். அந்த கட்வாலி பெண் புரியாமல் புரிந்து இந்த சண்டையைப் பார்த்துக் கொண்டிருக்க அவளைச் சத்தம் போட்டு துரத்தினான். அதற்கு சின்னு சிரித்தாள் என்று கோபம் அதிகமாகி சிரிக்கிறதா இருந்தா உங்க வீட்டிலே வெச்சுக்கோ, என்றான், சரி என்னை அனுப்பிச்சிருங்கோ என்றாள். இன்னைக்கே டிக்கெட் வாங்கிண்டு வரேன் என்னிக்குப் போகணும் என்றான். இன்னைக்கே டிக்கெட் கிடைச்சாலும் போறேன்என்றவுடன் விருட்டென்று சட்டைபையில் தெரிகிற மாதிரி நோட்டுக்களைத் திணித்துக் கொண்டு புறப்பட்டான். எனக்கு சமையல் பண்ண வேண்டாம். வெளியில் சாப்பிட்டுக் கொள்கிறேன் என்றான். சென்றான். சின்னுவுக்கு பயமாகவும் அழுகையாகவும் சிரிப்பாகவும் இருந்தது. முதன் முதலில் இருவரும் தத்தம் அலுப்புக்களை வெளிப்படுத்துகிறார்கள். கல்யாணம் என்பதில் எதிர்பார்த்ததற்கும் நடப்பதற்கும் இருந்த வித்தியாசங்களின் ஏமாற்றத்தை காட்டுகிறார்கள். சின்னுவுக்கு அம்மா சொன்ன புத்திமதியெல்லாம் ஞாபகம் வந்தது. இருந்தாலும் முதன் முறையாக கணவனை எதிர்த்துப் பேசியது நியாயம்தான் என்று மனசாட்சி சொன்னது. அதற்கு தனக்குள் பற்பல காரணங்கள் சொல்லிக் கொண்டாள்.

என்னை இப்படி ஜெயிலில் போட்ட மாதிரி வெச்சிண்டிருந்தா இப்படித்தான் ஆகும் அன்னிக்கு ஒரு கவர் வாங்கி வரச்சொன்னேன். எத்தனை நாளாச்சு? ஏழுநாள்! உனக்கு மட்டும் அம்மாவுக்கோ மத்தவாளுக்கோ எழுதறதுன்னா உடனே உடனே கவர் வாங்கிண்டு வரதா? குக்கருக்கு காஸ்கெட் போடணும்னு எத்தனை நாள் சொல்லிண்டு வரேன். உன் ஸ்கூட்டர் ரிப்பேரானா உடனே போறயே? நான் மட்டும் பூச்சியா? ஒருவேளை டிக்கெட் வாங்கிக் கொண்டுவந்து விடுவானோ. இல்லை மன்னிப்பு கேட்கச் சொல்லுவான். ம்ஹூம். மாட்டவே மாட்டேன். என்ன தப்பு செய்து விட்டேன். இங்க் கறையை என்னால் அகற்ற முடியவில்லையென்றால் நான் என்ன பண்ண முடியும்? நான் என்ன லாண்டரியா வைத்து நடத்துகிறேன். என்ன ஆனாலும் ஆகட்டும் மன்னிப்புக் கேட்க மாட்டேன். ஊருக்குப் போ என்றால் போக வேண்டியதுதான். நீ சென்னைக்கு வந்து மன்னிப்பு கேட்டு என்னைத் திருப்பி அழைத்துச் செல்கிறவரை அங்கேதான் இருப்பேன். எனக்கு மட்டும் பிடிவாதம் கூடாதா? பார்த்துவிடலாம்!

சாயங்காலம் கணவன் வருகிற ஸ்கூட்டர் சப்தம் கேட்டுக் காப்பியை வாசல் அறையில் வைத்து விட்டு உள்ளே போய் விட்டாள். அவன் வந்து சட்டை மாற்றிக்கொண்டு முகம் கழுவிக் கொண்டதெல்லாம் கேட்டது. காப்பி சாப்பிடுகிறார் என்று எட்டிப் பார்த்தாள்.

''காப்பி சாப்பிட்டாச்சு. எனக்கு வேண்டாம்.'' என்றான். அதை எடுத்துக்கொண்டு சென்றாள்.

''டிக்கெட் என்னிக்கு வாங்கியிருக்கு?'' என்றாள். அவன் அவளருகில் வந்துகையைப் பிடித்து ''என்னை மன்னிச்சுரு சின்னு'' என்றான்.

(தொடரும்)

சொல்ல விரும்புகிறோம்





படித்த ஒவ்வொரு வாசகரையும் மிகவும் பரவசமடையச் செய்த நல்லதொரு கருத்தாழத்துடன் கூடிய சிறந்ததொரு குறுநாவலான ''மனதிற்கு எத்தனை முகங்கள்!'' படித்து மகிழ்ந்தேன்.
வி. ஜானகி சென்னை—5.

அரவிந்தனின் 'மனதிற்கு எத்தனை முகங்கள்' குறுநாவல் மனித குலத்திற்கே அட்வைஸ் சொல்லுகின்ற ஒரு அற்புத நாவல். தியாகுவை போன்று முன்யோசனையின்றி அவசரப்படும் குடுகுடுப்பைக்காரர்களுக்குச் சரியான பாடம் கற்பிப்பது மட்டுமல்ல: காதல் என்றால் என்ன என்பதையும் துல்லியமாகச் சுட்டிக் காட்டுகிறது.
ஏ. கணேசன் பம்பாய்—58.

பரிசுக்குரிய கட்டுரைகளில் பிரசுரத்துக்கு உரியதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட திருமதி ஈஸ்வரியின் (அத்தாழ நல்லூர்) கட்டுரை உள்ளத்தை மிகவும் அலைக்கழிக்கச்செய்து விட்டது. அப்பப்பா... சில பெண்கள்தாம் எவ்வளவு கண்ணீர் விடுகிறார்கள்? சில ஆண்கள் ஏன் இப்படிக் கல்நெஞ்சக்காரர்களாக இருக்கிறார்கள்? சகோதரி அடுத்த ஜன்மத்தில் பெண்ணாகவே பிறக்க வேண்டாம் என்று ஆண்டவனை வேண்டிக் கொள்கிறேன்.
சீதா ராஜகோபாலன் சென்னை—92.

குமாரி பார்வதியின் நடனத்தைப் பார்க்க எங்களுக்குக் கொடுத்து வைக்காவிட்டாலும் அவர் அட்டைப் படத்துக்காகப் பிடித்த அபிநயத்தைப் பார்த்த போதே அவரின் நடனம் எப்படி இருக்கும் என்பதை கற்பனை செய்து பார்த்து மகிழ்ந்தேன். படத்தை எடுத்தயோகாவுக்கு சபாஷ்.
லட்சுமிகாந்தம் வேலூர்.

'சங்கு கோலமும்': ''புருடென்ஷியல் கப் கோப்பை'' கோலமும் போட்டுப்போட்டு பழகிவிட்டேன். ஆகஸ்ட் 15—ஆம் தேதி (இந்த வருடம்தான்) வீட்டு வாசலிலே இவைகளை அரங்கேற்றிடத்திட்டமும்போட்டுவிட்டேன்.
திருமதி. நாராயண ராவ் வியாசநகர் காலனி,

''ரொம்ப நாளாக ஒரு மனக்குமுறல்'' கட்டுரை, வாசகர் உள்ளங்களையும் ''குமுறும்படிச் செய்துவிட்டது! ''வரதட்சிணை'' என்ற பெயரில் இளம் பெண்களை விலைபேசும் சமூகக் கொடுமைகளுக்கு 'தாயுள்ளம்' தவழ வேண்டிய 'பெண் இனமே' உடந்தையாக இருப்பது வேதனைக்குரியது.

சமூகக் கொடுமைகளால் 'புரையோடி'க் கொண்டிருக்கும் இந்த சமுதாயச் சாபக்கேட்டிபுனை, சமீபத்தில் மத்திய அரசு நிறைவேற்றிய ''பெண்கள் பாதுகாப்புச் சட்டத்தால் பல விருக்கும் என நம்புவோமாக!
ஏ. வாஜெனிதாசன் மதுக்கூர்.

தம்முடைய பெண்களுக்கு சுயசிந்தனையும், துணிவும் இல்லாத காரணத்தால் தான் இத்தகைய வரதட்சிணைக் கொடுமைகள் நாட்டில் பரவலாக நடக்கின்றன! கணவன் ஒரு கொடுமைக்காரன், அவனால் தனக்குப் போதிய பாதுகாப்பு இருக்காது என்று தெரிந்தவுடன் அவனிடமிருந்து விலகி தனித்து வாழக்கூடிய மன உறுதி நம் நாட்டுப் பெண்களுக்கு இருப்பதில்லை. குண்டு சட்டிக்குள்ளேயே எத்தனை நாளைக்குத்தான் இவர்கள் குதிரை ஓட்டப் போகிறார்களோ தெரியவில்லை.
சி. பி. ராஜூ கல்பாக்கம்.

உஷா சுப்பிரமணியத்தின் 'பெண்ணே இது உன் வாழ்க்கை' அருமையான தொடர். இவ்வளவு விரைவில் இதை முடிப்பீர்கள் என எதிர்பார்க்கவில்லை. மனம் நொந்த, மாறுபட்ட எண்ணம் கொண்ட, குற்றம் காணும் எண்ணம் உள்ள என்று எந்த வகைப் பெண்ணாக இருந்தாலும் இதுபோன்ற கருத்துள்ள கட்டுரைகளை படித்தால் கண்டிப்பாகப் பலன் இருக்கும்.
பி. ப. கமலா சுந்தர் கொச்சி—16.


PHOTO
news



புகழ்பெற்ற நடனக் கலைஞர் திரு கிட்டப்பா பிள்ளையின் சிஷ்யை என்பதை மீண்டும் நிரூபித்து விட்டார், குமாரி ஸ்ரீவித்யா நடராஜன். இவருடைய அபிநயத் திறனை ஏற்கனவே பலரும் பாராட்டியிருந்தாலும் சென்ற மாதம் நடந்த நடன நிகழ்ச்சியில் மேலும் மெருகேறியிருக்கிறார். எதிர் காலத்தின் சிறந்த நடன மணிகளுள் இவரும் ஒருவராகப் பிரகாசிப்பார் என்பதில் ஐயமில்லை.



நெல்லை மாவட்டத்தில் இசைக்குயில்களாகப் பவனி வருகிறார்கள் இளம் வயதுச் சகோதரிகள் குமாரி சிவகாமியும், செல்வியும். இசையில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்ட தந்தை துரைசாமியின் ஊக்கத்தால் மேடைக் கச்சேரிகளின் மூலம் வேகமாக முன்னுக்கு வந்துகொண்டிருக்கிறார்கள்.



மண்ணெண்ணெய் ஸ்டவ்விலேயே புது விதமான ஸ்டவ் ஒன்றினை அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள் 'ஷீட்வெல்' நிறுவத்தினர். இதில் 30 சத எண்ணெய் மிச்சமாவதுடன் பம்ப் செய்ய வேண்டிய அவசியமுமில்லை. பம்ப் ஸ்டவ்விற்கே உரிய பாதுகாப்பற்ற தன்மைகளிலிருந்து பெண்களுக்கு விடுதலை அளிக்கிறது இந்த 'ஷீட்வெல்' ஸ்டவ். இப்போது சூபர் மார்க்கெட்டுகளில் கிடைக்கிறது.



கூட்டுப் பிரார்த்தனை மூலம் பல அரிய சாதனைகளை நிகழ்த்த முடியும் என்று நிரூபித்திருக்கிறார்கள் குரோம்பேட்டை மாதர் சங்கத்தினர். ஸ்ரீ ராமர் ஆலயமொன்றில் நிர்மாணப் பணிகள் பாதிக்கப்பட்டபோது இருபது நாட்கள் பிரார்த்தனை செய்தார்களாம். எதிர்பாராத இடத்திலிருந்து பண உதவி வந்து சேர்ந்தது. அதிலிருந்து இந்த வழிமுறையைக் கையாளும் இவர்களின் மற்ற சேவைகள் – ஒவ்வொரு நாளும் ஒவ்வொருவர் இரண்டு ஏழைக் குழந்தைகளுக்கு உணவளிப்பது, விசேஷ நாட்களில் ஏழைகளுக்குத் துணி மணிகள் வழங்குவது, தங்கள் பேட்டையின் எந்தப் பிரச்னையையும் தீர்க்க முந்துவது, அடிக்கடி தரும் ரத்த தானம்!

சென்னை சைதாப்பேட்டை தாடண்டர் நகரப் பெண்மணிகள் தங்களுக்கென்று ஒரு மாதர் சங்கத்தையும், குழந்தைகள் காப்பகத்தையும் ஏற்படுத்திக் கொண்டனர். விழாவிற்கு அமைச்சர் திருமதி கோமதி சீனிவாசன் வருகை தந்தார்.




பாரதியும், தையல் மெஷினும்!

பாரதியும் உங்களைப்போன்ற ஒரு குடும்பத் தலைவிதான். வாங்கிய தையல் மெஷின் மூலையில் தூசி படியத் தூங்குகிறது. மெஷின் வாங்கும்போது தையல் பள்ளியில் சேர்ந்து, கற்று, கணவனின் உடைகள் முதல் எல்லாத் துணிகளையும் தானே தைக்கவேண்டும் என்ற வேகம் பாரதிக்கும் இருந்தது. உங்களை போலவே.



ஆனால் ஒரு குடும்பத் தலைவிக்குப் பள்ளியில் சேர்ந்து படிக்க நேரமா கிடைக்கிறது. பாரதி தையல் மெஷின் வாங்கியபின் இதுவரை வளரும் குழந்தைகளின் உடைகளை மாற்றி அமைக்கவும், சிறு சிறு உடைகளுக்கும் ஆன தையல் கூலியே மெஷின் விலையை எட்டிவிட்டது.




பாரதி தன் பள்ளித் தோழி ஆனந்தியிடம் இதைக் கூறி வருந்தினாள். பாரதியின் அடுத்த பிறந்த தினத்திற்கு ஆனந்தியின் பரிசு "10 எளிய பாடங்களில் வீட்டிலேயே தையல் கற்றுக்கொள்ளுங்கள்," என்ற ஆங்கிலப் புத்தகம்.

நிர்மலா தேசிகன் அளிக்கும் இப்புத்தகம் ஒரு உலகப் புகழ்பெற்ற தையல் மெஷின் ஸ்தாபனத்திற்காகப் பதிப்பாகி 10,000 பிரதிகள் விற்பனையாகி உள்ளது. இப்போது இதன் தமிழ்ப்பதிப்பு வெளிவரும் தருவாயில் உள்ளது.



தையல் மெஷினின் பாகங்கள், அவற்றைப் பேணும் முறை, தைக்கும் முறை, ஏன்! தையல் கலையையே 10 எளிய பாடங்களில் உங்களுக்கு அளிக்கிறது இந்தப் புத்தகம்.



பாரதியின் கணக்கு :

" நான் முதல் ஐந்து உடைகள் தைத்ததில் சேமித்த தையல் கூலி இப் புத்தகத்தின் விலையை விட அதிகம்", என்கிறார் பாரதி. அவர் இப்போது ஒழிந்த நேரத்தில் அருகில் உள்ளவர்களுக்கும் உடைகள் தைக்கிறார். நேரமும் வீணாவதில்லை; பண வரவு வேறு. பாரதி ஆனந்தியை நன்றியுடன் நினைக்காத நாளே கிடையாது.

பாரதி இப்போது ஒரு கைதேர்ந்த தையல் கலை வல்லுனர். ஏன்! நீங்கள்கூட மிக எளிதில் பாரதியைப்போல் கற்றுக்கொள்ள முடியும்.

திருமணமோ, பிறந்ததினமோ வேறு எந்த நிகழ்ச்சியோ வரும்போது பாரதியின் உயிர்த்தோழி ஆனந்தியைப்போல் நீங்களும் உபயோகமுள்ள இதைப் பரிசளித்து மகிழலாமே!

இப் புத்தகத்துடன் 10 ஆடைகளின் டிசைன்களும் உங்களுக்குக் கிடைக்கும். கைக் குழந்தைகள், 1 முதல் 6 வயது சிறுவர் சிறுமிகளுக்கு, மற்றும் சோளி (3 அளவு), பெட்டிகோட் ஆன உடைகளுக்கான முழு அளவு காகித டிசைன்கள் இவை. இவற்றைத் துணிமேல் வைத்து, கார்பன் பேப்பர் மூலம் வரைந்து, துணியைக் கத்தரித்துத் தைத்து விட்டால் உடை தயார்! அவ்வளவு எளிது. டிசைனைத் திரும்பத் திரும்ப உபயோகிக்கலாம்.

செப்டம்பர் 30-ந் தேதிக்குள் முன் பணம் செலுத்தி ஆர்டர் செய்தால் உங்களுக்கு 20% தள்ளுபடி விலையில் இப் புத்தகப் பொக்கிஷம் கிடைக்கும்.

இன்றே, இப்பொழுதே இணைந்துள்ள ஆர்டர் பாரத்தைப் பூர்த்திசெய்து அனுப்புங்கள்.




மானேஜர், (புத்தக டிவிஷன்)
ஸ்பெஷாலிடி பதிப்பகம்
22, II மெயின் ரோடு, கஸ்தூர்பா நகர்
சென்னை-600 020.

ஐயா,
எனக்கு நிர்மலா தேசிகன் அளிக்கும் "10 எளிய பாடங்களில் வீட்டிலேயே தையல் கற்றுக் கொள்ளுங்கள்." புத்தகத்தை ரெஜிஸ்டர் தபாலில் அனுப்பவும். இத்துடன் ரூ. 24.50 (ரூ. 25 --20% + ரூ. 4.50 தபால் செலவு) மணியார்டர்/ட்ராப்ட்/போஸ்டல் ஆர்டர் இணைத்துள்ளேன். இப்புத்தகத்தை வெளியிட்டவுடன் அனுப்புக.

கையொப்பம்.

பெயர் : ____________________

முகவரி : ____________________



"சே, ரொம்ப ரொம்ப மோசம். அமெரிக்கா மனிதர்களையேவா மாற்றி விடும்?''

'இந்த எண்ணத்தை காயத்ரிக்குக் கொடுத்தது வேறு யாருமல்ல. அவள் கணவன் கார்த்திக்தான்.

இந்தியாவிற்குச் சென்று தன் பெற்றோர் ஆசைப்படி அவளை முறைப்படி பெண் பார்த்து அதற்கு அடுத்த வாரமே அவளை மணந்த அந்த அடக்கமான கார்த்திக் எங்கே?

கல்யாணச் சடங்கில் ஒன்றையும் விட்டுக் கொடுக்காமல் மலர்ந்த முகத்தோடு எல்லாவற்றையும் முறையாகச் செய்தவரா இவர்? அமெரிக்காவிலிருந்து வந்த பையனா என ஆச்சரியத்தோடு எல்லோரும் மூக்கில் விரல் வைத்தது எல்லாம் பொய்யா?

காயத்ரிக்கு ஏற்பட்ட முதல் 'ஷாக்' — நியூயார்க் விமான நிலையத்தில் அவளை வரவேற்க வந்திருந்த கார்த்திக் அவளைக் கண்டதும் எல்லோர் முன்னிலையிலும் அவளை இறுகத் தழுவி இதழோடு இதழ் பதித்தது தான்.

கல்யாணத்திற்குப் பிறகு மூன்று மாதங்கள் கணவனைப் பிரிந்து மீண்டும் சேர ஆர்வத்தோடு வந்தவள் இந்தச் செய்கையால் அசந்து விட்டாள்.

''என்னங்க இது?... யாராவது பார்க்கப் போகிறார்கள்?'' அவன் பிடியில் நிமிறியவாறு சுற்றும்முற்றும் அவசர அவசரமாகப் பார்த்தாள்.

''என்ன இது காயத்ரி? விமான நிலையத்தில் இது ரொம்ப சகஜம். நீ என்னைப் பிடித்து இப்படித் தள்ளினால்தான் தப்பாக நினைப்பார்கள். மூன்று மாதம் என்னை மிஸ் பண்ணினது இவ்வளவுதானா?'' ப்ளூ ஜீன்ஸ், டீ ஷர்ட்டில் அவளை நோக்கியபடி கேட்டது... அவன் கணவன்தானா?

''காயத்ரி, சீக்கிரம் கிளம்பு. ஷாப்பிங் சென்டர் பார்க்கவேண்டும் என்று ஆசைப்பட்டாயே.''

''இதோ வந்துவிட்டேன்'' கணவன் குரல் கேட்டு சட்டென்று ஒரு புடவையைச் சுற்றிக் கொண்ட காயத்ரி அறையை விட்டு வெளியே வந்தாள்.

அவளைத் தலையிலிருந்து கால் வரை அளவெடுப்பது போல் பார்த்த கார்த்திக் அவள் அருகே வந்தான்.



''யூ. லுக் ப்யூட்டிஃபுல்! ஆனால் உன் அழகைக் கெடுப்பது இந்த மூக்குத்தி தான். அதைப் போய் கழற்றிவிட்டு வா. இனிமேல் இவ்வளவு பெரிதாகப் பொட்டு வைத்துக் கொள்ளாதே. சின்னதாக, அழகாக இருக்கட்டும்.''

''மூக்குத்தி இருக்கட்டுங்க. இதை எடுக்க மாட்டேன் என்று உங்கம்மாக்கு வாக்குக் கொடுத்திருக்கிறேன்.''

''என் ஆசை முக்கியமா இல்லை என் அம்மாவிற்கு நீ கொடுத்த வாக்கு முக்கியமா என்று நீயே முடிவெடுத்துக் கொள்.'' கோபமாகப் பேசிய கார்த்திக்கின் வார்த்தைகளுக்கு பயந்து கண்களில் குளமாகக் கிளம்பிய கண்ணீரை அடக்கியபடி உள்ளே போனாள் காயத்ரி.

''எனக்கு வேண்டாங்க. இதையெல்லாம் மாட்டிக் கொண்டு என்னால் நிம்மதியாக நிமிர்ந்து நடக்க முடியாதுங்க.''

மனைவிக்காக ஜீன்ஸ் தேர்ந்தெடுப்பதில் ஈடுபட்டிருந்த கார்த்திக் காயத்ரியின் கெஞ்சும் குரலைக் கேட்டு நிமிர்ந்தான்.

காயத்ரி தேடிய கார்த்திக்

லதா கிருஷ்ணா

''சுத்த பட்டிக்காடா இருக்காதே. காஷுவலாக வெளியே போகும்போது இதெல்லாம் ரொம்ப உபயோகமாக இருக்கும். நம் நாட்டைச் சேர்ந்த உன் வயதுப் பெண்கள் இங்கு என்னென்னவோ போட்டுக் கொள்கிறார்களே, எனக்காக இதை நீ அணியக் கூடாதா?'' மறுபடி கார்த்திக்கின் ஆசையே நிறைவேறியது.

வாஷிங்டனைச் சுற்றிப் பார்க்கக் கிளம்பினார்கள். கார்த்



டிக்கும் காயத்ரியும். சீராகச் சென்று கொண்டிருந்த கார் வேகம், சிகப்பு விளக்கால் தடைப்பட்டது. பக்கத்துக் காரில் அந்த ஒரு நிமிட நேரத்தைக் கூட வீணாக்காமல் ஒரு இளம் அமெரிக்க ஜோடி...

ஆமாம், காரின் முன் சீட்டில் எவ்வளவோ இடம் இருக்கும் போது டிரைவரின் அருகே இவ்வளவு நெருங்கி உட்கார்ந்தால் இவன் எப்படி காரை ஜாக்கிரதையாக ஓட்டுவது?

அருவருப்போடு கண்களை திருப்பி ஞள் காயத்ரி. அவள் கண்கள், கண்களெல்லாம் குறும்பாக அவள் மனதைப் படம் பிடித்தவன் போல் உட்கார்ந்திருந்த கார்த்திக்கின் கண்களைச் சந்தித்தன. தன் அருகே இருந்த இடத்தைத் தட்டிக் காட்டி

மலர்களைப் பாதுகாத்தலும் தேர்ந்தெடுத்தலும்....

முதலில் மலர்களை நன்ருகப் பூக்கும் முன்பு பறித்துவிடவும்.

பூக்களை விடியற்காலையில் பறிக்கவும்

பூக்களுடன் சேர்ந்த இலைகளில் மஞ்சள்நிற இலைகளையும் பூவின் அடியில் உள்ள பூவிதழ் காம்புகளையும் நீக்கிவிடவும்.

தண்டின் அடிப் பகுதியை வெட்டியான பின் இரண்டு நிமிடங்கள் கடு நீரில் போடவும்.

பூவின் தண்டினைக் குளிர்ந்த நீரில் 45 நிமிடங்கள் போடவும்.

அருகே உட்காருமாறு சமிக்ஞை செய்தான்.

பலமாகத் தலையாட்டியவளை இழுத்து அருகே உட்கார வைத்து ஒரு கையால் அவளை அணைத்தபடி மற்றொரு கையால் கார் ஓட்டுவதைத் தொடர்ந்தான்.

''பார்த்தியா, நீ கற்றுக் கொள்ள இன்னும் எவ்வளவு இருக்கு? உஷ்... இப்படித் திமிறினுல் நான் உன்னைக் கடத்திக் கொண்டு வந்து விட்டதாகப் பார்ப்பவர்கள் நினைப்பார்கள்.'' காதருகே முணுமுணுத்தான் கார்த்திக்.

வாஷிங்டனில், மான்யூமெண்டையும், வெள்ளை மாளிகையையும் லிங்கன் மெமோரியலையும் சுற்றிப் பார்க்கும் போது தன் இடுப்பை வளைத்தவாறு வந்த கார்த்திக்கின் கையை அகற்ற முயன்று முயன்று தோல்வியுற்ருள் காயத்ரி. கம்பளிப் பூச்சி ஊறுவதைப் போல் இடுப்பில் எப்போது பார்த்தாலும்... எப்பொழுது வீடு போய்ச் சேருவோம் என்று ஆகிவிட்டது காயத்ரிக்கு.

அமெரிக்கர்கள் அப்படி நடந்து கொள்கிருர்கள். அது அவர்களுக்குப் பாந்தமாக இருக்கிறது...

அன்று வெள்ளிக்கிழமை. ஆபீஸிலிருந்து காயத்ரியை போனில் கூப்பிட்ட கார்த்திக் தான் மாலையில் வரும்போது அவன் நண்பன் கொடுக்கும் பார்ட்டிக்குத் தயாராக இருக்கும்படி அவளிடம் சொன்னுன்.

''நீ பாட்டுக்கு எப்போதும் போல் ஒரு புடவையைச் சுற்றிக் கொண்டு விடாதே. ஜீன்சும், நேற்று புதிதாக வாங்கினேனே அந்த டீ ஷர்ட்டும் போட்டுக் கொள்.''

மாலையில் அவன் ஆபீஸிலிருந்து வந்தபோது தயாராக நின்றிருந்தாள் காயத்ரி:

''யூ லுக் ஃபன்டாஸ்டிக். போன மாதம் ஊரிலிருந்து வந்த பத்தாம் பசலியான காயத்ரியா இது? ஏய்... பேசாம ரிக்கைக் கூப்பிட்டு உடம்பு சரியில்லே பார்ட்டிக்கு வர முடியாது என்று சொல்லிவிட்டு வீட்டில் இருந்து விடலாமா?'' விளையாட்டாகக் கூறியபடி தன்னை நோக்கி வந்தவனைக் கைகளால் தடுத்தாள்.

''அதெல்லாம் நன்ருக இருக்காது. சீக்கிரம் கிளம்புங்கள்''.

ஜோடியாக வந்திறங்கிய கார்த்திக் காயத்ரியை வரவேற்ருர்கள் ரிக்கும், ஜூலியட்டும். இதற்கு முன் இரண்டு, மூன்று முறை கார்த்திக்கின் நண்பனை சந்தித்திருக்கிருள் காயத்ரி. பார்வையாலேயே பெண்களைத் துகில் உரிக்கும் சக்தி வாய்ந்த அவனது கண்கள்... நினைத்தாலே அவள் வயிற்றைக் குமட்டும்.

கார்த்திக்கின் கன்னத்தில் முத்தமிட்டாள் ஜூலியட். முகத்தைத் திருப்பிக் கொண்டாள் காயத்ரி. இன்னும் ரிக்குக்கும், ஜூலியட்டுக்கும் திருமணம் ஆகவில்லை. வெட்கமில்லாமல் 'லிவ்விங் டுகெதர்' என்று சொல்லிக் கொள்கிருர்கள்.

திருமணம் என்ற பந்தத்தால் ஏற்படும் பொறுப்புக்குப் பயந்து அந்த பந்தமில்லாமல் வரும் சுகத்தைமட்டும் அனுபவிப்பவர்கள்.



Imageads M-AL-1642

கையில் கொடுக்கப்பட்ட ஜூஸை உறிஞ்சியவாறு தன்னைச் சுற்றி நோட்டமிட்டாள் காயத்ரி. அந்த அறையில் சுமார் இருபது பேர்கள் கையில் கிளாசோடு எதையோ பேசிக்கொண்டும், சிரித்துக் கொண்டும் தவறாமல் அவ்வப்போது கையிலுள்ள கிளாசை மறுபடி நிரப்பிக் கொண்டும் இருந்தார்கள்.

காலியான கிளாசை மறுபடி நிரப்பி கொண்டு வந்த கார்த்திக்கின் அருகே மெள்ள போய் நின்று கொண்டாள்.

''வேண்டாங்க, போதும்.''

''சும்மாயிரு. எப்பொழுதாவது ஒரு நாள் குடித்தால் குடியா முழுகி விடும்?''

''குடியில் நீங்க முழுகிடுவீங்களோன்னுதான் பயமாயிருக்கு.''

''என்ன ஜோக் அடிப்பதாய் நினைப்பா?'' அங்கிருந்து நகர்ந்தான் கார்த்திக்.

''ஹவ் டு யூ லைக் த பார்ட்டி? எஞ்ஜாயிங் யுவர்செல்ஃப்?'' அருகே வந்து நின்ற ரிக்கைப் பார்த்தாள். மனதில் திடீரென்று ஒரு ஐடியா. அவனைப் பார்த்து மனதார (கஷ்டப்பட்டு) புன்னகைத்தாள்.

''கேர் டு ஜாயின் மை கம்பெனி?'' பேசியது காயத்ரிதானா என்று ஒரு நிமிடம் சந்தேகித்தவன் சுதாரித்துக் கொண்டான்.

''மை ப்ளஷர்,'' என்றபடி அவளருகே நின்றவன் அதன் பிறகு அவள் இருந்த இடத்தை விட்டு அப்படி இப்படி நகரவில்லை.

அடிக்கடி தன் பக்கம் சஞ்சலத்தோடு பார்த்த கார்த்திக்கின் முகத்தை பார்த்து மனதிற்குள் சிரித்துக்கொண்டாள்.

பார்ட்டி கலைய இரவு மணி பன்னிரெண்டாகிவிட்டது. காரை மௌனமாக ஓட்டியபடி வந்த கணவனின் முகத்தைக் கடைக்கண்ணால் பார்த்தாள்.

''பார்ட்டி ரொம்ப நன்றாக இருந்தது. ரிக் இஸ் எ வெரி ஹான்ட்சம் மேன்.''

''அதான் அவன் பக்கத்திலிருந்து ஒரு நிமிடம் கூட நகரவில்லையா? நீ நடந்து கொண்டது நன்றாகவேயில்லை காயத்ரி. நீ அவனோடு சிரித்துப்பேசிக் கொண்டிருக்க, அவன் சமயம் கிடைத்த போதெல்லாம் உன் தோளில் கையைப் போட... எனக்கு ரொம்ப அவமானமாக இருந்தது.''

கோபமாகப் பேசிய கணவனைப் பார்த்தாள்.

''உங்களுக்கு இப்படி இருந்தால் தானே பிடிக்கும். ஜூலியட் உங்களோடு அட்டையாக ஒட்டிக்கொண்ட போது இந்த அவமானம் எங்கே போச்சு? நான் இன்னிக்கு புடவையிலே வந்திருந்தால் ரிக் அப்படிஎன்னிடம் நடந்து கொண்டிருக்க மாட்டான். இந்த உடை அவனுக்குத் தைரியத்தைக் கொடுத்திருக்கு. நான் மாறணும் என்கிறீங்க. ஆனால் மாறினால் கோபித்துக் கொள்கிறீங்க. இது என்ன நியாயம்?''

''வேண்டாம்மா. நீ இருக்கிறபடியே இரு. அது போதும். எங்கு

மலர்களைப் பாதுகாத்தல்...

இலைகளிலோ, தண்டு மற்றும் இலைகளிலோ அழுக்கு இருந்தால் நீக்கவும். இரண்டு துண்டு கரித் துண்டுகளைப் போட்டு பின் தண்ணீரை ஊற்றினால் தண்ணீர் சுத்தமாக இருப்பதோடு பூவும் நெடு நாட்கள் வாடாமல் இருக்கும். ஒரு ஸ்பூன் சர்க்கரை, பொட்டாஷியம் பர்மாங்கனேட் முதலியவற்றை தண்ணீரில் போட்டாலும் மலர்கள் நெடு நாட்கள் புதியதாக வாடாமல் இருக்கும்.

இருக்கிறோமோ அந்தச் சூழ்நிலைக்கு ஏத்தபடி மாறினால்தான் மதிப்புன்னு நினைச்சேன். நான் என் மனைவியை இன்னொருத்தனோடு பங்கு போட்டுக்க தயாராயில்லை. அந்த ரிக்கோடு உன்னைப் பார்த்தபோது... என் வயிற்றைப் பத்தி எரிந்தது. உனக்குப் பிடிக்காததை இனிமே செய்யச் சொல்லி நான் கட்டாயப்படுத்த மாட்டேன்.''

கார்த்திக்கின் முகத்தைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது.

மேலோட்டமாக எப்படி இருந்தாலும் கார்த்திக்கின் ரத்தத்தோடு ஊறிய பண்பாடு மறையவில்லை என்பதை உணர்த்திவிட்டது காயத்ரி அவனுக்குக் கொடுத்த அதிர்ச்சி வைத்தியம்.

பெண்கள் சம்பந்தப்பட்ட மருத்துவத்தில் மேல்நாடு சென்று பட்டம் பெற்றுத் திரும்பி இத்துறையில் நீண்டகால அனுபவம் பெற்ற சீனியர்: பெண் மருத்துவரான திருமதி. கமலம்மா, (எம். டி. எம். ஆர். சி, ஓ: ஜி.) இந்த இதழிலிருந்து பெண்களுக்கென்று உள்ள சில நிரந்தரப் பிரச்சினைகளைப் பற்றி எழுதுகிறார்,

பெண்களின் சில நிரந்தரப் பிரச்னைகள்

பெண் என்று சொன்னவுடனே அவளை ஆணிடமிருந்து பிரித்து மிக உன்னத நிலைக்குக் கொண்டு செல்வது அவளுடைய தாய்மை நிலைதான். தாய் என்னும் பதவியைப் பெறுவதாலேயே அவளை ஆண்கள் போற்றுகிறார்கள். அன்னையை விரும்பாத குழந்தையும் உண்டா என்ன? எனவே தாய்மைப் பேறு என்பதிலிருந்தே என்னுடைய கட்டுரையை ஆரம்பிக்கிறேன்.

இப்பொழுது நான். பார்த்த அளவிற்குப் பெண்ணோ அல்லது அவளுடைய கணவனோ திருமணமானவுடனே அவள் தாய்மைநிலை அடைவதை விரும்புவதில்லை. அல்லது சிலர் குழந்தைகள் இருக்கும் நிலையிலே கொஞ்சம் நாள் தள்ளிப் போகட்டுமே என்று கருவைக் கலைப்பதற்காகப் பல தவறான முறைகளில் ஈடுபடுகிறார்கள்.

என்னுடைய அபிப்பிராயத்தைக் கேட்டால் ஒரு பெண் கல்யாணமானவுடனேயே கர்ப்பம் தரித்து விட்டால் அதை அப்படியே விட்டுவிடுவது தான் மிகச் சிறந்தது. அல்லது இப்போதைக்குக் குழந்தை வேண்டாம் என்று நினைப்பவர்கள், முறையாக ஒரு டாக்டரை அணுகி, தங்களுக்குத் தடுப்பிற்கு எந்த முறை சிறந்தது என்று ஆலோசனை கேட்டு அதைப் பின்பற்றலாம். அதைவிட்டு விட்டுத் தங்களுக்குத் தாங்களே மருத்துவராகி எதையாவது செய்து கொள்ளுவதும், பிறகு சிக்கல் என்று எழுந்த பிறகு டாக்டரை அணுகுவதும் தவறு.

பொதுவாக இருபத்தைந்து வயதிற்குள் திருமணம் செய்து கொள்பவர்கள் குழந்தைப் பேற்றைத் தள்ளிப் போட விரும்பினால் தள்ளிப் போடலாம். ஆனால் அதற்கு மேற்பட்ட வயதில் திருமணம் செய்து கொள்பவர்கள் குழந்தையைப் பெற்றுக் கொண்டுவிடுவது நல்லது. வயது ஆகஆக குழந்தைப் பேற்றில் சிரமங்கள் ஏற்படலாம்.

இல்லை, கட்டாயம் கருவைக்கலைக்கத் தான் வேண்டும் என்றால் பத்து வாரங்களுக்குள் அபார்ஷன் செய்து கொள்வது நல்லது. அதிலும் முறையான டாக்டரை அணுகி ரத்தம் என்ன குரூப் என்பவற்றையெல்லாம் தெரிந்து கொண்டு செய்துகொள்வது நல்லது. ஏனெனில் ஆர். எச். நெகடிவாக இருந்தால் அதற்கென்று ஒரு ஊசி போட வேண்டும். இல்லையெனில் பிற்பாடு குழந்தை பெறும் போது மிகச் சிரமங்களை ஏற்படுத்தும்.



அன்பார்ந்த வாசகர்களுக்கு,

வணக்கம்.

கல்கி நிறுவனம் மங்கையர் மலரை வெளியிட ஆரம்பித்ததிலிருந்து நீங்கள் அளித்துவரும் அமோகமான ஆதரவினாலும் அன்பினாலும் மங்கையர் மலர் விற்பனை மாதா மாதம் வளர்ந்து கொண்டே வருகிறது. இதற்கு எங்கள் நன்றியை உங்கள் அனைவருக்கும் முதலில் தெரிவித்துக் கொள்கிறோம்.

நாளுக்கு நாள் உயர்ந்து வரும் விலைவாசியினால் நியூஸ்பிரிண்ட் காகிதம், இங்க் மற்றும் இதர மூலப் பொருள்களின் விலை தவிர, நிர்வாகச் செலவினங்களும் அதிகமாகியுள்ளன. எனவே அக்டோபர் 83 இதழிலிருந்து மங்கையர் மலரின் விலையை ரூ. 2/- ஆக உயர்த்தும்படியான நிர்ப்பந்தம் எங்களுக்கு இப்போது ஏற்பட்டுள்ளது. தவிர்க்க முடியாத இந்த விலை உயர்வைப் பொருட்படுத்தாமல் தொடர்ந்து உங்கள் அன்பையும், ஆதரவையும் மங்கையர் மலருக்கு அளித்துவர வேண்டுகிறோம்.

மானேஜர்,
மங்கையர் மலர்.

சில டாக்டர்கள் அபார்ஷனுக்கு நல்ல பணம் கிடைக்கிறது என்று செய்து விடுகிறார்கள். முதலில் மாத்திரைகளை எழுதிக் கொடுக்கிறார்கள். அது பயன் தராதபோது ஹார்மோன் இன்ஜெக்ஷன் போடுகிறார்கள். இதற்கும் அந்தக் கரு மசிந்து கொடுப்பதில்லை. இவையெல்லாம் முடிவதற்குள் நான்கு மாதங்கள் ஆகிவிடுகின்றன. இனிமேல் அபார்ஷன் செய்தால் ஆபத்து என்று டாக்டர்கள் கைவிட்டு விடும்போதே நிலைமை அபாயமடைகிறது. இந்த மாத்திரை, ஊசி மருந்துகளால் பாதிக்கப்பட்டகுழந்தை ஊனத்துடன் பிறந்து காலமெல்லாம் வதைபடுகிறது.

அதனால்தான் சொல்கிறேன், முதல் குழந்தையை எக்காரணம் கொண்டும் கலைக்காமல் பெற்றுக் கொள்ளுங்கள். அடுத்த குழந்தைக்குச் சரியான தடுப்பு முறைகளுடன் நாட்களைத் தள்ளிப் போடலாம்.

கர்ப்பம் தரித்த தாய் முதல்மூன்று மாதங்களில் எப்படி இருக்கவேண்டும்?

முதல் மூன்று மாதங்கள் பெண்களுக்கு ஒரு பிரச்சினையாகத்தான் இருக்கின்றன. வேலைக்குப் போகும் பெண்ணுக்கு ஒரு மாதிரியென்றால், வீட்டிலுள்ள பெண்ணுக்கு வேறு மாதிரியாக இருக்கும்.

தலைசுற்றல், வாந்தி, அதிகதூக்கம், மனோநிலை பாதிக்கப்பட்டு கோப தாபங்கள், சிலவற்றைச் சாப்பிட வேண்டும் என்ற ஆசை... இவையெல்லாம் அனைவருக்கும் தெரிந்ததுதான்.

ஆனால் இன்றைய நிலையில் இவையெல்லாம் பெண்களை எப்படிப் பாதிக்கிறது என்பதைத்தான் சொல்ல வருகிறேன்.

திருமணமானவுடனே கர்ப்பம் தரித்துவிடும் புதுமணப் பெண்ணை வீட்டிலுள்ளவர்கள் புரிந்து கொள்வதில்லை. மாமியார் இடித்துக் காட்டுகிறாள்.

''என்னவோ இவதான் புதுசா உண்டான மாதிரி மாய்மாலம் பண்றா. சனியன், எப்பப் பாரு என்ன தூக்கம், விடு விளங்கின மாதிரிதான்...''

என வசைபாடும் மாமியார்களை நான் பார்த்திருக்கிறேன். தானும் இதுபோல உண்டாகிக் கஷ்டப்பட்டவள்தான் என்பதை ஏனோ இவர்கள் மாமியார் ஸ்தானத்திற்கு வந்தவுடன் மறந்து விடுகிறார்கள்.

இந்த மாதிரி சமயங்களில் பெண்களை கணவனும், அவனுடைய வீட்டாரும் புரிந்து கொண்டு நடத்த வேண்டியது மிகமிக முக்கியம். இதற்காகத்தான் அந்தக் காலத்தில் மூன்றும் மாதமும், கடைசி மூன்று மாதமும் தாய் வீட்டிற்கு அழைத்துச் செல்லும் வழக்கத்தை வைத்திருந்தார்கள்.

இரண்டாவது குழந்தையாகவும் இருந்து, வேலைக்குப் போகும் பெண்ணாகவும் இருந்தால் கேட்கவே வேண்டாம். சாயந்திரம் களைத்து, கொஞ்

சம் படுக்க மாட்டோமா என்று வரும் மருமகளிடம், முதல் வேலை யாகக் குழந்தையைத் தள்ளிவிடும் மாமியாரும் உண்டு. ஏனெனில், அவளுடைய 'டியூட்டி' நேரம் முடிந்து விட்டதாம். தன் மகளைப் போலத் தான் மருமகளும் என்று பாசம்,பரிவு இருக்க வேண்டும் ஒவ்வொரு மாமி யாருக்கும்.

இப்பொழுது நவீன காலத்தில் வேலைக்குப் . போகும் பெண்கள் வேறொரு அபாயகரமான காரியத்தை யும் செய்கிறார்கள். தலைசுற்றல், வாந்தியெல்லாம் இருப்பதால் வேலை களைச் செய்ய முடியவில்லை என்று அந்த 'மசக்கை' போவதற்காக டாக் டர்களைக் கேட்டு மாத்திரைகளைச் சாப்பிடுகிறார்கள். இது மிகமிக அபாய கரமானதாகும்.

கருக்கலைப்பிற்கு மத்திரைகளைச்சாப் பிட்டு பின் விட்டுவிடுவது எவ்வளவு அபாயமானதோ, அவ்வளவு அபாய மானதே இந்த 'மார்னிங் சிக்னெஸ்' காக மாத்திரைகளை சாப்பிடுவதும். இது வளரும் குழந்தையைப் பாதிக் கும். முதல் மூன்று மாதங்களுக்கு எந்த மாத்திரையோ, மருந்தோ சாப்பிடாமல் இருப்பது உத்தமம்.

எனவே, நாள் தள்ளிப் போகிறது என்று தெரிந்தவுடனே நல்ல டாக்ட ரிடம் சென்று இது கருதானா என்று உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். ஏனெனில் நீண்ட நாள் தாய்மைப் பேறு இல்லாதவர்கள் மனஅளவில் பெரிதும் பாதிக்கப்பட்டு நாள் தள்ளிப் போவதும் உண்டு. கருவே உண்டா காமல் சீமந்தம் வரை செய்து கொண்ட கதைகள் கூட உண்டு.

அடுத்தது, அந்த மூன்று மாதங் களும் இளநீர், வாய்க்கு ருசியான எலுமிச்சை ரஸம், மற்ற பழரசங்கள், புளிப்பில்லாத மோர் இவற்றை நிறைய சாப்பிடலாம். தனியாக எந்த மருந்து, மாத்திரையும் தேவையில்லை.

அதேபோல ரத்தப் பரிசோதனை, ஷுகர் உள்ளதா, பி. பீ. இருக்கிறதா என்பதையும் பரிசோதித்து விட வேண் டும். சிலர் ஐந்து மாதத்திற்கப்புறம் பிளட் டெஸ்ட் செய்தால் போதும் என்று நினைப்பார்கள். ஆனால் பிளட் பிரஷர், ஷுகர் இருப்பவர்கள் மூன்றும் மாதத்திலிருந்தே சிகிச் சையை ஆரம்பித்தால்தான் பிரச்சினை களில்லாத 'டெலிவரி' ஏற்படும்.

சாதாரண வேலைகள், ஓய்வு, சத் தான உணவு என மூன்று மாதத்தைக் கடந்து விட்டால் குழந்தை பாதிப்பில் லாமல் தப்பித்துக் கொண்டுவிடும்.

(தொடரும்)

எங்கோ மேற்கு ஜெர்மனியில் கோடீசுவரத் தம்பதிகளுக்கு ஒரே மகளாகப் பிறந்த குமாரி அஸ்காப் வேலூருக்கு அருகிலுள்ள சேத்துப்பட்டு மக்களுக்குக் கண்கண்ட தெய்வமாக விளங்குகிறார் என்றால் ஆச்சரியமாக இல்லை?

வேலூர் சி. எம். சிக்கு இணையாக நவீன மருத்துவ வசதிகளுடன் சேத்துப்பட்டில் செயிண்ட் தாமஸ் மருத்துவ மனையை நிறுவி, குஷ்டரோகத்திற்குப் பெயர் போன அப்பிரதேசத்தில்

நல்லபெண்மணி



தொண்டாற்றி வருகிறார் இவர். கடந்த இருபத்தைந்து ஆண்டுகளில் அதிகமாக இருந்த குஷ்டரோகிகளின் எண்ணிக்கை கணிசமான அளவு குறைந்திருக்கிறது என்றால் அதற்கு இவருடைய அயராத தொண்டே காரணம்.

ஒரு வாடகை வீட்டில் ஒரே ஒரு நர்ஸோடு தன்னுடைய தொண்டை ஆரம்பித்த இந்தப் பெண்மணி இப்போது அறுபது ஏக்கர் நிலப்பரப்பில் விவசாயப் பண்ணையோடு மாபெரும் மருத்துவமனையை நடத்தி வருகிறார்.

சுற்றுப்புற கிராமங்களுக்கெல்லாம் வேன்களை அனுப்பி மருத்துவப் பரிசோதனை செய்விக்கிறார். குஷ்டரோகத்தைத் தேடித்தேடி அழிப்பதில் தனது அயராத உழைப்பை செலவிடும் இவர், குணமாகிய நோயாளிகளின் மறுவாழ்வுக்கும் உதவுகிறார். கூடை முடைதல் போன்ற கைத் தொழில்களைக் கற்க ஏற்பாடு செய்துள்ளார். பிறநோயாளிகளுக்கும் இங்கு மருத்துவம் பார்க்கப்படுகிறது. அனாதை குழந்தைகளின் அடைக்கல இல்லமாகவும் விளங்குகிறது.

கோடப் என்ற சமூக வளர்ச்சி நிதித் திட்டம் இவர்களுக்குப் பெரிதும் உதவுகிறதாம். தன் வாழ்நாள் பூராவும் தமிழகத்தின் ஒரு பகுதி மக்களுக்காகச் செலவிட வந்திருக்கும் இந்த வெளிநாட்டுப் பெண்மணியின் சேவையுணர்வை எப்படிப் பாராட்டுவது?

—ப. சிதம்பரம்.

குமாரி அஸ்காப் நோயாளிகளுக்குத் தொண்டு புரிந்தால், நாகரீகத்தில் மிகவும் பின்தங்கிய மக்களுக்காக உழைப்பவர் திருமதி வாணி வெங்கட்ராம்.

கணவர் திரு. வெங்கட்ராம் வால்பாறையில் வேலையாக இருந்தபோது, அவருடன் இல்லறத்தில் அடியெடுத்து வைத்த திருமதி. வாணியின் கவனத்தைக் கவர்ந்தவர்கள் அங்கிருந்த தோட்டத் தொழிலாளர்கள். அவர்

களுக்காக சாயிகணேஷ் கோயிலைக் கட்டி விநாயகருடன் ஆரம்பித்த சமூக சேவை இன்று பெரும் நிலையில் வளர்ந்து விட்டது. தொழிலாளர்களுக்குப் பூங்கா, பெண்களுக்காகக் குழந்தைகள் காப்பகம் எனச் சிறிது சிறிதாகத் தன்னுடைய சேவையை விரிவுபடுத்தினார்.




இந்தச் சமயத்தில் தான் ஆனைமலை ஆதிவாசிகள் இவரைக் கவர்ந்தார்கள். இன்று அம்மலைவாசிகளின் 'அம்மா' வாகவே ஆகிவிட்டார். அவர்களுக்கு மருத்துவ வசதி, நர்ஸரி பள்ளி, விவசாய உதவி, சத்துணவுத் திட்டம் என, ஏகப்பட்ட வழிகளில் அவர்கள் வாழ்வு செம்மைபட உதவி செய்திருக்கிறார். அதேபோல அரசினர் முதியோர் பென்ஷன் திட்டத்தைக் கொண்டு வருமுன்பே, இவர் ஒரு மலர் வெளியிட்டு அதன் மூலம் கிடைத்த பணத்தை பிக்சட் டெபாசிட் டில் போட்டு, முதியோருக்கும் பென்ஷன் வழங்க ஏற்பாடு செய்தார்.

ரத்த தானம், கண் சிகிச்சைமுகாம், குடும்பக் கட்டுப்பாடு என ஒன்றையும் விடவில்லை இவர். ஆனைமலை ஆதிவாசிகளின் வாழ்விற்காக பேங்க் அதிகாரிகள் முதல் கலெக்டர் வரை பலரிடம் படையெடுத்துச் சென்று வாதாடி உதவிகளைப் பெற்றுத் தந்திருக்கிறார்.

இப்பெண்மணியின் அயராத தொண்டினால் ஒரு சமூகமே இன்று நாகரீகம், பொருளாதாரத்தில் உயர்ந்திருக்கிறதென்றால் அது சாதாரண விஷயமில்லை.

—வெ. சியாமளா ரமணி.


விட்டிலேயே நாம் சோப் செய்யலாம்!



தேவையான சாமான்கள்:—


1 கிலோ இலுப்பெண்ணை (மற்ற எண்ணெய் விலை அதிகம். தேங்காய் எண்ணெயில் இஷ்டப்பட்டவர்கள் செய்யலாம்.)
2 கிலோ தண்ணீர்.
250 கிராம் கடலை மாவு.
250 கிராம் காஸ்டிக் சோடா.
சென்ட் எதுவானாலும் விடலாம்.

முதலில் காஸ்டிக் சோடாவையும் தண்ணீரையும் தனித்தனியாக வாளியில் கலந்து அரைமணி நேரம் வைக்கவும். இதனால் காரம் போய்விடும். இலுப்பெண்ணையுடன் கடலை மாவைக் கலந்து நன்றாகக் கலக்கவும் இந்தக் கலவையை காஸ்டிக் ஸோடாவுடன் கொட்டிக் கலந்து பெரிய மரத்தடியினால் கலக்கவும். சுற்றிச் சுற்றிக் கலக்கும் போது மைசூர்பாகு மாதிரி இறுகி வரும். நல்ல கெட்டியாக வந்த பிறகு ஒரு டிரேயில் கொட்டலாம். அல்லது தரையின் போல் சோப்பின் அளவான பலகைகளை சதுரமாக இணைத்தும் கொட்டலாம். நன்கு ஆறிக் கெட்டியானபிறகு சோப்புக் கட்டிகள் போடவும். கலவையில் மணமான ஸெண்ட் விட்டுக் கலக்கினால் துணிக்கு வாசனை கிடைக்கும். நீலமும் போடலாம்.



மிகவும் சுலபமாக பொழுது போக்கு நேரத்தில் செய்து வைத்துக் கொள்ளலாம். அடுப்பு தேவையில்லை. மற்ற எண்ணெயைவிட இலுப்பெண்ணை கொழுப்பு அதிகம் நிறைந்தது. விரைவில் இறுகும். துணி பளீரென்று வெளுக்கும். சருமத்துக்கு ஆபத்து இல்லை. கலவை கலக்கும்போது கையினால் செய்ய வேண்டாம்.

சித்திரா



இதற்கு என்ன செய்வது?

தொகுப்பு: டி.ஆர். ரமேஷ்

வானொலிதாசன் மதுக்கூர்

என்நண்பர்களுள் ஒருவர், தம் உடல் உறுப்புக்களை (கண், இதயம், சிறுநீரகம் போன்றவைகள்) தன் இறப்புக்குப் பின் பிறருக்குப் பயன்படும் வகையில் தானம் செய்ய விரும்புகிறார். இதற்கு எழுத்து மூலம் ஒப்பந்தம் செய்துகொள்ளத் தஞ்சை மாவட்டத்தில் எந்தத் துறையுடன், எந்த முகவரிக்கு எங்ஙனம் தொடர்பு கொள்ள வேண்டும்?

பதில்

உங்கள் நண்பரின் எண்ணம் போற்றத் தக்கது. முதலில் அவருக்கு என்னுடைய வாழ்த்துக்கள். நண்பரின் நம்பிக்கைக்குப் பாத்திரமான டாக்டர் ஒருவரிடம் இது பற்றிய உயில் ஒன்றை எழுதித் தந்தால் நண்பரின் முடிவுக்குப் பிறகு டாக்டர் அதற்கான நடவடிக்கை எடுப்பார். அரசாங்க ரீதியாகச் செய்ய வேண்டு மெனில் உங்கள் மாவட்ட டி. எம். ஓ.விடம் உயில் எழுதித் தந்தால் பின்னர் அரசாங்கமே அதற்கான நடவடிக்கை எடுக்கும்.

ஸ்ரீ பீகார்

குடும்பப் பெண்கள் சைக்கிள் விடுவதனால் பல நன்மைகள் உண்டா? நாற்பத்தி ஐந்து வயதுக்கு மேல் குழந்தைகளைப் பெற்ற ஒரு பெண்மணி சைக்கிள் கற்றுக் கொண்டு சைக்கிள் விடலாமா? கருத்தடை ஆபரேஷன் மற்றும் கருப் பையில் வேறு கோளாறு காரணமாக சிசேரியன் ஆபரேஷன் ஆனவர்களும் எவ்வளவு நாள் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்?

பதில்

பெண்கள் சைக்கிள் விடுவது, நீச்சல் பழகுவது போன்றவை உடலுக்கு மிகவும் நல்லது. கால்கள் இடுப்பு போன்றவை பலம் பெற இது மிகவும் உதவும். கருத்தடை, சிசேரியன் போன்ற ஆபரேஷன் செய்து கொண்டவர்களும் இவற்றைச் செய்யலாம். ஆனால் எவ்வளவு நாட்களுக்குப் பிறகு என்பது ஒவ்வொரு தனிப்பட்ட பெண்ணின் உடல் நிலையைப் பொறுத்தே அமையும். அதைக் அந்த ஆபரேஷனைச் செய்த மருத்துவரே முடிவு செய்ய வேண்டும்.

திருமதி லதா கோபாலன்

நான் ஒரு அரசாங்க ஊழியை(என்.ஜி.ஓ.). அவரோ வேண்டுமென்றே வேற்று மாநிலத்திற்கு மாற்றல் வாங்கிச் சென்று விட்டார். என் வேலையை விட்டுக் கிராமத்திற்கு வர வற்புறுத்துகிறார். ஆனால் எனக்கோ வேலையை விட இஷ்டமில்லை. அவர் பிரிந்து சென்று ஐந்து ஆண்டுகள் ஆகிவிட்டன. ஒரு பெண் குழந்தை உள்ளது. அதன் எதிர் காலத்திற்காகவாவது ஒன்று சேர வேண்டும். அவரின் வேலையை நானாகவே மாற்றல் செய்வதற்குச் சட்டத்தில் வழி உண்டா?

பதில்

இதில் சட்டப்படி நிவாரணம் கோர முடியாது. ஆனால் பொதுவாக எல்லா அலுவலகங்களிலும் மனைவி இருக்கும் இடத்தில் தான் கணவன் இருக்க வேண்டும் என்ற கொள்கையை மனிதாபிமான முறையில் கடைப்பிடிக்கிறார்கள். அவ்வகையில் உங்கள் கணவர் தன் அலுவலகத்தில் மனுச் செய்து கொண்டால் மாற்றல் கிடைக்கலாம்.

ஜெயஸ்ரீ கோவை

பெண்கள் முகத்தில் ஆண்களுக்கு மீசை இருப்பது போல் இலேசாக முடி வளர்ந்திருப்பதைப் போக்கவும் மீண்டும் வளருவதைத் தடுக்கவும் Punice Stone என்ற ஒருவிதக் கல்லைச் சோப்புடன் இழைத்து முகத்தில் தேய்த்துக் கொண்டால் முடி வளராது என்று குறிப்பிட்டிருந்தது. அந்தக் கல் எங்கு கிடைக்கிறது என்பதைத் தெரிவித்தால் உதவியாக இருக்கும்.

பதில்

இந்த 'ப்யூனிக் ஸ்டோன்' எங்கு கிடைக்கிறது என நிறையச் சகோதரிகள் கேட்கிறார்கள். ஒவ்வொரு ஊரிலும் எந்தக் கடையில் கிடைக்கும் என்று சொல்லிக் கொண்டிருக்க இயலாது. உங்களுக்குத் தெரிந்த பெண் மருத்துவரிடம் கேட்டீர்களானால் சரியான விலாசம் கூறுவார்கள். இல்லையெனில் சென்னை வரும்போது உம் மிடியார்ஸ் ஷாப்பிங் சென்டரில்வாங்கலாம்.

உமா **சென்னை-33**

எனது தாய், மற்றும் குழந்தைகளாகிய நாங்கள் குடும்பத் தகராறு காரணமாகத் தந்தையிடமிருந்து பிரிந்து எனது தாயின் அப்பாவின் பாதுகாப்பில் சிறிது காலமாக இருந்து வருகிறோம். எனது அம்மாவின் அப்புவுக்குப் பிதுரார்ஜித சொத்துக்கள் வீடு, நிலம் மற்றும் பணமாகவும் உள்ளன. அச்சொத்தில் எத்தனை பங்கு என் தாய்க்குச் சேரும்? என் தாய் பொருளாதார நிலையிலும், மற்றும் பல நெருக்கடியினாலும் மிகுந்த தொல்லைப் படுகிறாள்.

பதில்

உங்கள் தாய்வழித் தாத்தாவின் பிதுரார்ஜிதச் சொத்தில் உங்கள் தாயாருக்குக் கண்டிப்பாக ஒரு பங்கு உண்டு. ஆனால் அது எவ்வளவு என்பது தாத்தாவின் மனைவி, உடன் பிறந்தோர் போன்றோரின் எண்ணிக்கையைப் பொறுத்தே இருக்கிறது.

உங்கள் தாயாரின் பொருளாதார நெருக்கடி காரணமாக இப்பொழுது சொத்தின் பாகம் வேண்டுமானால் அவர் தன் தந்தையைக் கேட்டுக் கொள்ளலாம். அவரும் 'செட்டில்மெண்ட்' எழுதினால் பங்கு தாயாரை வந்து சேரும். இல்லையெனில் தாத்தாவிற்குப் பிறகே முறைப்படி சொத்தின் பங்கு உங்கள் தாயாரை வந்தடையும்.

மீனாட்சி **குலமங்கலம்**

எனக்குத் திருமணமாகி மூன்று குழந்தைகள் உள்ளனர். (இரண்டு பெண்கள், ஒரு ஆண்) எனக்கு வயது 43. என் கணவர் ரூ. 2000 வரை சம்பளம் வாங்கும் ஒரு நல்ல உத்தியோகத்தில் இருக்கிறார். அவர் என்னை எல்லா விஷயங்களிலும் அலட்சியப்படுத்த ஆரம்பித்ததால், குழந்தைகளும் என்னை அலட்சியப்படுத்த ஆரம்பித்த நிலையில் நான் குடும்பத்தை விட்டு வெளியேறி விட்டேன். என்னை ஆதரிக்க யாரும் இல்லை. குழந்தைகளுக்கு வயது முறையே 16, 13, 12. நான் கோர்ட்டில் போட்டால் ஒரு குழந்தையை யாவது நான் பெற வழி இருக்கிறதா? நான் தங்க (பணம் கொடுத்து) ஹாஸ்டல் எங்கு உள்ளது?


பதில்

சென்னை தாம்பரத்தில் உள்ள எஸ். ஓ.எஸ் வில்லேஜ் போன்ற சமூக சேவை நிறுவனங்களில் சேர்ந்து நீங்கள் அமைதியாக வாழலாம்.

உங்களுடைய குழந்தைகள் 'மைனர்' என்பதால், அவர்களில் ஒருவரையேனும் உங்களுடன் வாழச் செய்யலாம். இதற்காக நீங்கள் கணவருடன் கடைசியாகச் சேர்ந்து வாழ்ந்த ஊர், அல்லது திருமணமான ஊரில் உள்ள கோர்ட்டில் மனுச் செய்து கொள்ள வேண்டும். அவர்கள் உங்கள் குழந்தைகளை விசாரித்து, அவர்களில் யாருக்கு உங்களுடன் வாழ விருப்பமோ அவரை உங்களுடன் வாழச் செய்வார். அக் குழந்தையைப் பராமரிக்கும் செலவையும் நீங்கள் உங்கள் கணவரிடமிருந்து பெற முடியும்.

முருகப்ரியா **பழநி**

எனக்குத் திருமணமாகி ஒரே மாதத்தில் கருத்தரித்தேன். அப்போது எனக்கு வயது பதினேழு. ஆதலால் நானோ என் கணவரோ அப்போதே பிள்ளை பெற்றுக்கொள்ள விரும்பவில்லை. அதனால் பல மாத்திரைகளும், அன்னாசி, பப்பாளி போன்ற பழங்களையும் சாப்பிட்டுக் கருவைக் கலைக்க முயன்றேன். ஆனால் கரு கலையாததால் விட்டு விட்டேன். 10 மாதத்தில் பெண் குழந்தையைப் பெற்றெடுத்தேன். இறைவன் அருளால் அவள்



நன்றாகவே பிறந்திருந்தாள். ஆனால் நிறம் மட்டும் கறுப்பாக இருக்கிறாள். குழந்தையைச் சிவப்பாக்குவதற்கு ஏதாவது வழியைத் தயவு செய்து கூறுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பதில்

உங்களைப் போலத் தவறு செய்யும் தாய்மார்கள் ஏராளமாக உள்ளனர். கருவைக் கலைக்க வேண்டுமானால் அதைத் தகுந்த நேரத்தில் செய்ய வேண்டும். அரை குறையாகச் செய்துகொண்டு, பாதிக்கப்பட்ட குழந்தையையும் வருத்தி, தானும் காலமெல்லாம் வருத்தப்படுவதால் பிரயோசனமில்லை. இதைப் பற்றி 'பெண்களின் நிரந்தரப் பிரச்னைகள்' என்ற தலைப்பில் இந்த இதழில் வந்துள்ள கட்டுரையைப் படியுங்கள்.

குழந்தையின் நிறத்தை மாற்றத் தீர்மானமான வழியேதும் இல்லை. ஆலிவ் ஆயில், நிறம் மாற்றுவதாகக் கூறும் சில க்ரீம்கள், ஆப்பிள், கேரட் சாப்பிடக் கொடுத்தல் போன்றவற்றால் ஓரளவு மாறலாம். குழந்தைக்கு ஒன்றரை வயதேயாவதால், சத்துள்ள உணவு, பால், பழங்களின் மூலம் காலப் போக்கில் கொஞ்சம் கொஞ்சமாக நிறம் மாறச் செய்ய வாய்ப்புண்டு.

இதோ ஒரு ஹேர்-டை எளிதாக உபயோகிக்கக் கூடியது, நம்பமுடியாத குறைந்த விலையில்!

கோத்ரெஜ் பவுடர் ஹேர் டை கான்ஸென்ட்ரேட் உங்களுக்காகவே விசேஷமான கலவை முறையில் தயாரிக்கப்படுகிறது. இந்தியாவில் பவுடர் ஹேர் டை கான்ஸென்ட்ரேட் இது ஒன்றே. இது தானாகவே பரவுகிறது. ஆகவே நீங்கள் சிறிதளவே உபயோகித்தால் போதும்! மிகமிக முக்கியம், நீங்கள் நம்ப முடியாத அளவுக்கு குறைவான விலையில் இது கிடைக்கிறது!





கலப்பது சுலபம்

இந்தப் பவுடரை சிறிதளவு நீருடன் கலக்கவும். உபயோகிப்பதற்கு இப்போது தயார்.



உபயோகிப்பது சுலபம்

இதை சிரமமின்றி இலேசாகத் தடவுங்கள், தானாகவே ஒரே சீராக, மென்மையாக முடிமீது பரவி விடுகிறது.

உங்கள் கேசத்துக்கு இளமையான அழகுத் தோற்றத்தைத் தருகிறது!



இந்தியாவில் தானாகவே பரவும் பவுடர் ஹேர் டை இது ஒன்றே.

Godrej

பவுடர் ஹேர்-டை கான்ஸென்ட்ரேட்

தரமோ நீங்கள் நாடுவது, விலையோ உங்களுக்குப் பிடித்தமானது.

CASGS 168-244 TAM

"வாங்க மன்னீ!"

அத்தனை பேரும் நிமிர்ந்து பார்த்தார்கள். அழைத்த ஜவஹரின் முகத்தில் பிரகாசம். அவன் பார்வையும் சுழன்றது. மதுவின் முகத்தில் நிலைத்தது. அந்த அழகு முகத்திலும் திகைப்போடு கூடியமலர்ச்சி. மதுராவின் பின்னேடு வந்த அவள் தந்தை கணேசனின் இதழ்களில் புன்னகை. அந்தப் புன்னகை அவனை மகிழ்ச்சியோடு தட்டிக் கொடுப்பதை அவன் உணர்ந்தான். பதினைந்து வயதுச் சிறுவனுக்குரிய வெட்கம் சட்டென்று முகத்தில் பரவ உள்ளே சென்று விட்டான்.



குறுநாவல்

புது மணத் தம்பதிகளுக்கு ஆரத்தி சுற்றிக் கொட்டிய அத்தையும் மாமியும் எந்த வித உணர்ச்சியையும் காட்டாமல், ''வலது காலை உள்ளே வைத்து வாங்கோ....'' என்று கூறிக் கொண்டே வீட்டினுள் நுழைந்தனர்.

காரிலிருந்து இறங்கும்போதே தினகர் கவனித்தான். வீட்டு வாசலில் ஆரத்தித் தட்டுடன் அத்தையும் மாமியும் மட்டுமே நின்றிருந்தனர். அம்மா கோமதி சமையல் அறைப் பக்கமாகத் தூண் மறைவில் நின்றுதான் யாரையும் வரவேற்பது வழக்கம். அப்பா இறந்த பிறகு எப்போதையும் விட அம்மா தனக்குள்ளேயே ஒடுங்கிக் கொண்டிருப்பது அவன் அறிந்ததுதான். ஆனால் நளினியும் நந்தினியும் என்ன ஆனார்கள்? மாலையும் கழுத்துமாக மதுவின் கையைப் பிடித்துக் கொண்டு மாக்கோலத்தின் நடுவில் நின்றபோது அவன் கண்கள் ரேழியில் நின்றிருந்த இரண்டு தங்கைகளையும் கண்டன. இருவரும் பாசம், பரிவு, அன்பு, சந்தோஷம் எல்லாவற்றையும் துடைத்து விட்டாற் போல் ஒருவித அலட்சிய பாவத்துடன் நின்றிருந்தனர்.

மாமனாரின் எதிரில் அவமானப்பட்டாற் போல் சங்கடப்பட்டபோது தம்பியின் கணீரென்ற குரலும், மரியாதை கலந்த வரவேற்பும் மகிழ்ச்சி பொங்கும் முகமும் ஒரு கணம் திணற வைத்ததை அவனால் உணர முடிந்தது.

பயமும் தயக்கமுமாக மதுரா உள்ளே நுழைந்தாள். வைர நெக்லஸ், வைர வளையல்கள், தோடு, ஜிமிக்கி, வைர ஊசி பட்டுப் புடவை, நீண்ட பின்னலில் மல்லிகையும் கதம்பமும் சுமையாக, அழகும் யௌவனமும் தளதளக்க வந்த மருமகளை தூண் மறைவிலிருந்தே கோமதி, ''வாம்மா மதுரா'' என்றாள். அந்த ஒற்றைச் சொல்லோடு அவள் வரவேற்பும் முடிந்தது.

''வீடு எல்லாம் சௌகரியமா இருக்காம்மா...'' கணேசன் வினவினார்.



புள்ளிகளற்ற கோலம்

-ஜோதிகுமார்

"ஓ... எல்லாம் சௌகரியமா இருக்கு. நீங்க எல்லாரும் சாப்பிட உட்காருங்கோ..." கோமதி சமையல் அறைக்குள் புகுந்து கொண்டாள்.

ஒட்டுதலே இல்லாமல் இருக்கும் அந்தக் குடும்பத்தில் தன் மகள் — அதிலும் வாய் பேச முடியாத பேதைப் பெண் — சந்தோஷமாக வாழ்க்கை நடத்துவாளா என்று சில நிமிஷங்கள் கணேசனின் உள்ளம் அலைபாய்ந்தது. ஆனால் அதைப் பெரிய பிரச்சினையாக வளர்த்துக்கொள்ளவில்லை. 'நளினிக்கு இருபத்தைந்து வயதாகி விட்டது. அவளுக்குக் கல்யாணம் பண்ணாமல் தினகர் பண்ணிக் கொண்டது நளினிக்கு வேதனையாக இருக்கலாம். நந்தினிக்கு இருபது வயது. இளம் பெண் வெட்கத்தினால் ஒதுங்கி யிருக்கலாம்.' இப்படித்தான் கணேசன் சமாதானப்படுத்திக்கொண்டார். அடுத்த மாதமே நளினிக்குத் திருமணம் நடக்கும். பிறகு கலகலப்பாகி விடுவாள். பழகியதும் நந்தினியும் மதுராவிடம் ஒட்டிக் கொண்டு விடுவாள்— கணேசன் தனக்குள் எண்ணிக் கொண்டார்.

தினகர் நல்லவன். கெட்டிக்காரன். குடும்பத்துக்காக, கூடப் பிறந்த தங்கைகளின் நன்மைக்காக ஊமைப் பெண்ணை மணக்க முன்வந்தவன். நிச்சயம் மதுராவிடமும் கருணையோடு நடந்து கொள்வான் என்று சந்தோஷமடைந்தார். ஒண்டுக் குடித்தனத் தனிலிருந்து, திடீரென்று லாட்டரி சீட்டு அடித்தாற்போல மதுராவினால்பெரிய பங்களாவும்வசதியான வாழ்க்கையும் கிடைத்ததால் இவையெல்லாம் கனவோ என்று பிரமை இருக்கும். நிஜம்தான் என்று உணர்ந்ததும் எத்தனை மகிழ்ச்சி அடைவார்கள்! இத்தனைக்கும் காரண கர்த்தாவான மதுராவிடம் அவர்கள் அன்பைப் பொழிய மாட்டார்களா... கணேசன் நம்பினார்.

தன் பெண் மதுராவை தினகரன் வீட்டு மருமகளாகக் கொண்டு விடுவதற்கு இரண்டு நாள் முன்னதாகவே மாம்பலத்தில் அந்த பங்களாவைச் சொந்தமாக்கி, இரண்டு லாரி நிறைய சாமான்களை கொண்டு வந்து இறக்கி யிருந்தார். தினகரின் குடும்பத்தையும் குடியேற்றி விட்டார். ஹாலில் சோபாக்களும், பிரம்பு நாற்காலிகளும், தொலைக்காட்சிப் பெட்டியும் கம்பீரமாக உட்கார்ந்திருந்தன. உள் அறைகளில் கட்டில்கள், பீரோக்கள், பீரோ நிறைய விதம் விதமான ஆடைகள், சமையல் அறையில் குளிர்ப்பதனப் பெட்டி, வலை பீரோ, காஸ், மிக்ஸி, ஸ்டீம் பாத்திரங்கள் நிறைந்திருந்தன.

வழவழவெனப் பளிங்குத் தரை, கண்ணாடி போல சுவர்கள். சுவரில் பதிக்கப்பட்ட வாஷ்பேஸின், தண்ணீர் கொட்டும் குழாய்கள். விசாலமான மாடி சுற்றிலும் தோட்டம். நந்தினியும் நளினியும் திக்குமுக்காடிப் போனார்கள். உள் மனத்தில் குதூகலமும் சந்தோஷமும் நிரம்பி யிருந்தாலும் மேலுக்கு அலட்

யமாக நடந்து கொண்டவர். ஆனந்தத்தை மனம் விட்டு, வாய் விட்டு அனுபவித்த ஒரே நபர் சிறுவன் ஜவஹர்தான். ஒவ்வொன்றையும் தொட்டுத் தொட்டு பார்த்துச் சந்தோஷப்பட்டான். இத்தனை வசதிகளையும் அளித்த கணேசனிடம் மரியாதை ஏற்பட்டது. மன்னி மதுராவிடம் அன்பு உண்டாயிற்று. அண்ணன் தினகரனை ஒரு தியாகியாகப் போற்றிப் பெருமை அடைந்தான்.

2

விருந்துச் சாப்பாடு முடிந்ததும் கணேசன் தினகரிடம், ''தினகர்! வர்ற வெள்ளிக் கிழமை நாள் நன்னயிருக்கு. நளினிக்கு நிச்சயதார்த்தம் வச்சுக்கலாம். பிரகாஷ் வீட்டாரிடம் சொல்லிவிடுங்கள். நீங்க கவலையே படவேண்டாம். எல்லாம் நான் ஏற்பாடு பண்ணிடறேன்...'' என்று சொன்னபோது தினகர் பணிவாகத் தலையை ஆட்டினுன்.

''அப்ப... நான் புறப்படறேன்....'' என்ருர்.

கோமதி அவருக்கு விடை கொடுப்பது போல் தலைப்பை இழுத்துப் போர்த்தியபடி வந்து நின்ருள். மதுரா முன் அறை அருகில் நின்றிருந்தாள். அவளிடம் சென்ருர். தலையைக் கோதி விட்டார். கண்கள் குளமாயின. அவருக்கு அவளிடம் என்ன பேசுவது என்றே தெரியவில்லை. ''நான் வரேம்மா மதூ! சமத்தா நடந்துக்கோ... அடிக்கடி வரேன்...'' என்ருர். ''தினகர் உன்னை அழைச்சிண்டு வருவான்'' என்ருர். மேலே எதுவும் பேச முடியாதபடி நெஞ்சு தழுதழுத்தது. மதுரா புன்னகை செய்தாள். அவள் பார்வை ஜவஹரிடம் இருந்தது.

மதுரா இல்லாமல் களையிழந்து காணப்பட்ட தன் பங்களாவில் படுக்கை அறைக்குச் சென்று படுத்தார் கணேசன். அவர் கடமை முடிந்தது. அதை நிறைவேற்ற அவர் பட்ட பாடுகள் கொஞ்சமா... வேதனைகள் கொஞ்சமா? எல்லாம் வெகு விமரிசையாக நடந்து விட்டது. தினகர் மாப்பிள்ளையாகக் கிடைத்தது அவர் செய்த புண்ணியம். மறைந்த மனைவி தங்கம்மாவின் ஆத்மா திருப்தி அடையும்.


அன்பு மனைவியோடும் அருமை மகளோடும் அவர் ஆனந்தமாக வாழ்ந்த வருஷங்கள் ரொம்பவும் கொஞ்சமே. மதுராவின் மதுரக் குரலை மழலை மொழிகளைக் கேட்டு ரசித்த நாட்களை எண்ணி எண்ணி இன்பமடைவதோடு அவர் திருப்திப்பட நேர்ந்தது. சிட்டுக் குருவி போல சுற்றித் திரிந்து ''அப்பா, அப்பா... அந்த அணில் ஏன் வாலைத் தூக்கிண்டு ஓடறது?...?'' என்று கழுத்தைக் கட்டிக் கொள்வாள்.

''அப்பா இன்னைக்கு டீச்சர் புது ரைம் சொல்லிக் கொடுத்தாங்க'' என்று இரண்டு சின்னக் கைகளை ஆட்டி ஆட்டி அந்த ரைமைச் சொல்லுவாள்.

21 - 5 வரிசை. நேர்ப் புள்ளிகளாக வைக்க வேண்டும் – 5 புள்ளிகள் வரை.

-ஜோதிகுமார்





17-1 புள்ளி நேர்புள்ளிகளாக வைக்கவேண்டும்.

-ஜோ திருமார்

கணேசன் அள்ளி அணைப்பார். திருஷ்டி பட்டாற் போல அவர் வாழ்க்கையில் அந்த விபத்து நேர்ந்தது. தீபாவளி சமயத்தில் நேர்ந்த அந்தத் தீவிபத்து எப்படி எதனுல் ஏற்பட்டது என்று யாராலும் சொல்ல முடிய வில்லை.


ஏழு வயது மதுராவும் தாய் தங்கம்மாளும்தான் வீட்டில் இருந்தார்கள். அது ஒரு ஸ்டோர். தனித் தனி வீடுகளாக, எதிர் எதிராக பத்து வீடுகள் இருந்தன. நல்ல வசதி இருந்தது. அப்போது கணேசன் மத்தியதர குடும்ப ஸ்திதியில்தான் இருந்தார். பெரிய தொழிலதிபராக, பங்களாவும் காருமாக செல்வத்தில் புரளும் லட்சாதிபதியாக இருக்கவில்லை. அவர் ஆபீசுக்குப் போயிருந்தபோது தங்கம்மாள் தூங்கிக் கொண்டிருந்தாள். மதுரா வாசல் அறையில் அப்பா வாங்கி வைத்திருந்த மத்தாப்பூ, சூரியகாந்தி வாணச் சக்கரங்கள் எல்லாவற்றையும் பரத்தி வைத்துக்கொண்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள். கை துருதுருக்க, மத்தாப்புப் பெட்டியை எடுத்து கிழித்து பூவாகவும், சிவப்பாகவும் ஒளி விடுவதைச் சந்தோஷமாக ரசித்துக் கொண்டிருந்தவள் அடுத்த வீட்டுப் பெண் உமா கூப்பிடவே எழுந்து ஓடி விட்டாள். மத்தாப்புப் பொறி வாணங்களில் பட்டிருக்க வேண்டும். லேசாகப் புகைந்து, பிறகு கனிந்து படபட்வென்று வெடித்து தெறி அடுத்திருந்த துணியில் பற்றி ஜிகுஜிகுவென்று எரியத் தொடங்கி, படுத்திருந்த தங்கம்மாளின் புடவையில் பற்றி ஜ்வாலையுடன் பரவி விட்டது. தூக்கக் கலக்கத்தில் ஒன்றும் புரியாமல் தங்கம் ஓவென்று அலறி ஓட, காற்று வேகத்தில் உடல் முழுவதும் பரவி விட்டது. கூச்சலையும் புகையையும் நெருப்பு வாசனையையும் அறிந்து, மற்ற வீட்டுப் பெண்களும் ஆண்களும் ஓடிவர, இன்னதென்று புரிந்து அவர்கள் ''நெருப்பு... ஐயோ நெருப்பு....'' என்று பீதியுடன் இங்கும் அங்குமாக ஓட ஒரே ரகளையாகி விட்டது.

''தங்கம்... ஐயோ... தங்கம்மா...தங்கம்மா... மதுரா... மதுரா... ''எல்லோரும் அலறினர்கள்.

மதுரா உமாவோடு ஓடிவந்தாள்.

''இதோ மதுரா இருக்காளே... தங்கம்தான் உள்ளேயே அகப்பட்டுக் கொண்டு விட்டிருக்கிறள். ஐயோ தங்கம்...'' பெண்மணிகள் கூப்பாடு போட்டார்கள். அவரவர் வீட்டில் பரவி விடாதபடி மணலை அள்ளி அள்ளிப் போட்டார்கள். யாரோ ஒருவன் தீயணைக்கும் ஆபீசுக்குப் போன் செய்ய ஓடினன். மதுரா முதலில் ஒன்றும் விளங்காமல், பேந்தப் பேந்த விழித்தவள் தன் அம்மா வீட்டினுள் தூங்கிக் கொண்டிருந்தது நினைவில் வர சட்டென்று பயந்து ''அம்மா... அம்மா....'' என்று அலற ஆரம்பித்தாள்.

உமாவின் தாய் அவளை அணைத்துச் சமாதானப் படுத்த முயன்றாள். அதற்குள் தீயும் கொஞ்சம்



15-8 புள்ளி - கே. பி. பரமேஸ்வரி

உள்ளது. ஆனால் பேச இயலா பெண்ணை யார் பண்ணிக் கொள்வார்கள்? பணத்திற்காக யாராவது வரலாம். வருபவன் நல்ல குணமும் பண்பும், மதுராவைக் கண் கலங்காமல் வைத்துக் காப்பாற்றும் கருணை உள்ளவனாக இருக்க வேண்டுமே? எப்படித் தேடுவது... என்ன செய்வது... கவலை அவரை வாட்ட ஆரம்பித்தது. அப்போதுதான் தினகரன் எதிர்ப் பட்டான்.

3

அவருடைய கம்பெனியில் மானேஜர் பதவிக்குச் சிலரை இன்டர்வியூ செய்தார். வந்தவர்களில் தின கரனைத் தேர்ந்தெடுத்தார். தினகரன் வாட்டசாட்ட மான இளைஞன். கம்பீரத் தோற்றம். பணிவான பேச்சு. அவனுடைய திறமையில் கம்பெனி நன்றாக நடந்தது. சிறிது சிறிதாக அவனிடம் நட்புரிமை யோடு பேசி குடும்ப விவரங்களையும் அறிந்துகொண் டார். இவன் மாப்பிள்ளையாக வாய்த்தால் அவரு டைய தொழிலும் வளரும், மதுராவும் நல்ல வாழ்க்கை அனுபவிப்பாள்... ஆனால் தினகரன் சம் மதிப்பானா... எப்படி அவனை அணுகுவது? இதே சிந்தனை இரவும் பகலும்.

பணத்தினால் சாதிக்க முடியாதது எதுவுமில்லை என அவர் அறிவார். ஆனாலும் அருமை மகளின் வாழ்க்கைப் பிரச்னையாயிற்றே. மெது மெதுவாக தினகரனைத் தன் வசம் இழுக்க ஆரம்பித்தார். ஆபீசில் தினகரனுக்குச் சலுகைகள் கிடைத்தன. அவ னுடைய திறமையை அடிக்கடி மெச்சி முக்கியமான விஷயங்களைக் கூட அவன் பொறுப்பில் விட்டுக் கவ னிக்கச் செய்தார். ஒன்றிரண்டு வருஷங்களில் அவ ருக்கு வலது கை போல ஆனான் தினகர்.

ஆபீஸில் மற்ற சிப்பந்திகளிடையே கசமுச எழுந் தது. தினகரனைச் செல்லமாகச் சீண்டி விளையாடி னார்கள்.

"தினு! என்னப்பா... எப்பக் கல்யாணம்....?" என்பார்கள். தினகர் திகைப்பான்.

"கல்யாணமா... யாருக்கு..."

"ஹே...ஹே... பப்பா... ஒண்ணும் தெரியாத மாதிரி பேசறான். நிஜம்மா தெரியாது....? போட் டிக்கு வரமாட்டேன் பா. எனக்குக் கல்யாணம் ஆயிடுத்து...." என்பான் வேணு.

"தினகரனைப் போல அதிர்ஷ்டம் செய்திருக் கணும்... எனக்குக் கூடக் கல்யாணமாகலை.... ஆனா இவனைப் போலக் கெட்டிக்காரன் இல்லையே...." ஏக்கப்படுவது போல கூறுவான் மணி. மற்றவர்கள் ஆளுக்கொரு வார்த்தை சொல்லுவார்கள்.

"புரியும்படியாகச் சொல்லுங்க..." தினகரன் வினவுவான்.


கொஞ்சமாக அணைந்தது. தீயணைக்கும் படையினர் வந்து உள்ளே புகுந்து வெந்து கருகிய உடலாக தங்கம்மாளை வெளியே எடுத்து வந்தபோது, குழந்தை மதுரா அலறினாள். ''அம்மா.... அம்....மா....'' மயங்கி விழுந்தாள். அவ்வளவுதான். அதற்குப் பிறகு அவள் வாய் பேசவில்லை.

சில நிமிஷங்களில் கணேசனும் பதறியபடி வந்தார். உயிரிழந்த மனைவியையும் ஊமையாகி விட்ட மகளையும்தான் அவர் காண நேர்ந்தது. டாக்டரிடம் குழந்தையை அழைத்துப் போய் வந்தார். அதிர்ச்சியினால் ஊமையாகி விட்டாள் என்று சொன்னார்கள். ஏதேதோ சிகிச்சை அளித்தனர். ஆனால் ஒன்றும் பயன் அளிக்கவில்லை. மூளையைப் பாதிக்காமல் இருந்ததே ஆச்சரியம் என்று டாக்டர்களும் நண்பர்களும் கணேசனைத் தேற்றினார்கள். அருமை மகளை அணைத்துக்கொண்டு கண்ணீர் வடிப்பார் கணேசன். மதுரா தன் பிஞ்சு விரல்களால் தந்தையின் கண்ணீரை துடைப்பாள். கணேசன் மறுமணம் செய்துகொள்ளவில்லை. அவரே தாயாகவும் தந்தையாகவும் மதுராவை வளர்த்தார். வாய்தான் ஊமையாகி விட்டதே தவிர மதுரா படு சுட்டியாக வளர்ந்தாள். எஸ். எஸ். எல்.சி. வரை படித்துத் தேறினாள். கல்லூரியில் சேர்ந்து படிக்க விரும்பாமல் தபால் மூலம் படித்து பரீட்சை எழுதி பி. ஏ. முடித்தாள். தங்கம் இறந்த மறு வருஷமே கணேசனை அதிர்ஷ்ட தேவதை பூரணமாக ஆட்கொள்ளத் தொடங்கினாள். உத்தியோகத்தில் பிரமோஷன் கிடைத்தது. பிறகு தனியாக தொழில் தொடங்கினார். தொட்டதெல்லாம் பொன்னாயிற்று. கார் பங்களா என்று வசதிகள் கூடின. சமையலுக்கு ஒரு அம்மாளை ஏற்பாடு செய்தார். மதுரா தன் கையினால்தான் தந்தைக்குப் பரிமாறுவாள். வீட்டை அழகாக அலங்கரிப்பாள். பொழுது போக கைவேலைகளைக் கற்றுக் கொண்டாள். மதுரா பெரிய பெண்ணாகி வீட்டை நிர்வகிக்கும் திறமை வந்ததும் கணேசனுக்குத் தொழிலின் முன்னேற்றத்துக்கு தன் முழு நேரத்தையும் செலவிட முடிந்தது.

மதுரா ஜாடை காட்டியோ, ஆ...ஊ.. என்று ஒலி எழுப்பியோ பேசுவதில்லை. கண் அசைவு, தலையை ஆட்டுவது மூலமே பேசுவாள். சிரிப்பிலேயே அவள் என்ன கேட்கிறாள் என்று கணேசனுக்கு விளங்கும். மதுரா பதினெட்டு வயதுப் பருவ மங்கையாக யௌவனம் பூத்துக் குலுங்கும் இளம் பெண்ணாக வளர்ந்து நின்றபோது கணேசனுக்குப் புதுக் கவலை பிறந்தது. தொழிலிலேயே வாழ்க்கையை அர்ப்பணித்த அவர் அருமை மகளின் எதிர்காலம்—கல்யாணம் ஒரு பெரிய பிரச்சினையாக முன் நின்றது. பணம் குவிந்திருக்கிறது. அழகு மலர்த் தோட்டமாகப் பூத்து இருக்கிறது. படிப்பு, திறமை, வீணைத் தேர்ச்சி எல்லாமே

15-1 புள்ளி – நேர்ப் புள்ளிகளாக வைக்க வேண்டும்.

—ஜோதிகுமார்.



''நம்ப எம். டி.க்கு ஒரு பொண்ணு... ஒரே பொண்ணு... ரொம்ப அழகா இருக்கும். படிச்சிருக்கு உன்னே மாப்பிள்ளையாக்கிக் கொள்ள நினைக்கிறாரோ என்னவோ.. உனக்குத் தெரியாதா?''

''நான் எங்கே... அவங்க எங்கே... மலேக்கும் மடுவுக்கும் முடிச்சுப் போடாதிங்க...'' தினகரன் கூறுவான்.

''அவருக்குச் சமமா உன்னேயும் உயர்த்தி விடுவாரு. அப்புறம் என்ன....''

''சே...சே... அவர் அந்தஸ்துக்கு லட்சாதிபதி வீட்டில்தான் மாப்பிள்ளே தேடுவார்.''

''தினகர்! உனக்குத் தெரியாது... அவர் பொண்ணு ஊமை. பேச முடியாதவள்...'' மணி சொன்னபோது தினகர் திகைத்தான்.

''பாவம்'' என்முன் இரக்கத்துடன்.

அவன் இரண்டு முறை மதுரா தந்தையோடு காரில் வரும்போது பார்த்திருக்கிறான். பொன்னிறமும், புன்னகையுமாக, பருவச் செழிப்புடன் மின்னும் அழகியான அந்த இளம் பெண் ஊமையா?— கணேசனுக்கு அப்படி ஒரு எண்ணம் இருக்குமோ... அவன் மனத்தில் ஒரு எண்ணம் துளிர் விட்டது.


தினகரனின் குடும்பம் நவக்கிரக தந்திபோல் இருக்கும். அவன் வீட்டில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு குணம் படைத்து ஒருவரோடு ஒருவர் ஒட்டாமல் தாறுமாருக இருந்தார்கள். தினகரனின் தந்தை ராமசாமி கலகலப்பானவர். பேசிப் பேசியே போர் அடித்து விடுவார். ஆனல் இரக்கமும் பாசமும் நேசமும் உடையவர். அவரைச் சுற்றி எப்பவும் நண்பர்கள் குழு இருக்கும். பணத்தையும் சேமிக்கத் தெரியாதவர். அவர் வாயைப் போல பர்ஸின் வாயும் எப்பவும் திறந்திருக்கும். தாராள குணம்.

அம்மா கோமதி நேர்மாருனவள். வாயைத் திறக்கவே மாட்டாள். பொன் உதிருமோ என்று மற்றவர்கள் கேலி செய்யும் அளவுக்கு மூடி டைப். வீட்டில் கணவனேயோ குழந்தைகளையோ கூடக் காரணமின்றிக் கூப்பிட்டுப் பேச மாட்டாள்.

பெண்கள் நளினியும் நந்தினியும் சுயநலமே உருவான படைப்புக்கள். நளினிக்குப் பொறுமையும் பேராசையும் அதிகம். அவளுக்குக் குரலும் இல்லை ஞானமும் இல்லை. ரசிக்கவும் தெரியாது. ஆனல் அவளையொத்த பெண்கள் பாடினல் வீட்டுக்கு வந்து அழுவாள். வேறு கலைகளில் தேர்ச்சி யிருந்தால் பொறுமையில் வெடித்துக் குமுறுவாள். பணக்காரப் பெண்களைக் கண்டால் தன் வீட்டில் இத்தனை வசதியில்லையே என்று அப்பாவை அம்மாவைத் திட்டித் தீர்ப்பாள். ஏழை வீட்டில் பிறந்ததற்காகத் தன்னையே வெறுத்துக் கொள்வாள். இப்படி ஒரு பெண்ணு என்று ராமசாமி உள்ளூர வருந்துவார்.

(15-8 புள்ளி. இடைப்புள்ளி) -கரோலின் புனிதா





15 புள்ளி-3வரிசை

என். தேவகுமாரி

அடுத்தவள் நந்தினி அத்தனை மோசமில்லை என்றாலும், நல்ல பண்போ, அடக்கமோ கிடையாது. துடுக்குத்தனமாகப் பிறர் மனம் புண்படும்படி பேசும்போது ராமசாமி கண்டித்தால் அவரையே எதிர்த்துப் பேசிவிடுவாள். இருவரும் எஸ். எஸ். எல். ஸி. பாஸ் செய்த பின்னர் கல்லூரியில் சேர்த்துவிட ராமசாமி முயற்சி செய்தார். அவர்களுக்குப் படிப்பில் நாட்டமில்லை. வீட்டிலேயே தின்று, தூங்கி, வம்பு பேசியே நாட்களைக் கடத்தினார்கள். தாயை அவர்கள் ஒரு மனுஷியாகவே எண்ணுவதில்லை.

தினகரன் படிப்பில் கெட்டிக்காரனாக இருந்தான். ஆனால் கொஞ்சம் தாயின் குணம் அவனுக்கும் இருந்தது. அமைதியை விரும்பும் அவனுக்கு சகோதரிகளின் அட்டகாசம் வெறுப்பைத் தந்தது. ராமசாமிக்கு மகனின் திறமையில் சந்தோஷம் ஏற்பட்டது. ஆனாலும் சின்ன மகன் ஜவஹரிடம் அவருக்குத் திருப்தி இருந்தது. அவன்தான் தந்தையின் குணத்தைக் கொண்டிருந்தான். கலகலப்பாக இருந்தான். எல்லாரிடமும் மரியாதையாகவும் பணிவாகவும் நடந்தான். சின்ன வயதானாலும் இரண்டு தமக்கைகளைக் கண்டிப்பான். ஆனால் அவர்கள் அவனை லட்சியமே செய்ய மாட்டார்கள். பண வசதி இல்லை. குடும்பத்தில் குணம் குறைகள் எல்லாமாக ராமசாமியின் இதயத்தை பலவீனப்படுத்தி ஒரு நாள் திடீரென்று விடுதலை பெற்றது போல் ஹார்ட் அட்டாக்கில் இறந்து போனார்.

தினகரின் தலையில் குடும்பச் சுமை ஏறியது. அப்போது பதினைந்து வயது ஜவஹருக்கு அண்ணாவின் நிலை துயரத்தை அளித்தது!

4

தங்கைகளின் விஷயத்தில் என்ன செய்வது என்று அவன் குழம்பிக் கொண்டிருந்த சமயத்தில் ஆபீசில் சக சிப்பந்திகள் அவனை முதலாளியின் மாப்பிள்ளை என்று சீண்டிப் பரிகசித்தபோது அவனுக்குச் சிரிப்பதா அழுவதா என்றே விளங்கவில்லை. இரண்டு வருஷங்களாக அவனிடம் நெருங்கிப் பழகி சிறிது சிறிதாகப் பதவிகளை உயர்த்திக் கொண்டு வந்த கணேசன் ஒரு நாள் மனம் விட்டுப் பேசினார்.

"தினகர்! நான் ரொம்ப துர்ப்பாக்கியசாலி... வாழ்வில் நான் இன்பம் அனுபவித்தது சில வருஷங்கள் தான். சாதாரண குமாஸ்தாவாக இருந்தபோது எனக்கு ஏற்பட்ட சந்தோஷமும் நிம்மதியும் இப்போது செல்வத்தில் புரளும்போது இல்லை. என் மனைவி விபத்தில் இறந்து ஒரே அருமை மகள் ஊமையான போனதும் என் வாழ்க்கையே இருண்டு விட்டது. நான் எதிர்பார்க்காமலேயே, விரும்பாமலேயே பணம் இப்போது குவிகிறது. என் தொழில் பிரபலமாகி விட்டது. எனக்கு ஒரே ஒரு அதிர்ஷ்டம் உன்னை நிர்வாகத்தில் சேர்த்துக் கொண்டதுதான்.

தொழிலில் எனக்குப் பிறகு உன்னைத்தான் வாரிசாகத் தேர்ந்தெடுத்து விட்டேன். இந்தக் கம்பெனிப் பொறுப்புமுழுதும் உனக்குத்தான். ஆனு....ஆனல்...'' சிறிது நிறுத்தினர்.

வியப்புடன் அவரைப் பார்த்துக் கொண்டிருந்தவன் அவர் கண் கலங்குவதையும் நெஞ்சு தவிப்பதையும் உணர்ந்து ப்ரிஜ்ஜிலிருந்து ஜூஸ் ஒரு டம்ளர் ஊற்றி நீட்டினன். புன்னகையுடன் பெற்றுக் கொண்டவர், ''தினகர்! நீயும் எடுத்துக்கொள்ளப்பா'' என்ருர். அவனும் டம்ளரில் ஜூஸுடன் உட்கார்ந்தான். இருவரும் அருந்திய பின்,


''கம்பெனிக்கு உன்னை அதிபதி ஆக்கி விட்டேன். ஆனல் என் மகள் கல்யாணத்துக்கு என்ன செய்வது? எனக்குப் பிறகு அவள் கதி என்ன ஆகும் தினகர்? அவளால் பேச முடியாதே தவிர வேறு ஒரு குறையும் இல்லை. நீகூடப் பார்த்திருக்கிருயே... வீட்டு நிர்வாகம் அவள்தான். வீட்டில் இருந்து கொண்டே படித்தும் தேறியிருக்கிருள். அவளுக்குத் தெரியாத கைவேலைகள் இல்லை. நன்ருகச் சமைப்பாள். வீணையும் வாசிப்பாள் என் சொத்துக்கு அவள் ஒருத்திதான் வாரிசு. என்ன பயன்? ஊமைப் பெண்ணை மணந்து கொள்கிருயா என்று நான் யாரைக் கேட்க முடியும்? அவள் பிறவி ஊமை இல்லை. தீவிபத்தில் அம்மாவைக் கரித் துண்டமாகக் கண் எதிரில் பார்த்த ஏழு வயதுக் குழந்தை எப்படி மனம் தவித்திருப்பாள்? அந்த அதிர்ச்சியில் வாய் அடைத்துப் போய் விட்டது. அதற்கு வைத்தியம் எதுவும் பயன் தரவில்லை. திடீரென்று ஒரு நாள் பேச வரலாம். வராமலும் இப்படியே இருந்தாலும் இருக்கலாம். தெய்வ சித்தம் எப்படியோ.

பணம் இருந்தால் கல்யாணம் ஆகுமான்னு எத்தனை பெண்கள் வேதனைப்படுகிருர்கள். கண்ணீர் விடுகிருர்கள் பெற்றவர்கள். நான் பணமிருந்தும் என் பெண்ணுக்காக அழுகிறேன். நினைத்தால் ஒரு சமயம் வேடிக்கையாக இருக்கிறது இல்லையா?.. உம்.. என்னவோ என் சோகத்தை உன்னிடம் கொட்டி விட்டேன்... சரி... டயமாச்சு இல்லையா... கிளம்பலாம்....'' எழுந்தார் கணேசன்.

தினகரனும் கிளம்பினன். ஆனல் அவர் கடைசியாகச் சொன்ன சில வார்த்தைகள் அவன் உள்ளத்தில் நமநமவென்று சலனத்தை உண்டாக்கி விட்டது.

இரண்டு நாட்கள் அவன் மனத்தில் அந்த வார்த்தைகளே நிறைந்திருந்தன. அவளைச் சிந்திக்கத் தூண்டியது. அவர் வாய் விட்டுக் கேட்காவிட்டாலும் அவர் எண்ணம் என்ன என்பதை அவன் புரிந்து கொள்ள முடிந்தது. சொத்துக்கும் கம்பெனிக்கும் வாரிசாக, கூடவே பெண்ணுக்குக் கணவனுகத் தன்னை எதிர்பார்க்கிருர் என்று விளங்கவே, முதலில் 'ஊமைப் பெண்' என்று சிறிது தயக்கம் ஏற்பட்டது. ஆனலும் அவனுக்குப் பணம் தேவையாக இருந்தது. நளினி, நந்தினி இருவருக்கும் கல்யாணம் செய்ய

(11 புள்ளி - 11 வரிசை) -தேவகுமாரி



வேண்டும். குறைந்தபட்சம் இருவருக்கும் அறுபது எழுபது ஆயிரமாவது வேண்டும். அம்மா...டி அத்தனை பைசா கூட அவனிடம் இல்லையே.

தினகரன் முடிவு செய்து விட்டான்.

''உன் இஷ்டம் எப்படியோ அப்படியே செய்யப்பா. குடும்பப் பொறுப்புள்ள பிள்ளை. ஆனாலும் இதனால் உன் விருப்பங்களையோ ஆசைகளையோ தடுக்க என்னால் முடியாது. இதன் விளைவுகளுக்கு நான் பொறுப்பில்லை'' வழக்கம் போல் அம்மா ஒதுங்கி விட்டாள்.

தம்பி ஜவஹர்தான் அதிர்ச்சியினால் கூவினான்.

''என்னண்ணா? இந்தப் பிடாரிகளுக்காக உன் வாழ்க்கையை நீபாழாக்கிக் கொள்ளப் போகிறாயா... நல்லா யோசித்தாயா?''

நளினியும் நந்தினியும் மதுராவைக் கல்யாணத்தின்போது பார்த்தனர். ''ஊமையாக இருந்தால் என்ன, பணம் பேசுகிறதே போதாதா...'' என அவள் காது படவே பேசியபோது மதுரா மனம் துடித்துப் போனாள்.

தினகரனின் முகத்திலும் சந்தோஷமோ மகிழ்ச்சியோ இல்லை என்பதையும் பேதைப் பெண் உணர்ந்தாள். ஆனால் அவனை அவள் தவறாக எண்ணவில்லை. அழகான இளைஞன். படிப்பும் பட்டமும் திறமையும் இருக்கிறது. அவன் மனத்தில் எத்தனையோ இனிய கற்பனைகள் இருக்கும்... சிரித்துப் பேசி கொஞ்சி மகிழ்ந்து, அரட்டை அடித்து ஊடல் கொண்டு... இப்படியெல்லாம் மனைவி இருக்க வேண்டும் என்று ஆசை இருக்காதா? அவளுக்கு அழகும் இளமையும் இருப்பது நிஜம்தான். கண்களாலேயே பேசிச் சிரித்து மகிழ்விக்க முடியும்தான். ஆனாலும் காதலோடு கொஞ்சலும், கெஞ்சலுமாக வாய் திறந்து பேசுவதில் உள்ள இன்பத்துக்கு இணையாகுமா?

அன்றிரவு இனிமையான உறவின் முதல் நாள். அலங்கார, அழகுப் பதுமையாக அருகில் வந்து வணங்கி எழுந்த மதுராவிடம் தினகர் வெகு சாதாரணமாக, ''எனக்கு மனம் சரியாக இல்லை. நீ படுத்துத் தூங்கு'' என்று கூறிவிட்டுத் தன் படுக்கையில் மறுபுறம் திரும்பிப் படுத்துக் கொண்டான். மதுரா ஒரு கணம் செயலிழந்து தவித்தாள். துயரம் கண்ணீராகப் பொங்க வேறு உடை மாற்றிக் கொண்டு படுத்துக் கொண்டாள். உள்ளம் வேதனையில் அலை பாய்ந்தது. கடமை, தியாகம் என்றெல்லாம் எண்ணி அவளை மணந்துகொண்டுவிட்டாலும் அவளைப் பொறுத்தவரை நஷ்டம்தான்' என்று அவள் அவனுக்காக இரக்கம் கொண்டாலும், தானும் ஏமாந்து விட்டோம் என்பதை உணர்ந்தபோது அளவு மீறிய துக்கம்தான் பொங்கி வந்தது. நாளடைவில் அவன் மனம் சமாதானமடைந்து விடும். அவனிடம் அன்பும் பாசமும் ஏற்பட்டு விடும். அதுவரை பொறுமையாக இருக்க அவள் தீர்மானித்துக் கொண்டாள்.

கறிவேப்பிலையை இலையை மட்டும் உருவி ஈரம் இல்லாத வெள்ளை பாட்டிலில் போட்டு மூடி வைத்தால் பசுமை மாறாமல் இருக்கும்.

சரோஜா

மதுரா அழுது ஆர்ப்பாட்டம் செய்து தன்னை வெளிப்படுத்தி விடுவாள் என்று தினகரனுக்கு முதலில் பயம் இருந்தது. ஆனால் அவள் ஏமாற்றத்தின் நிழலே படாமல் மகிழ்ச்சி பிரகாசமாக இன்முகத்தோடு மறுநாளும் அதற்குப் பிறகும் வளைய வந்தபோது அவன் நிம்மதி அடைந்தான். பகல் வேளைகளில் அவன் செயல்களில் சந்தேகம் ஏற்படாததற்குக் காரணமே மதுரா வாய் பேச முடியாத பெண் என்பதுதான். புது மனைவியிடம் சீண்டி, விளையாடி, கொஞ்சி, அதட்டி மிரட்டி நடந்து கொள்ளவில்லை என்று யாரும் அவனைச் சந்



தேகப்பட முடியாதே. அவன் எப்போதும் போல அமைதியாக இருந்தான். மதுரா அவனுடைய தேவைகளைத்தானாகவே செய்ய முன் வந்தபோது அவன் தடுக்கவில்லை. அவர்களுடைய மௌன நாடகம் இரவிலும் தொடர்ந்தது. தினகரன் மதுராவை வெறுக்கவில்லை. ஆனால் அவனிடம் விருப்பமும் உண்டாகவில்லையே.

ஆணவம் பிடித்த தங்கைகள் காரணமா..? அவர்களுக்காக செய்ய வேண்டியிருந்த கடமை காரணமா? அவன் குடும்ப பலவீனத்தைப் பயன்படுத்தி, அவனைத் தன் பணத்துக்கு அடிமை ஆக்கிக் கொண்ட கணேசன் காரணமா... எதனாலோ அவனுக்கு வாழ்க்கையில் வெறுப்புதான் உண்டாயிற்று. அவனுடைய வெறுப்புக்கும் எரிச்சலுக்கும் பலியானாள் மதுரா. குடும்ப கௌரவம், தன்மானப் பிரச்னை, விதியின் சொல் என்று சாதாரணமாக பெண்கள் கணவர்களின் கொடுமைகளைத் தாங்கிக்

> **பழமொழி**
> யானை ஆடிஆடி விழுங்கும்.
> வீடு இருந்து கொண்டே விழுங்கும்.
> டி.வி. சர்மா

கொண்டு ஊமையாக வாழ்வார்கள். மதுரா இயற்கையிலேயே அடக்கமான பெண். இப்போது உணர்ச்சிகளையும் அடக்கிக் கொள்ளத் தொடங்கினாள். பெற்ற தந்தைக்காக அவள் நடிக்கவும் முற்பட்டாள். அதுவே தினகரனுக்கு உதவியாகி விட்டது.

5

இரண்டு மாதங்களில் நளினிக்கு விவாகம் நடந்தது. நந்தினிக்கும் நல்ல வரனைப் பார்த்து முடிவு செய்தார்கள். மதுரா அந்த வீட்டுக்கு வந்த ஆறே மாதத்தில் நளினி, நந்தினி இருவரும் விவாகமாகி கணவனோடு குடித்தனம் நடத்தப் போனார்கள்.

ஆனால் அவர்கள் இருவரும் போன பிறகுதான் மதுராவின் தனிமை ஜவஹருக்குத் தெரிந்தது. ஒரு நாள் படிப்பதற்காகத் தோட்டத்தில் உலாவிக் கொண்டிருந்தவன் நிமிர்ந்தபோது மாடி ஜன்னல் வழியே மதுராவின் முகம் தெரிந்தது. ''மன்னி... மன்னி... இங்கே வாங்களேன்..'' கூவினான்.

சில நிமிஷங்களில் தோட்டத்துக்கு வந்த மதுராவின் முகம் மலர்ந்திருந்தது. ஜவஹர் அவளையும் பூத்திருந்த புஷ்பங்களையும் மாறி மாறிப் பார்த்தான்.

''மன்னி! இந்த மாதிரி சாயந்திர நேரத்திலே ஏன் உள்ளேயே இருக்கணும். காற்றாட இங்கே உலாவலாமே...'' இருவரும் தோட்டத்தைச் சுற்றி நடந்தனர்.

அவன் அன்று பள்ளியில் மாணவர்களுக்கிடையே நடந்த ஜோக்குகளைச் சொன்னான். மதுரா ரசித்துச் சிரித்தாள். அங்கங்கே செடிகளுக்கு அருகே நின்று ரசித்தனர். அன்று தொடங்கி தினமும் மாலை நேரத்தில் இருவரும் தோட்டத்தில் நடந்தனர். ஜவஹர் பேசுவதை மகிழ்ச்சி பொங்க ரசித்துக் கேட்பாள் மதுரா.

தினகரனின் செய்கையும், நளினி, நந்தினியின் அலட்சியமும் ஜவஹரின் நட்பினால் மதுராவின் மனதிலிருந்து சிறிது சிறிதாக மறையத் தொடங்கியது. தனியாகவே வளர்ந்த அவளுக்கு அந்தச் சிறுவனின் பரிவும் பாசமும் மிக்க மகிழ்ச்சியை அளித்தது. பரிக்ஷை சமயங்களில் ஜவஹருக்குப் பாடங்களில் சந்தேகம் வந்தால் எழுதிக் காட்டிச் சொல்லிக் கொடுத்தாள். தவறுகளைத் திருத்தினாள். அவளுடைய அந்த உதவி ஜவஹருக்குச் சௌகரியமாக இருந்தது. லீவு நாட்களில் இருவரும் பகல் நேரத்தில் கேரம், செஸ் ஆடத் தொடங்கினார்கள்.

மதுராவின் தந்தையும் மகள் சந்தோஷமாக வாழ்கிறாள் என்ற நிம்மதியில் கண்ணை மூடினார்.

தினகரனை அவர் நம்பினாலும் பணத்தின் சக்தியை, மனித மனத்தின் பலவீனத்தை அறிந்தவ

ராதலால் ஊமையாகிப் போன மகளுக்குப் பாதுகாப்பாக உயிலின் மூலம் செய்து விட்டார். தினகரனைத் தன் கம்பெனியில் ஒரு டைரக்டர் பதவிக்கு உயர்த்தியிருந்தார். தினகரனைத் தவிர இரண்டு டைரக்டர்களும் உண்டு. அவர்களும் நம்பகமானவர்கள். தொழில் நுட்பங்களை உணர்ந்தவர்கள். தினகரனுக்கு மாத வருமானமே மூவாயிரம் வந்தது. அது அவனுக்குப் போதும். அவன் தங்கைகளுக்கு வேண்டியதைச் செய்தாகி விட்டது. இப்போது அவர்கள் குடியுள்ள பங்களா அதில் உள்ள சொத்துக்கள் தவிர சில லட்சங்களை ரொக்கமாக மதுராவின் பெயரில் எழுதி வைத்தார்.

அவருடைய நிலையில் யார் இருந்தாலும் அப்படித்தான் செய்திருப்பார்கள் என தினகரனுக்குப் புரியாமல் இல்லை. ஆனாலும் உள் மனத்தில் ஒரு நமைச்சல் எற்பட்டது. கணேசன் அவனை நம்பவில்லை என்று ஒரு உணர்ச்சி உண்டாகியது. அவர் பெண்ணுக்கும் அவள் பணத்துக்கும் அவன் பாதுகாவலன் மட்டுமே என்று புரிந்ததும் உள்ளூர ஆத்திரம் உண்டாயிற்று. அவனுக்கு ஏற்பட்டுள்ள பதவியும் சம்பளமும் அவன் குடும்பத்தாருக்குச் செய்துள்ள பொருளாதார உதவியும் கணேசன் கொடுத்ததுதான் என்பதை அவன் மறந்து விட்டான். மதுராவிடம் கையேந்தும் நிலை வந்துவிடுமே என்று எண்ணியபோது குமுறினான். தான் எத்தனை நன்றி கெட்ட தனமாக இருக்கிறோம் என்பதை அவன் மறந்து மாமனாரின் செய்கையில் ஆத்திரப்பட்டான். அவர் உயிரோடு இருந்தவரையில் அடங்கி யிருந்தவன் இப்போது கட்டுப்பாடுகள் விலகினவனாக மதுராவைப் பலவிதத்திலும் அலட்சியம் செய்யலானான். வெளியே வேறு பெண்களோடு தொடர்பு கொண்டு இஷ்டப்படி இருக்கலானான்.

6

நளினி குழந்தை சுதாவோடு வந்திருந்தாள். அப்போது நந்தினி பூரண கர்ப்பிணி. சுதா ஆறு மாதக் குழந்தையாகத் தவழத் தொடங்கியிருந்தாள். அவரவர்களுக்குக் குடும்பம், பொறுப்பு, பாசம், அன்பு என்று ஏற்பட்டுவிட்டதாலோ என்னவோ நளினியும் நந்தினியும் மாறியிருந்தார்கள். லட்சாதிபதி வீட்டுப் பெண்ணாக இருந்தாலும் அடக்கமும் பண்பும் நிறைந்தவளாக வளைய வரும் மதுராவிடம் அவர்களுக்குப் பரிவு உண்டாயிற்று. தினகர



ளின் செய்கைகளை அவர்கள் வெறுக்கத் தொடங்கினார்கள். கோமதிக்கும் மனம் வேதனைப் பட்டது ஆனாலும் அவள்தான் யாரையும் கண்டிக்க மாட்டாளே.

''என்ன இருந்தாலும் தினகர் செய்வது நல்லதில்லே'' — நளினி கூறினாள்.

''ஆமாம்... இதென்ன அநியாயம்.... நன்றி கெட்டவன்....'' — நந்தினியும் படபடத்தாள்.

''மதுராவுக்குக் குழந்தை பிறந்திருந்தால் தினகர் இப்படி ஆகியிருக்க மாட்டான்'' நந்தினி கூறினாள்.

இவர்களுடைய சம்பாஷணை ஹாலில் ஓரமாக நாற்காலியில் அமர்ந்து ஏதோ செய்து கொண்டிருந்த மதுராவின் காதில் விழுந்தது. அவள் நெஞ்சு பொங்கியது. கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டாள்.

சமையல் செய்யும் சுந்தரி இரண்டு நாட்கள் லீவு கேட்டுக் கொண்டு தன் மகளின் வீட்டுக்குப் போயிருந்தாள். அவர்களிடம் இரண்டு காஸ் அடுப்பு இருந்தது. நின்று கொண்டே சமையல் செய்யக் கூடியதாக சமையல் அறை மேடையில் ஒன்று. இன்னொன்று

> **கர்ப்பிணிகள் பேரிக்காய் சாப்பிடுவது நல்லது. இதனால் வயிற்றில் வளரும் சிசுவிற்கு நல்ல போஷாக்குக் கிடைக்கும். அத்துடன் குழந்தையின் எலும்புகள், இருதயம் பலப்படும்.**
>
> —லட்சுமிசிவம்

உட்கார்ந்தபடியே பட்சணங்கள் செய்ய, அடை, தோசை மாதிரி டிபன் செய்ய உதவியாக உயரமில்லாத மேடையில் வைத்திருந்தார்கள். சுந்தரி வராத சமயங்களில் கோமதி இந்த காஸ் அடுப்பில்தான் செய்வது வழக்கம். அவளால் நின்று கொண்டே அதிக நேரம் வேலை செய்ய முடிவதில்லை. கர்ப்பிணி பெண்ணான நந்தினி தேன்குழல் சாப்பிட ஆசைப் பட்டதால் கோமதி அன்று பகல் சாப்பாட்டுக்குப் பின்னர் தானே செய்ய மாவு எல்லாம் தயாராக அரைத்து வைத்திருந்தாள்.

நந்தினி உள் அறையில் படுத்துத் தூங்கப் போய்விட்டாள். நளினி குழந்தை சுதாவை தொட்டிலில் போட்டு ஆட்டிக் கொண்டிருந்தாள். மதுரா சுதாவுக்காக அவளுடைய ப்ராக்கில் எம்பிராய்டரி செய்ய ஹாலில் ஜன்னலருகில் உட்கார்ந்திருந்தாள். அவள் எப்பவும் சமையல் அறைக்கு எதிரில் உள்ள அந்த ஜன்னல் பக்கமாக உட்காருவது வழக்கம். கோமதிக்கோ சுந்தரிக்கோ உதவி தேவைப்படும் போது சட்டென்று எழுந்து போக சௌகரியமாக இருக்கும். கோமதி காஸைப் பற்றவைத்து வாணலியில் எண்ணெயை ஊற்றி வைத்துவிட்டுச் சற்று திரும்பி உட்கார்ந்தபடி மாவைச் சலித்துப் பாத்திரத்தில் போட்டு பிசைந்து கொண்டிருந்தாள். ஏதோ சிந்தனையில் இருந்தவள் எண்ணெய் ரொம்பவும் காய்வதைக் கவனிக்கவில்லை. மதுரா கவுனில் பூவை டிரேஸ் பண்ணிவிட்டு நிமிர்ந்தவள் ரொம்ப நெடிவருவதை உணர்ந்து சமையல் அறையைப் பார்த்தாள். அதே சமயம் காஸ் தீ அதிகமாக இருந்ததால் எண்ணெயும் பற்றிக் கொண்டு விட்டது. அடுத்த விநாடி மதுரா, ''அம்மா.... அம்மா... நெருப்பு... நெருப்பு....'' என்று அலறியபடி பாய்ந்து சமயோசிதமாக சிலிண்டரை மூடிவிட்டு கோமதியை இழுத்துக் கொண்டு ஹாலுக்கு வந்தாள்.

இன்னதென்று புரியாத கோமதி மாவுப் பாத்திரங்கள் இடற மதுராவின் இழுப்பில் ஹாலுக்குள் வந்து விழுந்தாள். அதே வேகத்தில் மதுராவும் கீழே விழுந்து மயக்கம் அடைந்தாள். மதுராவின் அலறல் ஒலி கேட்டு நந்தினியும் நளினியும் பதறி ஓடி வந்தனர். வாணலி எண்ணெய் குப்பென்று எரிவதையும் ஹாலில் அம்மாவும் மதுராவும் விழுந்து கிடப்பதையும் கண்டு திகைத்து நின்றனர். சிலிண்

டர் மூடப்பட்டு விட்டதால் தீ குறையத் தொடங்கியது. கோமதி எழுந்து உட்கார்ந்தாள்.

''என்னம்மா... என்ன ஆச்சு....?''

''காஸ் தீ அதிகமாகி எண்ணெய் பற்றிக்கொண்டிருக்கு.... நான் பார்க்கலே. மதுராதான் 'அம்மா... அம்மா...'ன்னு ஓடிவந்து என்னை இழுத்துக்கொண்டு வந்தாள்.'' என்று சொல்லிக் கொண்டே வந்தவள், வியப்புடன்,

''அடியே நளினி!... மதுராவுக்கு வாய் பேச வந்துடுத்தடி... பேச வந்துடுத்துடீ...'' பரபரத்தாள். அவள் முகத்தில் மகிழ்ச்சி பரவியது.

''ஆமாம்மா... மதுராவுக்குப் பேச வந்துடுத்தும்மா. அவ அம்மா அம்மான்னு கத்தினது எங்களுக்கும் கேட்டதும்மா...'' நந்தினி ஆர்வத்துடன் மதுராவின் அருகில் வநது.

''மதுரா... மதுரா...'' என்று உலுக்கினாள்.

''அம்மா... அம்மா... மதுரா மயக்கமாகியிருக்கிறாளே... நளினி டாக்டருக்கு போன் பண்ணுடி.. சீக்கிரம்....''

நளினி போன் பண்ண ஓடினாள். அதே சமயம் காலே பரீக்ஷை முடிந்து ஜவஹர் வீட்டினுள் நுழைந்தான். அவன் பார்வையில் மலர்க் கொடி போல துவண்டு விழுந்து கிடந்த மதுராதான் பட்டாள். பாய்ந்து வந்தான். ''என்னம்மா.... மன்னிக்கு என்ன ஆச்சு.... ஐயோ.... மன்னீ....மன்னீ....'' உடம்பு கதற உள்ளம் குமுற வாய் உளற ''அம்மா... என்னம்மா இங்கே களேபரம்... மன்னி.... மன்னி....'' கதற ஆரம்பித்தான்.

அந்தச் சொல்லில் என்ன சக்தி இருந்ததோ! ''ஜவஹர்.... ஜவஹர்....'' மெல்ல முனகிய மதுரா மறுபடி மயங்கினாள்.

ஜவஹரின் உள்ளம் துள்ளியது. மன்னியா கூப்பிட்டாள்... மன்னியின் குரலா இது...!''

டாக்டருக்கு போன் பண்ணிவிட்டு வந்த நளினி விவரித்தாள். ''ஜவஹர்! நம்ப அம்மாவை மதுரா

மீன் கழுவிய கழிவு நீரும், அதன் கழிவுப் பொருட்களும் கறிவேப்பிலே, முருங்கை ஆகிய மரங்களுக்கு சிறந்த உரமாகும்.

-எஸ். இ. பாத்திமா

தான் காப்பாற்றியிருக்காள்.எண்ணய் பற்றி நெருப்பானது தெரியாமல் அம்மா இருந்திருக்கிறாள். மதுரா தான் கவனிச்சு அம்மான்னு ஓடிப்போய் இழுத்துண்டு வந்து ரெண்டு பேரும் ஹாலில் விழுந்துட்டா. பயத்திலே அதிர்ச்சியிலே மதுராவுக்கு மயக்கம் வந்திருக்கு. இப்ப டாக்டர் வருவார் ஜவஹர்! மதுராவோட அம்மா தீவிபத்திலேதானே செத்துப் போயிருக்காள். அப்ப அதை நேரடியாப் பார்த்த அதிர்ச்சியிலே மதுரா ஊமையாகி விட்டாளென்று தானே அவ அப்பா சொன்னார். இப்ப நெருப்பு எரிகிறதைப் பார்த்ததும் அதே மாதிரி அதிர்ச்சியில் வாய் பேச வந்துடுத்து.''

''அடியே, அத்தனை அவசரத்திலும் சிலிண்டரை முதல்லே மூடியிருக்காளே! எத்தனை புத்திசாலிப் பெண்... இல்லேன்னா காஸ் இன்னும் பற்றி பெரிய விபத்தே ஏற்பட்டிருக்குமே...'' கோமதி மதுராவை அள்ளித் தன் மடியில் போட்டுக்கொண்டு ''மதுரா...மதுரா...'' எனப் புலம்பினாள். ஜவஹர் மகிழ்ச்சியில் பரவசப்பட்டாலும் சகோதரிகளையும் அம்மாவையும் சாடினான்.

''உங்களுக்கெல்லாம் இப்பத்தான் மன்னியோட அருமை பெருமை தெரியறது... எனக்கு முதல்லே பார்த்ததுமே தெரிஞ்சு போச்சு. மன்னி நமக்கு ஒரு பொக்கிஷம். யாருக்கும் கிடைக்க முடியாத செல்வம். நம்ப குடும்பத்துக்கு ஒளி விளக்கு. தினகர் ஒரு முட்டாள். அருமை தெரியாத அசடு. நன்றி கெட்டவன்....'' சட்டென்று நிறுத்தினான்.

வாசலில் டாக்டர் ரமணனின் கார் நிற்பது தெரிந்தது. ரமணனிடம் ஜவஹர் விவரித்தான்.

பொதுவாக சாதம் மீந்து போனால் அரைத்து வடாம் இடுவது வழக்கம். அப்படி செய்யும் போது, சாதத்தை அரைக்காமல், மிளகாய், காயம், உப்பு, முதலியவைகளை அரைத்துப் போட்டுப் பிசைந்து கூடவே — சிறிது இஞ்சி, வெங்காயம் இலைகளை நீளவாட்டில் மெலிதாக நறுக்கிப்போட்டு, அத்துடன் கூடவே மாவும் சிறிது தூவி கலந்து, கிள்ளிக் கிள்ளி வடகம் வைத்தால் — காய்ந்த பின் பொரிக்கும் போது, பக்கோடா மாதிரி மிக ருசியாக இருக்கும். கறிவேப்பிலை கூடப் பொடியாக நறுக்கி சேர்க்கலாம்.

எஸ். பட்டம்மா

ரமணன் மதுராவை பரிசோதித்தார். அவர் முகத்தையே நால்வரும் பார்த்துக் கொண்டிருந்தனர்.

''இவங்க இருதயம் ரொம்ப பலவீனமாயிருக்கு. அதிர்ச்சிகளைத் தாங்கற சக்தி குறைஞ்சிருக்கு. இப்ப இன்ஜெக்ஷன் போடறேன். மயக்கம் தெளியும். இருந்தாலும் ஜாக்கிரதையாக இருக்கணும். ரெஸ்டிலே இருக்கணும். எதற்கும் மறுபடி மாலை வந்து பார்க்கிறேன்...'' என்றார். இன்ஜெக்ஷன் போட்டு விட்டுப் புறப்பட்டார். ஜவஹரைத் தனியாக அழைத்துப் போய், ''மயக்கம் தெளியாட்டா உடனே போன் பண்ணுங்க. ஆஸ்பத்திரியில அட்மிட் பண்ண வேண்டியிருக்கும். இதயம் ரொம்பப் பாதிக்கப்பட்டிருக்கு....'' சொல்லிக் கொண்டே காரில் ஏறினார்.

7

மதுராவின் உடலில் அசைவு ஏற்பட்டது. முகத்தில் லேசான களிப்பு. ஏதோ வலி என்று ஜவஹர் உணர்ந்தான். ''மன்னி....மன்னி.... இங்க பாருங்க மன்னி....'' அழுங் குரலில் கூப்பிட்டான். மதுரா லேசாகக் கண் விழித்தாள். கலக்கத்துடன் இருக்கும் கோமதியையும், கண்ணீருடன் பார்க்கும் ஜவஹரையும் மாறி மாறி நோக்கினாள். அவளுக்கு நடந்த நிகழ்ச்சி லேசாக நினைவுக்கு வந்தது. இதயத்தில் வலி விட்டு விட்டு உண்டாயிற்று. அவள் தனக்கு ஏதோ நேர்ந்து விடும் என்று உணர்ந்தாள்.

''மன்னி!... உங்களுக்குப் பேச வந்துடுத்து... பாவம், உங்க அப்பாதான் இப்ப இல்லே. எத்தனை சந்தோஷப்படுவார் மாமா... இனிமேல் உங்களுக்கு நல்ல காலம்தான். அண்ணா கூடத் திருந்திவிடுவான்....''

மதுரா புன்னகை செய்தாள்.

''ஜவஹர்! நான் பிழைக்க மாட்டேன். என் மனசு ரொம்ப நொடிச்சுப் போயிடுத்து. ஊமையாகவே செத்துப் போகாமல் உன்னோடு பேச வந்தது தற்குச் சந்தோஷமாயிருக்கு.... ஜவஹர்! நளினியும் நந்தினியும் நல்லவர்கள். அவர்களைத் திட்டாதே. பணமில்லாத தோஷம் அசட்டுத்தனமாக இருந்தனர். இப்ப அவர்களுக்கு அனுபவமும் ஏற்பட்டு இரக்கம், அன்பு, பாசம் என்ன என்பதைப் புரிந்து கொண்டு விட்டார்கள்.

ஆனால் உன் அண்ணாவை என்னால் மன்னிக்கவே முடியாது. என் அப்பாவையும் என்னையும் ஏமாற்றி விட்டார். இஷ்டப்பட்டுத்தான் மணந்து கொண்டார் என்று நம்பினேன். அவர் பணத்துக்காக மட்டுமே என்னை மணந்து கொண்டார். என் அப்பா இருந்த வரை நல்லவர் போல் நடித்தார்.''

லேசாக மூச்சு வாங்க நிறுத்தினாள்.

''மன்னி! ரொம்பப் பேசாதீங்கோ. களைப்பாகி விடும்.''

'இல்லே ஜவஹர்! பதினெட்டு வருஷங்கள் வாய் அடைத்துப் போயிருந்தேன். இப்ப பத்து நிமிஷங்களாவது பேச வேண்டும்'' என்றவள் கோமதி

யிடம், "அம்மா! நீங்க எனக்கு ஒன்னு தரணும். தருவீங்களா...?"
எனக் கெஞ்சுதலாக வினவினாள்.

"என்னம்மா மதுரா, உனக்கு இல்லாததா? என்னவேணும் சொல்லும்மா..." மதுராவின் கண்ணீரைத் துடைத்து விட்டாள்.

"அம்மா! ஜவஹரை எனக்குப் பிள்ளையாக கொடுங்கம்மா... என்னைக் கைப்பிடித்துத் தாலி கட்டிய கணவர் என் பணத்தை மட்டுமே அனுபவித்தார். இப்பவும் அனுபவிக்கிறார். என்னை அனுபவிக்கவில்லையம்மா. தாலி கட்டிக் கொண்ட தோஷம் தான். அவர் கை என்மீது பட்டதில்லை.

"அம்மா! ஒரு பெண்ணின் மனதை ஒரு தாயால் தான் உணர முடியும். நான் இறந்துவிட்டால் உங்க பெரிய பிள்ளை என்னைத் தீண்டக் கூடாது. கொள்ளி வைக்கக் கூடாது. இந்த வீட்டுக்குள் நுழைந்தபோது வாய் நிறைய, மனம் நிறைய "வாங்க மன்னி" என்று அழைத்தான். அந்த நிமிஷமே இவன் என் பிள்ளையாக மனதில் புகுந்து விட்டான்.

"இந்த வீட்டில் அவனுடைய உண்மையான அன்பினாலும் பாசத்தினாலும்தான் நான் இத்தனை நாட்கள் உயிர் வாழ்ந்தேன். இந்த வீடு, ரொக்கம், அப்பாவின் பங்களா எல்லாமே ஜவஹருக்குத்தான் சேரணும். நான் ஏற்கனவே எங்க வக்கீலிடம் எழுதிக் கொடுத்திருக்கிறேன்...."

"வேண்டாம் மன்னி!... பணமே வேண்டாம்: நீங்கதான் வேண்டும். நளினி! டாக்டருக்கு போன் பண்ணு. நர்ஸிங் ஹோமில் அட்மிட் பண்ணலாம்." பரபரத்தவனை மதுரா அடக்கினாள்.

"அம்மா! நீங்க ஒண்ணுமே சொல்லலையே..." என்றாள்.

கோமதி சட்டென்று ஜவஹரின் கையைப்பிடித்து மதுராவின் கையில் வைத்தாள்.

"மதுரா! நீ பாக்கியசாலி. ஜவ்ஹர் உன் பிள்ளை. இப்படி ஒரு நல்ல பிள்ளையைப் பெற நீ கொடுத்து வைத்தவள். என் பெரிய பிள்ளையை நன்றி கெட்ட துரோகியைப் பெற்ற நான் ரொம்பவும் பாவம் செய்தவள். இதையெல்லாம் கேட்டப்புறம் என்னாலேயே அவனை மன்னிக்க முடியவில்லை. நினைகர் செய்த துரோகத்துக்கு, ஜவஹர்! நாம்ப பிராயச்சித்தம் செய்யணும். மதுராவை 'அம்மா'ன்னு கூப்பிடுடா. அவள் சந்தோஷப் படட்டும்...."

"அம்மா....அம்மா.... என்னைப் பாருங்கம்மா" ஜவஹர் உணர்ச்சி வசத்தால் கதறினான்.

மதுரா புன்னகை புரிந்தாள். மதுரமாக அழைத்தாள். "ஜவஹர்... ஜவஹர்...." — அவள் தலை சாய்ந்தது.

★ ★ ★ ★

பள்ளிக் குழந்தைகள் சட்டையில் தாரோ, இலோ பட்டுவிட்டால் பட்ட இடத்துக்கு அடியில் கனமான அட்டை வைத்து (நோட்டு அட்டை) வெள்ளைத் துணியை மண்ணெண்ணெயில் நனைத்து அந்த இடத்தை 2, 3 தரம் அழுக்கித் துடைத்து காற்றாட போட்டுவிட்டு மறுநாள் சோப்புப் போட்டுத் துவைத்தால் கறையும் எண்ணெய் நாற்றமும் இருக்காது.

(சரோஜா)

இரவில் சாதத்திற்கு தண்ணீர் ஊற்றி வைக்கும் பொழுது சிறிதளவு உப்பையும் போட்டு வைத்தால் காலையில் சாதம் கூழாகக் கெட்டுப் போகாமல், விரைவாக நன்கு இருக்கும்.

-பாலா இராஜேந்திரன்



படம் 1 படம் 2

'டீன் ஏஜ்' போய், வயது ஏறஏற இடுப்பில் சதைமடிப்பும், தொங்கிய வயிறுமாகப் பெண்கள் வளைய வருகிறார்கள். இவர்கள் இடுப்பு சதை குறைந்து, தொப்பை கரைந்து, ஸ்லிம் ப்யூட்டியாக சில உடற் பயிற்சிகள் இங்கு கூறப்பட்டுள்ளன. உடற்பயிற்சி செய்வதற்கு முன் —

1) நான்கு உடற்பயிற்சிகள், ஒவ்வொன்றும் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. முதற்பயிற்சிகலபமானது. இரண்டும், கடைசியும் முயற்சி செய்து செய்ய வேண்டும்.

2) அவரவர் உடல் பருமனுக்குஏற்ப வாரா, மாதக் கணக்கில் ஆகலாம்; உடல் பருமன் குறைய.

3) இவற்றை இடுப்புச்சதை குறைந்து மெலிந்த பிறகு விட்டு விடக் கூடாது. ஒருநாளைக்குப் பத்து நிமிடங்களிலிருந்து அரைமணி நேரம் வரை செய்ய வேண்டும்.

4) உணவில் கொழுப்பு, இனிப்புச் சத்துக்களைச் சேர்க்கக் கூடாது.

பயிற்சி—1

1. கால்களை ஓரடி அகலமாகப் பிரித்து கைகளை தலைக்கு மேல் உயர்த்தி நிற்கவும். பிறகு முன்பக்கம் குனிந்து இரு கால்களின் நடுவில் கைகளால் தரையைத் தொடவும். ஐந்து வரை எண்ணிவிட்டுப் பழையபடி நிமிரவும். இதைப்போல் முதலில் ஐந்து தடவை பத்து பதினைந்து என்று உடற்பயிற்சிகளை நாளடைவில் அதிகரிக்க வேண்டும்

2. கால்களை சுமார் பதினாறு அங்குலம் வரை பிரித்து கைகளைத் தலைக்கு



இடுப்புச் சதை, வயிறு குறைய...

மேல் உயர்த்தி நிற்கவும். முன்னால் குனிந்து இடது காலுக்கு வெளியில் தரையைத்தொடவும். பிறகு நிமிர்ந்து மறுபடியும் இரு கால்களின் நடுவிலும், கடைசியில் வலது காலுக்குவெளியிலும் தொடவும். (படம் 1)

3. கால்களை சுமார் பதினாறு அங்குலம் பிரித்துக் கைகளை தலைக்கு மேல் உயர்த்தி நிற்கவும். முன்னால் குனிந்து இடது காலின் வெளியில் தரையைத் தொட்டுவிட்டு நிமிர்ந்து, இருகால்களின் நடுவில் உள்ள தரையை தொடவும். பிறகு மறுபடியும் நேராக நிமிர்ந்து கைகளை மேல்வீசி நடுவில்உள்ள தரையை தொடவும். கடைசியில் வலது காலின் வெளியில் தரையைத் தொடவேண்டும். போன தடவை போலில்லாமல் இதை இடைவெளியில்லாமல் செய்ய வேண்டும். இந்த பயிற்சியினால் இடுப்பும் வயிறும் தசைகள் பலப்படுகின்றன.



படம் 3

பயிற்சி–2

1. கால்களை ஓரடி அகலத்திற்கு பிரித்து வைத்துக் கொண்டு கைகளை இருபக்கங்களிலும் தொங்க விடவும், முதுகை வளைக்காமல் பக்கவாட்டில் சரிந்து இடுப்பிலிருந்து கீழாக கைகளை எவ்வளவு தூரம் முடியுமோ அவ்வளவு தூரம் கொண்டு செல்லவும். இது போல் இரு பக்கங்களிலும் செய்யவும். (படம் 2)

2) கால்களை ஓரடி அகலத்திற்கு பிரித்து வைத்துக் கொண்டு கைகளை இருபக்கங்களிலும் தொங்க விடவும். முதுகை நிமிர்த்தி பக்கவாட்டில் முடிந்தவரை கைகளை சரித்து கொண்டு செல்லவும். பிறகு கைகளை அப்படியே இடுப்பு வரை கொண்டு வரவும். மறுபடியும் முதலில் செய்தது போல் கீழ்வரை சரியவும். இதேபோல் இரு பக்கங்களிலும் செய்யவும்.

3. கால்களை ஓரடி அகலத்திற்குப் பிரித்துக் கொண்டு வலது கையைத் தலைக்கு மேல் முட்டி மடித்து '┐' போல் வைத்துக் கொள்ளவும். முதுகை வளைக்காமல் சரிந்து இடது கையை இடுப்பிலிருந்து கீழாக முடிந்தவரை கொண்டு செல்லவும். வலது கையையும் தலையையும் இடது பக்கமாக வளைக்கவும். பிறகு கையை மேலே இடுப்பிற்கு கொண்டு செல்லவும். தலையும், வலது கையும் நிமிர்த்தவும். மறுபடி முதலில் செய்தது போல் கையைக் கீழாகக் கொண்டுசெல்ல வேண்டும்.


இதேபோல் இடது கையை தலைக்கு மேல் உயர்த்தி வலது கையை கீழே கொண்டு செல்ல வேண்டும். இந்தப்பயிற்சியினால் இடுப்பின் இருபக்கங்களிலுள்ள தசைகள் இறுகுகின்றன.



படம் 4



படம் 5



உப்பின் மகிமை

சோப்புத்தூளுடன் 1 ஸ்பூன் (கல்) உப்புப் போட்டு துணி நனையுங்கள். பளீரென்று வெளுக்கும். வாங்கும் எந்தக் காய்கறியையும் உப்புப்போட்ட நீரால் கழுவுங்கள். சிறந்த பூச்சிகொல்லி மருந்தாகும்.

பூச்சிக்கடி கடித்து அரிக்கும் சமயங்களில் இதமான வெந்நீரில் 1 ஸ்பூன் கல் உப்புப் போட்டு அரிக்கும் இடத்தில்வையுங்கள். அபரிமிதமான பலன் கொடுக்கும். வெட்டுகாயங்கள் ஆறும் சமயத்தில் இதே மாதிரி செய்யலாம். சிலருக்கு ஆ ஸ ன வாய்ப்பகுதியில் மலம் போன பிறகு எரிச்சலும் கடுப்பும் உண்டாகும். உப்பைப்போட்ட வெந்நீரில் உட்காருங்கள் சுகமாகஇருக்கும். கண்ணாடி ஜன்னல்களை துடைக்க உப்புப்போட்ட நீரைக்கொண்டு துடையுங்கள். பளீரென்று மின்னும்.

'சித்ரா'



படம் 6

பயிற்சி 3:—

1. கால்களை ஒருங்கே இணைத்து நிமிர்ந்து நேராக படுக்கவும். கைகளை உடலுடன் ஒட்டி வைத்துக் கொள்ளவும். தலையையும், தோள்களையும் மெதுவாக நிமிர்த்தி கால்களைப் பார்க்கவும்.

2. கால்களைத் தரையில் வைத்து முட்டுக்களை மடக்கிக் கைகளைத் தலைக்கு மேலே வைத்துக் கொள்ளவும் கைகளை முன் பக்கமாக வீசி கால்களை நிமிர்த்தி உட்கார முயலவும். கால்களை நீட்டி உட்கார்ந்து கால்விரல்களை கைகளால் தொடவும். (படம் 4)

3. கால்களை இணைத்து கைகளைத் தலைக்கு அடியில் , மடக்கி இணைத்துக் கொண்டு நேராகப் படுக்கவும். (படம் 5)

இதனால் நடுவயிற்றுத் தசைகளும் இறுகி இடுப்பும் [illegible]ப்படும்.

பயிற்சி 4:—

1. குப்புறப் படுத்துக் கொண்டு கைகளை தொடைகளில் பதிய வைத்து கொள்ளவும். தலை, தோள்களை நிமிர்த்தி இடது காலை தரையிலிருந்து மேலே கொண்டு செல்லவும். பிறகு கீழே கொண்டு வர வேண்டும். இதேபோல்வலது காலையும் பயிற்சி அளிக்க வேண்டும்.

2) கவிழ்ந்து படுத்து கைகளை இரு பக்கங்களிலும் நீட்டவும். இரு கை, கால்களையும் வயிறு தரையில் பதியுமாறு எத்தனை தூக்க முடியுமோ அவ்வளவு பதியுமாறு தூக்க வேண்டும். பிறகு தரையில் வைக்கவும்.

3. கவிழ்ந்து படுத்துக் கொண்டு கைகளைத் தலைக்குப் பின்னால் பிணைத்துக் கொள்ள வேண்டும். இப்பொழுது உடலையும் கால்களையும் சேர்த்து உயர்த்த வேண்டும். மறுபடி கீழே வரவும். (படம் 6)

இந்த உடற்பயிற்சியினால் இடுப்புத் தசைகள் நன்கு வளைந்து கொடுத்து வயிற்றையும் குறைக்கும்.

—வாணி

புகைப்படங்கள்: பி.ச. ரமணன்


புகைப்படங்களில்: ப்ரியா, நந்தினி.



காதுகளுக்கு வேண்டியது
ஜான்ஸன்ஸ் பட்ஸ்
பத்திரமாக
சுத்தம் செய்வீர்
உபயோகிப்பீர் ஜான்ஸன்ஸ் பட்ஸ்.
ஜான்ஸன்ஸ் பட்ஸ், இரு முனைகளிலும்
பஞ்சுடன் கூடிய பாதுகாப்பான
வளையக்கூடிய குச்சிகள் கொண்டவை.
காதுகளைச் சுத்தம் செய்வதற்கு அல்லது
ஏராளமான இதர உபயோகங்களுக்குச்
சிறந்தவை. எங்கும் உபயோகிக்க
எளிதானது. பாதுகாப்பானது.
50. 100 மற்றும் 150 உள்ள பேக்குகளில்
கிடைக்கின்றன.
Johnson's
buds
150 swabs
Johnson & Johnson
©J&J 83
OBM/9842 TAM




AGENTS WANTED FOR SRILANKA ALSO









முதல் பரிசு: குடம்

ஸ்பெஷல் ரசப்பொடி

தேவையான பொருள்கள்

பு. அரிசி 2 டீஸ்பூன் 100 கிராம்

கொத்தமல்லி (தனியா) 20 கிராம்

தேங்காய்த் துருவல் (காயவைத்தது) 1கப்

சீரகம் ஒரு டீஸ்பூன்

மிளகு ஒரு டீஸ்பூன்

கடலைப் பருப்பு உ, பருப்பு-

இரண்டு டீஸ்பூன்

இம்மாத இல்லத்தரசி

வெந்தியம் அரை டீஸ்பூன்

பெருங்காயம் ஒரு சிறு துண்டு

உலர்ந்த கருவேப்பிலை இலைகள் 15

உலர்ந்த கொத்துமல்லித் தழை 5 கொத்து

பூண்டு நசித்துக் காயவைத்தது 1 டீஸ்பூன்

கடுகு ஒரு டீஸ்பூன்

பச்சைமிளகாயை உலர்த்திபொடிப்பொடி-

யாக நறுக்கியது ஒரு டீஸ்பூன்

செய்முறை :

பச்சை மிளகாய், தனியா, சீரகம், மிளகு, கடலைப் பருப்பு, வெந்தியம், வெ. உளுத்தம் பருப்பு, பு. அரிசி, பெருங்காயம், கடுகு இவற்றை வெறும் வாணலியில் தனித் தனியே வறுக்க வேண்டும்.


மேற்கண்டவற்றையும் உடன் கருவேப்பிலை, கொத்தமல்லி தழை, தேங்காய்த் துருவல், பச்சை மிளகாய், பூண்டு இவற்றையும் சேர்த்து ஒன்றன் பின் ஒன்றாக இடிக்க வேண்டும்.

ரசம் தாளிக்கும்போது எண்ணெய் காய்ந்ததும் அதில் தேவையான இடித்த ரசப் பொடியைப் போட்டு, ரசக் கலவையை (புளி நீர், பருப்பு வெந்த நீர்) ஊற்றிக் கொதி வருமுன் இறக்கி அரை மூடி எலுமிச்சைப் பழச் சாற்றை ஊற்றினால் ரசம் வாசனையாக இருக்கும்.

-செல்வி கா. சாரதா, அரியலூர்

இரண்டாம் பரிசு: வாணச்சட்டி

கதம்ப ரசப் பொடி



தேவையான பொருட்கள்

மிளகு 50 கிராம்

சீரகம் 50 கிராம்

கத்தரி வற்றல்50 கிராம்

உலர்ந்த மிளகாய் 10 கிராம்

தனியா 10 கிராம்

எலுமிச்சம் பழம் 4

பாசிப்பயறு, துவரம் பருப்பு, கடலைப் பருப்பு, இம்மூன்று பருப்புகளுமாகச் சேர்ந்து 30 கிராம்

கருவேப்பிலை ஒரு கட்டு

கொத்தமல்லித் தழை 3 கட்டுகள்

பெருங்காயம் ஒரு சிறு துண்டு

எண்ணெய் சிறிதளவு

செய்முறை:

மிளகு, சீரகம், சுத்தரி வற்றல், உலர்ந்த மிளகாய், தனியா முதலியவற்றை வெறும் வாணலியில் இலேசாக வறுத்துக் கொள்ளவும். (அல்லது வெய்யிலில் காயவைத்து எடுத்துக்கொள்ளலாம்)

பாசிப் பயறை வெறும் வாணலியில் வறுத்து, அம்மியிலோ, இயந்திரத்திலோ வைத்து உடைத்து மேல் தோலை நீக்கிச் சுத்தப்படுத்திக் கொள்ளவும். மற்ற இரு பருப்புக்களையும் வெறும் வாணலியில் சூடு வர வறுத்துக் கொள்ளவும்.

எலுமிச்சம் பழத்தை முழுவதுமாகப் பிழிந்து விடாமல், சிறிதளவு பிழிந்து சாறு நீக்கி, அவற்றினை நன்றாக வெய்யிலில் உலர்த்தவும்.

கருவேப்பிலை, கொத்தமல்லித் தழை இவற்றைக் காம்பு நீக்கி, சுத்தம் செய்து, அலசி, தண்ணீரை வடிய வைத்து, நிழலில் உலர்த்திக்கொள்ளவும்.

பெருங்காயத்தைச் சிறிதளவு எண்ணெயில் பொரித்து எடுத்துக்கொள்ளவும்.

மேலே சொன்ன எல்லாச் சாமான்களையும் சேர்த்துப் பொடி செய்து, காற்றுப் புகாமல் கண்ணாடி ஜாடியில் கொட்டி, மூடி வைக்கவும்.

குறிப்பு: பெருங்காய வாசனை பிடிக்காதவர்கள் பெருங்காயத்தை நீக்கிவிட்டு ரசப் பொடியை உபயோகிக்கும் சமயம் சிறிது துண்டு சேர்த்துச் சமைக்கலாம்.

கத்தரிக்காய் வற்றல் இல்லாவிடில் கத்தரிக் காயைப் பச்சையாக நறுக்கி வெய்யிலில் நன்றாக உலர்த்தி உபயோகிக்கலாம்.

-ரா. சந்தானலெட்சுமி, சென்னை -4

மூன்றாம் பரிசு: பேன்சி பேசின்

ஸ்பெஷல் ரசப்பொடி

தேவையான பொருட்கள் :

புதினா இலை ஒரு கட்டு

கருவேப்பிலை ஒரு கொத்து

நாரத்த இலை ஒரு கைப்பிடி

மிளகாய் வற்றல் 25–30

தனியா 4 டேபிள் ஸ்பூன்

லவங்கப் பட்டை 5 கிராம்

கடலைப் பருப்பு 3 டேபிள் ஸ்பூன்

துவரம் பருப்பு 2 டேபிள் ஸ்பூன்

உளுத்தம் பருப்பு ஒரு டேபிள் ஸ்பூன்

கடுகு ஒரு டீஸ்பூன்

கசகசா ஒரு டேபிள் ஸ்பூன்

சீரகம் 2 டேபிள் ஸ்பூன்

துருவிய கொப்பரை 3 டேபிள் ஸ்பூன்

செய்முறை:

புதினா, கருவேப்பிலை, நாரத்த இலை ஆகியவற்றை நன்கு ஆய்ந்து, நிழலில் காயவைத்து, வாணலியில் நன்கு சூடு செய்து கொள்ளவும்.

கொப்பரைத் துருவலை நன்கு சிவப்பாக வறுத்துக் கொண்டு, மற்ற சாமான்களைத் தனித் தனியாக அதிகம் காந்தாமல் வறுத்துக்கொள்ளவும். எல்லாவற்றையும் சேர்த்து இடித்து, நல்ல நைஸ் சல்லடையில் சலித்து பாட்டிலில் போட்டு மூடி வைக்கவும்.

அரைத்து விட்டுச் செய்யும் ரசத்தையும் மிஞ்சிவிடும் வாசனையுடையது இந்த ரசப் பொடி. எலுமிச்சம் பழ ரசத்திற்கும் இந்தப் பொடி ஜோராக இருக்கும்.

நான்கு டம்ளர் ரசத்திற்கு ஒன்றரை முதல் 2 டீஸ்பூன் பொடி சேர்க்கலாம். கடைசியில் நெய்யில் கடுகு, பெருங்காயம் மற்றும் ஒரு மிளகாய் வற்றல் தாளித்துக் கொட்டினால் வீடே மணக்கும்.

-பி. ஆனந்தவல்லி, ஸ்ரீஹரிகோட்டா

ஆறுதல் பரிசு: முடிசோம்பு

ஔஷத ரசப் பொடி

தேவையான பொருட்கள்:



கண்டந்திப்பிலி 50 கிராம்

மிளகு 15 கிராம்

ஜீரகம் 4 ஸ்பூன்

துவரம் பருப்பு 4 ஸ்பூன்

கடலைப் பருப்பு ஒரு ஸ்பூன்

மிளகாய் வற்றல் 2

அரிசித் திப்பிலி 10 கிராம்

சுக்கு ஒருதுண்டு(பொடித்துக்கொள்ளவும்)

பூண்டு 2 (முழுப் பூண்டின் பருப்பு)

சாப்பிடாதவர்கள் நீக்கலாம்.

கறிவேப்பிலை கொஞ்சம்

செய்முறை:

வாணலியில் ஒரு ஸ்பூன் நெய் விடவும். கண்டதிப்பிலி, அரிசித் திப்பிலி, சுக்கு, மிளகு, ஜீரகம், துவரம் பருப்பு, மிளகாய் வற்றல் எல்லாவற்றையும் வறுத்துக் கொள்ளவும். முறுமுறுப்பாக வறுபட்டதும் எடுத்து இடித்து வைத்துக் கொள்ளவும். கறிவேப்பிலை காய்ந்ததோ, பச்சையானால் வாணலியில் வறுத்தோ எடுத்துப் பொடியுடன் கலக்கவும். மிக்ஸி உள்ளவர்கள் கரகரப்பாகப் பொடித்துக் கொள்ளவும்.

ரஸம் வைக்கும் தினம் ஒரு உருண்டை (நெல்லியளவு) புளியைக் கரைத்து, உப்பு போட்டு, (தேவையான அளவு) நன்கு கொதிக்க விடவும். புளி வாசனை போன பிறகு ரஸப் பொடி போட வேண்டும். ரஸப் பொடி 4 ஸ்பூனை எடுத்து ஜலத்தில் (அரை டம்ளர்) போட்டு வைக்கவும். ரஸம் கொதித்துப் புளி வாசனை போன பிறகு ரஸப் பொடியைப் போட்டு ஒரு கொதி விடவும். இந்த அளவுக்கு ரஸம் மூன்று டம்ளர் வரை விளாவலாம். இறக்கும் சமயம் (பொடி பொங்கி மேலே வரும்போது) பூண்டு 2 பருப்பு எடுத்து நெய்யில் வறுத்து நசுக்கிப் போடவும். கடுகை நெய்யில் தாளித்துப் போடவும்.

இந்த ரஸம் மூட்டு வலி எண்ணெய் தேய்த்துக் கொண்ட அன்று சாப்பிட, வாயுப் பிடிப்பு, எல்லாவற்றுக்கும் நல்லது.

-லட்சுமி, திருச்சி

ஆறுதல் பரிசு: முடிசோம்பு

எலுமிச்சை இலை ரசப்பொடி

தேவையான பொருட்கள்:

மிளகாய் வற்றல் 8

தனியா 2 டேபிள் ஸ்பூன்

கடலைப் பருப்பு ஒரு டேபிள் ஸ்பூன்

மிளகு அரை டீஸ்பூன்

ஜீரகம் ஒரு டீஸ்பூன்

பெருங்காயம் ஒரு சிறு துண்டு

எலுமிச்சை இலைகள் 1

கறிவேப்பிலை 5 கொத்து



செய்முறை:

முதல் நாள் எலுமிச்சை இலை, கருவேப்பிலை, உருவி குச்சி இல்லாமல் எடுத்து இரண்டையும் ஒரு தட்டில் உலர்த்தினாற்போல் வைக்கவும். எலுமிச்சை இலைகளைச் சின்ன துண்டுகளாகச் செய்து உலர்த்தினாற் போல் வைக்கவும். மறு நாள் வாணலியில் மிளகாய் வற்றல், தனியா, கடலைப் பருப்பு, பெருங்காயம் இவைகளுடன் எலுமிச்சை, கருவேப்பிலை இலைகளைப் போட்டு மிதமான தீயில் கருகாமல் வறுத்து எடுத்துக் கொள்ளவும். அத்துடன் மிளகு, சீரகம் இரண்டையும் சேர்த்து மிக்ஸியில் பொடி பண்ணி வைத்துக் கொள்ளவும். கோபுரமாக இரண்டு ஸ்பூன்கள் போட்டால் நான்கு பேர்களுக்கு ரசம் வைக்கலாம்.

குறிப்பு: மேலே கொடுக்கப்பட்டுள்ள அளவு நான்கு பேர்களுக்கு 3 நாட்களுக்கு வரும். அதாவது 6 டீஸ்பூன் கோபுரமாக பொடி இருக்கும்.

இந்த ரசப் பொடியைக் கொஞ்சம் எடுத்து இட்டமாக டேபிள் ஸால்ட் கலந்து சூடான சாதத்தின் மேல் போட்டு, உருக்கின நெய் விட்டு கலந்து சாப்பிட்டால் ரொம்ப ருசியாக இருக்கும். அத்துடன் பித்தத்திற்கும் நல்லது.

-ராஜேஸ்வரி நாராயணன், சென்னை-102

நீங்களே கண்டுபிடிக்கலாம்!

புற்று நோய்களில் மார்பகப் புற்று நோய்தான் சுலபமாகக் கண்டு பிடிக்கக் கூடியது. குறித்த காலத்தில் கண்டுபிடிக்கப்பட்டால் சுலபமாககுணப் படுத்தியும் விடலாம்.

மாதம் ஒருமுறை நீங்களே உங்கள். மார்பகங்களைப் பரிசோதனை செய்து பார்ப்பதன் மூலமும் வருடம் ஒரு முறைற் டாக்டரிடம் பரிசோதனைசெய்து கொள்வதன் மூலமும், ஏதேனும் சிறு மாற்றம் இருந்தால், கட்டிகள் இருந் தால், மார்பகக் காம்புகள் உள் ளிழுத்துக் கொண்டிருந்தால், அல் லது அவற்றிலிருந்து நீர் வடிந்தால் உடனே எச்சரிக்கை அடைந்து தகுந்த சிகிச்சையளிக்கலாம்.

ஒவ்வொரு மாதமும் மாதவிடாய் ஏற்பட்டதற்கு ஒரு வாரம் கழித்து மார்பகங்களை கவனித்துப் பார்க்க வேண்டும்.

மேல் ஆடைகளைக் களைந்து விட்டு ஒரு கண்ணாடியின் முன் நிற்கவும். இரண்டு கைகளையும் பக்கவாட்டில் தொங்க விட்டுக் கொண்டு, உங்கள் மார்பகங்களை, அதன் அளவு தோற் றம் இவைகளைத் தெரிந்து கொள் ளுங்கள்.

பின்பு கையிரண்டையும் தூக்கித் தலைக்குப் பின்புறமாக வைத்துக் கொண்டும் ஏதேனும் மாறுதல்கள் தெரிகிறதா என்று கவனிக்கவும்.

மூன்றாவதாக கைகளை இடுப்பில் வைத்து கீழ்நோக்கி அழுத்திக்கொண்டு மார்பகங்களை விரைப்பாக வைத்துக் கொண்டு மார்பகக் காம்புகள் சரி யான நிலையில் இருக்கிறதா என்று பார்க்கவும்.


கடைசியாக கீழே படுத்துக்கொண்டு வலது கையை தலைக்கடியில் வைத்துக் கொண்டு, இடது கைவிரல்களால் வலது மார்பில் மார்பகக் காம்பி லிருந்து தொடங்கி வட்டமாகச் சுற்றி பரிசோதனை செய்ய வேண்டும். அதே போல் இடது கையைத் தலைக்கடியில் வைத்துக் கொண்டு வலது கையால் இடது மார்பைப்பரிசோதிக்கவேண்டும்.

சாதாரண சமயங்களில் தன் மார்பு எப்படி இருக்கும் என்று தெரிந்து கொண்டிருக்கும் பெண்களுக்கு, அங்கு ஒரு சுண்டைக்காய் அளவு கட்டி இருந்தாலும் உடனே தெரிந்துவிடும்.

அப்படி ஏதேனும் தென்பட்டால் அதைத் தேய்த்தோ, கசக்கியோ செய் யாமல், பெரிதாகிறதா, மறைகிறதா என்று பொறுத்திருந்து பார்க்காமல் உடனே டாக்டரிடம் செல்லவும்.

—ஜெயா. வி. ராமன்.











மர்மத் தீவில்

மாலா-பாலா

கதை: மகிழ்ச்சிக் கண்ணன்
சித்திரம்: விஜயா




பாஸ், போலீஸ்!
அய்யா, பயந்துடாதே டேன். இந்த போலீஸ் ஆபிஸர் தானு, பயமில்லை. அவங்களை மரியாதையா என் அறைக்கு அழைச்சுகிட்டு வாங்க.
வாங்க, வாங்க. டேமி மோமா, ஊ-ருக்கும் மத்தவங்களுக்கும் ஸ்பெஷலா விருந்து ஏற்பாடு பண்ணலை.
இதெல்லாம் இருக்கட்டும். வரதராஜன் வந்தாரே என்ன செய்யறாரு. பிடிச்சுட்டீங்களா இல்ல...
பாக்கறீங்களா, இந்த டி.வியிலே. தனி ரூமில அடச்சு வச்சிருக்கேன்.
ஓ... இவருடைய பசங்க?
மாலா... சரி இவன் இவருடைய அண்ணன் இல்லியே...
அப்படியா! ஏன் மாலா, அப்போ இவன் யாரு?
எங்கண்ணன் கோபாலபட், அங்கிள் ஆறு அண்ணன் அதான் கூப்பிடுவேன்!
ஓ.. நீங்கதான் இவங்களுக்கு ரகசிய உதவி புரிபவரா?
ஹம், இவளோ என்னைச் செய்யப் போறீங்க. வெளிய உயிரோட விட்டா என்பாடு திண்டாட்டம்!
இல்ல. இங்கேயே இருக்கட்டும் போறு... வாங்க விருந்துக்குப் போகலாம். மாலா நீ டான்ஸ் ஆடணும்.

தொடரும்...

ஆயிரக்கணக்கான குடும்பங்கள் காலங்காலமாக
பயன்பட்டுவரும் கிராம்புத் தைலத்தின்
நன்மைகளை ப்ராமிஸில் கண்டுணர்ந்தனர்.

கிராம்புத் தைலம் கொண்ட இணையற்ற டூத்பேஸ்ட்
ப்ராமிஸ்

நீங்களும் ஏன் அதை உபயோகிக்கக்கூடாது?



ப்ராமிஸ்

பற்சிதைவிலிருந்து பாதுகாக்கிறது,
வாய்க்குப் புத்துணர்ச்சி
தருகிறது மற்றும்
துர்நாற்றத்தை அகற்றுகிறது.

பல்சாரா தயாரிப்பு

ஆரோக்கியமான பற்கள்,
ஈறுகள் மற்றும் புத்துணர்ச்சிமிக்க
மூச்சுக்கு ப்ராமிஸ்.


CHAITRA-BLS-453-R_TAM

பெண்கள் திருமணமாகி மங்கல நாளில் புக்ககம் புகும்போது பெண்ணின் அன்னை அந்தப் பெண்ணின் எதிர்காலத்திற்கு என்ன அறிவுரை வழங்குவார்கள்...? சில பெண்கள் இங்கே கூறுகிறார்கள்.

பெண்கள் புகுந்த வீடு புகும்போது...



சங்கரி



சசிகலா

திருமதி சங்கரி வெங்கடாசலம்

நான் என் பெண்ணிற்கு அறிவுரை சொன்ன ஒரே வாக்கியம், ''நீ இங்கே வளர்த்துக் கொண்ட நல்ல பழக்கங்களையெல்லாம் அங்கேயும் சென்று வளர்த்துக் கொள்'' என்பதுதான்.

''நம் வீட்டிற்கு ஒரு பெண் வந்து தான் லக்ஷ்மி கடாட்சத்தை கொடுப்பாள் என்பது போல் நீ அந்த வீட்டுக்குப் போனதால் தான் உன் புகுந்த வீட்டில் அருளுடன் கூடிய அமைதி உண்டாகியுள்ளது என்று அவர்கள் மெச்சும்படி நடந்து கொள்ள வேண்டும். எப்போதும் புன்னகையுடன் அதிராமல் பேசிக் கொண்டு, அமைதியாக உன் குடும்பப் பணிகளை நடத்து'' என்பது தான் நான் என் மகளுக்குச் சொன்ன அறிவுரை.

திருமதி சசிகலா ராமமூர்த்தி

''என் பெண்ணிற்கு நான் சொல்ல விரும்புவதெல்லாம் வெகு சிக்கனமாக அங்கு செலவு செய்யப் பழகிக் கொள் என்பதுதான். அது இன்றைய பொருளாதாரத்திற்கு மிகப் பயனளிப்பதோடு மட்டுமல்லாமல், தன் வீட்டுச் செல்வத்தை ஊதாரித்தனமாக மருமகள் செலவு செய்கிறாள் என்ற அவதூறுக்கு ஆளாகக்கூடாது என்பதால் தான்.

மேலும் கூட்டுக் குடும்பமே சாலச் சிறந்தது என்பதையும் என் மகளுக்கு மிகப் பதியும்படி சொல்வேன். அவளும் வேலைக்குப் போய், கணவனும் வேலைக்குப் போனால்—வீட்டில் பாதுகாப்பாக – குழந்தைகளுக்கு ஓர் அருமையான துணையாக அவர்கள் அமைவார்கள். என்ன தான் ஆயாவை வேலைக்கமர்த்தினாலும் சொந்த தாத்தா – பாட்டி மற்றும் உறவினர்கள் கவனித்து வளர்ப்பது போல் அவர்களால் (ஆயாக்கள்) குழந்தையைக் கவனித்து வளர்க்க முடியாது என்பது என் ஆழமான கருத்து.''

டாக்டர் சாரதா சேஷய்யன்:-

நானும் டாக்டர், கணவரும் டாக்டர் என்ற முறையில் நாங்கள் எங்கள் பெண்ணிற்கு, மனோதத்துவ ரீதியாக எந்தப் பிரச்சினையையும் அணுகச் சொல்லிக் கொடுத்திருக்கிறோம்.

சாதாரணமாகவே பெண்களுக்கு விட்டுக் கொடுக்கும் குணம் ஆண்களை விட அதிகம் வேண்டும். அதுவும் புதியதாசத் திருமணமாகி போகும் பெண்களுக்கு இது முக்கியமாக இருக்க வேண்டியது என்பது என் கருத்து.

அதற்குத் தான் ''நலங்கு'' என்ற திருமண சடங்கில் தலைக்கு மேல் அப்பளம் உடைத்தல் என்ற நிகழ்ச்சியும், தேங்காயை யார் பறிப்பது என்பதில் இருவருக்கும் போட்டி ஏற்பட்டு, கடைசியாக மாப்பிள்ளை வெற்றி பெறுவதும்!


சாரதா


அகிலாண்டம்மாள்


நாகலக்ஷ்மி

இது வெறும் விளையாட்டு என்று தோன்றினாலும் -- இதன் ஆழமான கருத்து அந்தச் சடங்கிலேயே ''உங்களுக்கு இன்று முதல் நான் மனைவியாகி விட்டேன். அதனால் உங்கள் செயல் அனைத்திற்கும் நான் விட்டுக் கொடுப்பேன்'' என்பது தான் பொருள்.

மேலும் அந்தக் காலங்களில் கணவன் உண்ட இலையில் தான் மனைவி உண்பாள். இதன் உட்கருத்தையும் என் மகளுக்குத் தெளிவாகக் கூறியிருக்கிறேன். அதாவது, கணவனது செயல்களுக்கு அருவருப்பு கொள்ளக் கூடாது என்பது இதன் தாத்பரியம். அவனுடைய தீய பழக்கங்களைக் கண்டு எரிச்சலடைந்து அவனை விட்டு விலகாமல் அவனை அந்தக் குணங்களிலிருந்து திருத்துவதே ஒரு மனைவியின் கடமை.''

திருமதி அகிலாண்டம்மாள்:—

''என் மகள்கள் இருவருக்கும் பத்து வருடங்களுக்கு முன்பே திருமணமாகி, அவர்களும் இப்போது மிக மகிழ்வாயிருக்கிறார்கள். அவர்களுக்கு நான் சொன்னதெல்லாம், வீட்டில் மாமியார், மைத்துனர்கள் — நாத்தனார் ஆகியோரை முதலில் உன் பண்பான நடத்தையால் — அன்பான வார்த்தைகளால் உன் வசப்படுத்திக் கொள் என்பதுதான்!

திருமணத்தில் நாத்தனார் மன்னிக்கு மடிசார் கட்டுவதே இந்தப் பொருளில் தான். அதாவது மன்னியைப் புரிந்து கொண்டு நடப்பதற்கும், மனைவியும் நாத்தனாரை அரவணைத்துச் செல்ல வேண்டும் என்பதற்கும்தான்.

மேலும் குழந்தைகளை வளர்ப்பது பற்றித் தான் ஒவ்வொரு பெண்ணும் அவசியம் தெரிந்து கொள்ள வேண்டும். ஒரு பெண் கல்யாணமான சில நாட்களுக்குத் தான் மனைவி. பிறகு தாய்மைப்பேறு பெற்றவுடனேயே அந்தப் பெண் போற்றத் தகுந்தவளாகி விடுகிறாள். குழந்தையை நல்லமுறையில் வளர்க்கிறாள் என்பதனாலேயே மாமியார் போன்ற அந்த வீட்டுப் பெரியவர்களுக்கு மருமகள் மீது தனி அன்பும்—ஆசையும் பெருகும்.''

திருமதி நாகலக்ஷ்மி கோபாலன்

ஒரு பெண் திருமணமாகிப் போவது மிகவும் போற்றத் தகுந்த செயல். அதிலும் தமிழர் பண்பாடு — பழக்க வழக்கங்களில் மனைவிக்குத் தாய் ஸ்தானத்தை எல்லோரும் அளித்துப் போற்றுவது தான் இங்கு விசேஷம். அதைத் தன் நடத்தையால் பெண் என்பவள் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்பதுதான் என் மகளுக்கு நான் சொன்ன அறிவுரை.

மேலும் கடன் வாங்கும் வழக்கத்தை கணவனுக்கு வளர்த்துக் கொள்ள தானே காரணமாக இருக்கக் கூடாது. புருஷனும் கடன் வாங்கினால் அதைத் தடுக்கவேண்டும். உதாரணமாக கண்ட சினிமாவையெல்லாம் பார்த்து விட்டு கடன் மூலம் வீட்டுக்கு சோபா, டி. வி. போன்றவை வாங்கவேண்டும் என்று மனைவி கணவனிடம் நச்சரிக்க... புது மனைவியிடம் தன் கவுரவத்தைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்ற வெறியில் கணவனும் அளவுக்கதிகமாக கடனில் சாமான்கள் வாங்கிப் போடுவான். முதல் தேதி சம்பளம் வாங்கியவுடன் போதவில்லை என்று வீடு ரகளைக் கூடமாகிவிடும். தன் குடும்பத்தில் கஷ்டமானாலும் — சந்தோஷமானாலும் நடப்பதை நான்கு சுவர்களுக்குள்ளேயே வைத்திருக்க வேண்டும். மற்றவர்கள் அனுதாபத்தைப் பெற வேண்டி தன் புருஷனது குறைகளையோ — தன் வீட்டுச் சூழ்நிலையையோ எக்காரணம் கொண்டும் பெண் நாலு பேரிடம் சொல்லக் கூடாது.''

- பேட்டி: வி. தியாகு



வீட்டை அழகாக வைத்துக்கொள்வது எப்படி!

விமலா ரகுநாதன்

'**வீ**ட்டை அழகாக வைத்துக் கொள்வது எப்படி?' என்ற கட்டுரை ஒன்றைப் படித்தது முதல், என் வீட்டையும் அழகாக வைத்துக்கொள்ள வேண்டும் என்று தோன்றியது. அவர் அலுவலகத்திலிருந்து வந்தவுடன் அந்த கட்டுரையைப் படித்துக் காண்பித்தேன்.

''ஓ. கே. நாளை ஞாயிற்றுக்கிழமை தானே! குழந்தைகளையும் வைத்துக் கொண்டு ஒவ்வொரு அறையாக ஒழிப்போம்'' என்று உற்சாகம் தந்தார். குழந்தைகளும் சந்தோஷத்துடன் தங்கள் பங்குக்கு ஒத்துழைப்பதாகக் கூறினார்கள்.

அடுத்தநாள் புது உற்சாகத்துடன் விடியற்காலையிலேயே எழுந்து விட்டேன்.

''இன்றைக்கு ஞாயிற்றுக்கிழமை 'ஸ்பெஷல்' ஒன்றும் கிடையாது. சீக்கிரம் காரியம் முடிந்தால் தான் வீட்டை ஒழிக்க முடியும்'' நான் காப்பியும் கையுமாக அவரிடம் கூறிய போது அவர் திடுக்கிட்டார். ''ஐய்யய்யோ! வெங்காய சாம்பார் ஆசையில் மண் போட்டு விடாதே! பத்து மணிக்கு மேல் ஒழித்துக் கொண்டால் போயிற்று. அதுதான் இத்தனை பேர் இருக்கிறோமே! அதற்குள் நான் பேப்பரைப் படித்து முடித்து விடுகிறேன்...'' என்றார் பதைப்புடன்.

நான் வேறு வழியின்றி ஞாயிற்றுக் கிழமை ஸ்பெஷலான வெங்காய சாம்பார், உருளைக் கிழங்கு —வெங்காயம் கறி செய்வதில் ஈடுபட்டேன். இருந்தாலும் மனம் வீட்டை ஒழிப்பது பற்றித் திட்டமிட்டவாறு தான் இருந்தது. என் வீட்டை அலங்காரமாக வைப்பது போலவும், வருபவரெல்லாம் என் கைவண்ணத்தைப் புகழுவது போலவும் கனவு கண்டேன்.

பத்து மணி ஆயிற்று. முதலில் முன் அறையை ஒழிப்போம் என்று நான் சொல்ல, ''வேண்டாம், வேண்

டாம், நடு அறை பரணை ஒழிப்போம்' என்றார் அவர்.

தாமுவை, அடுத்த வீட்டுக்குப் போய் ஏணி வாங்கி வரும்படி நான் சொல்வதற்குள், அவர் வேஷ்டியை தானே வரிந்து கட்டிக் கொண்டு, ஜன்னலில் கால் வைத்து, பரண் மேல் ஏறி உட்கார்ந்து கொண்டார்.

தலையெல்லாம் சிலந்தி வலைகள் மூட ''முதலில் ஒவ்வொரு பெட்டியாகத் திறப்போம். அதில் வேண்டியது எது, வேண்டாதது எதுஎன்றுபிரித்து,வேண்டாதவற்றை தள்ளி விடுவோம்'' என்று கூற,நானும் அதற்குச் சம்மதித்தேன்.


''வீட்டுக்குக் குடிவந்த போது ஏற்றிய பெட்டிகள்! ஜாக்கிரதை!'' என்று நான் எச்சரிக்கை குரல் கொடுக்க, அவர் வெகு முன் ஜாக்கிரதையுடன் முதல் பெட்டியைத் திறந்தார்.

''ரேடியோ...!''

''அது பாடுவதை நிறுத்தி, எத்தனையோ யுகமாயிற்று. மெதுவாகக் கீழே இறக்குங்கள்! அதற்கு 'பார்ட்ஸ்'கூட கிடைக்காது. போட்டு விடலாம்...'' என்றேன் உற்சாகத்துடன்.

அவர் என்னை ஏனோ துச்சமாகப் பார்த்தார். அன்புடன் அட்டைப் பெட்டி மேல் தூசியெல்லாம் துடைத்தார். கம்பீரமாக ஒரு ராஜ பார்வை பார்த்தார். மீசை இருந்தால் அதையும் முறுக்கி இருப்பார்.

''என்ன நினைத்துக் கொண்டாய்! இது என் தாத்தா காலத்தில் ஏலத்தில் எடுத்த ரேடியோ! ஊரிலேயே முதன் முதலாக வாங்கியது. இதில் தான் முதன் முதலாக சுதந்திரம் கிடைத்ததைக் கேட்டோம்.. காந்தி



மறைந்ததைக் கேட்டு என்னமாய் அழுதோம்...''

அவர் புளகித்துப் போய்க் கூறி, ''இதையா 'தள்ள' வேண்டுமென்கிறாய்! இது பரம்பரை சொத்து.... அடுத்த பெட்டியைப் பார்ப்போம்,'' என்று திட்டவட்டமாகக் கூறினார். அடுத்த பெட்டியைத் திறந்தார். எத்தனையோ ஆண்டுகளாகத் திறக்க முடியாமல் இருந்த கள்ளிப் பெட்டி அவ்வளவு லேசில் திறந்து விடுமா.... ஒரு 'கலவரப் போராட்டம்' நடத்தி, பெட்டியைத் திறந்து, ஒரு வெற்றிப் புன்னகைப் பார்த்தார். ''அவ்வளவும் உடைந்து, துருப்பிடித்த சாமான்கள்...''

நான் அலறினேன், அவர் எடுத்துக் காண்பித்த பொருளைப் பார்த்து... 'உடைந்து போன கஜலக்ஷ்மி பொம்மை...'

குடையை உபயோகிக்காது இருக்கும் போது, ஒரு ஜெறிய பிளாஸ்டிக் கவரில் கட்டிக் கற்பூரத்தையோ, பூச்சி உருண்டையையோ வைத்து ''பின்''னால் கம்பியுடன் இணைத்து மடித்துப் பத்திரப்படுத்தினால், குடையில் புள்ளித் துவாரங்கள் விழாது. பூச்சிகள் அண்டாது.

—''விமலி''

''நன்றாய்ச் சொன்னீர்கள். அந்தப் பெட்டியை முதலில் துடைத்து மூடுங்கள். அத்தனையும் என் பிறந்த வீட்டிலிருந்து கொண்டு வந்த 'ஆடி' வந்த சாமான்கள். அந்த கஜலக்ஷ்மி பொம்மை வந்தவேளை தான் இன்று 'நாலு' காசு பார்க்கிறோம் எங்காத்திலிருந்து வந்த சாமான்தானே... அப்படித்தான் உங்கள் கண்ணை உறுத்தும்...'' அவர் வெற்றிகரமாக வாபஸ் வாங்கினார்.

''சரி! அடுத்த பெட்டியைத் திறப்பதற்குள் சூடாக ஒரு 'கப்' காப்பி கொண்டு வா...'' அவர் ஒரு 'கபில் தேவ்' பார்வையுடன் கேட்க, நான் அடுப்படிக்குச் சென்று காப்பியுடன் திரும்பினேன்.

எப்படிக் கொடுப்பது?

தாமு, காப்பியும் கையுமாக ஏணியில் ஏறி, ஏணி அவன் அவசரவேகம் தாங்காமல் சறுக்க, அவன் அலறலுடன் என்னிடம் தாவ, காப்பிக் கோப்பை அபிஷேகம் செய்தவாறு தரையில் விழுந்தது.

''நன்றாய் இருக்கிறது. எல்லோரும் எனக்கு உதவும் லக்ஷணம்'' என்று, என் பொருமலுடன் ஒருவாறு காப்பி 'சப்ளை' முடிந்தது.

அடுத்த அட்டைப் பெட்டி நிறைய புத்தகங்கள்!

அவர் காணாமல் போய் விட்டதாக நினைத்த, நாலைந்து புத்தகங்களை, அன்புடன் அணைத்துக் கொள்ளவும், தாமுவும், ஜன்னல் வழியாக பரணில் ஏறி, அட்டைப் பெட்டிகளோடு ஐக்கியமானான்.

முடிவில், ஒரு மணி நேரம் பரணை ஒழித்து முடித்து, நாங்கள் செய்த முடிவு, அத்தனையும் எங்களுக்கு வேண்டிய சாமான்கள்!

ஒருவழியாக நடு அறையை ஒழித்தாயிற்று!(?)

படுக்கை அறைக்குள் சங்கமமானோம்.

கட்டிலை மாற்றிப் போடும் யோசனையை மேற்கொண்டு ஒவ்வொருவர், ஒவ்வொரு பக்கம் பிடித்துக் கொண்டோம். தாமு ஒட்டடை அடிக்கும் எண்ணத்துடன், ஒட்டடை கொம்பை எடுத்து வந்து, சுறுசுறுப்புடன் அடிக்க ஆரம்பித்தான்.


சின்னது, ''ஐய்யய்யோ! ஒட்டடை ஓடுகிறது...'' என்று திடீரென்று அலறியது. என்னவோ, ஏதோவென்று அண்ணாந்து பார்த்தோம். நாலைந்து சிலந்திகள் தப்பித்தோம், பிழைத்தோம் என்று ஓடின. நான் பொங்கி வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டு, மீண்டும் கட்டிலைத் தூக்கிய போது... இந்த சந்தடியில் அவர் காலை கட்டிலின் முனை பதம் பார்த்துவிட, அவர் கோபத்துடன் அலறினார். 'சரிதான், பசிவேகம்' என்று நான் உஷாராக சமையலறையில் புகுந்து கொண்டேன்.

நான் சமயோசிதமாக கட்டிலின் அடியில் அடுக்கி வைத்திருந்த பஞ்சுப் பொதிகள், தாமுவின் த்வம்சத்தில், காற்றில் பறக்க, உடலெங்கும் பஞ்சாக 'சின்னது' வந்து நின்ற கோலத்தைப் பார்த்து நான் பிரமித்தேன்.

பெருமையுடன் அளிக்கின்றோம்

ஆயுர்சக்தி® யை-புதிய

முவ்வகை செயற்திறன் கொண்ட ஆயுர்வேத வலி நிவாரணி.





ஆயுர் சக்தியின் தனித் தன்மை என்ன ?

இப்பொழுது, உங்களுக்கு தலைவலி, ஜலதோஷம், தசைப்பிடிப்புக்களைப் போக்க தனித்தனியான மருந்துகள் தேவையில்லை. ஆயுர்சக்தி இவைகளை ஒன்றாக இணைத்து உருவாக்கப்பட்டுள்ளது. பல மூலிகைகளைக் கொண்ட ஆயுர்சக்தியின் திறன் மிக்க கலவைப் பொருட்கள் உடனடியாக வேலை செய்து விரைவில் நிவாரணம் அளிக்கிறது.

பல வருட ஆராய்ச்சிகளின் விளைவாக ஆயுர்வேத முறையில் அரிய பல மூலிகைகள் மற்றும் சுத்தமான மூலிகைத் தைலங்களைக் கொண்டு ஆயுர்சக்தி தயாரிக்கப்பட்டுள்ளது.

எனவே அடுத்தமுறை நீங்கள் தலைவலி, ஜலதோஷம் அல்லது தசைப் பிடிப்புகளால் அவதியுறும் போது புதிய சக்திவாய்ந்த ஆயுர்சக்தியை நாடி விரைவில் நலம் அடைவீர்.

உங்களது வீட்டு உபயோகம் மற்றும் பயணத் தேவைகளுக்கு ஏற்ப மூன்று விதமான அளவுகளில் கிடைக்கின்றது.

ஆயுர்சக்தி — முவ்வகையில் செயலாற்றும் அதிவேக வலி நிவாரணி

இத்தரமான படைப்பினை அளிப்பவர்கள் ;

பொருக்கா இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிட்.

கன்ஸ்யூமர் ப்ராடக்ட்ஸ் டிவிஷன்,
22-ஏ, கதீட்ரல் சாலை, சென்னை-600 086.
தொலை பேசி : 83782

Interpub-(M)-83

வாசலில் அபாய அறிவிப்புக் குரல்... ''ஸார் இல்லையா....'' 'பெட்ரூமில்' வந்து நின்றார் நண்பர்.

''ஹலோ... ஹி... ஹி... ஸார் என்ன 'ஸன்டே மூடா...' அவளும் இப்படித்தான் ஆத்துக்கு நீங்கள் ஒன்றுமே செய்வதில்லை' என்கிறாள். நமக்கேது ஸார் அதற்கெல்லாம் டைம்...'' என்று சமய சந்தர்ப்பம் தெரியாமல் உளறி வைத்தார்.

நான் மூன்று மணிக்கு 'டிபன்' வேலை முடிந்து வெளியே வரும்போது வீடு இருந்த 'அலங்கார' கோலத்தைக் கண்டு அழுகை வந்தது. பரணி லிருந்து விழுந்த தூசி தும்புகள், குப்பை பேப்பர்கள், அலங்கார வளைவு களாகக் காட்சி அளித்தன. கட்டிலின் மேல் ஒட்டடைக் கொம்பும், துடைப்ப மும் உறவாடிக் கொண்டிருந்தன. அறை பூராவும் பெட்ஷீட்டுகள், தலை யணைகள், முடிச்சவிழ்ந்த பஞ்சுத் துகில்கள்!

அவர் இதுதான் சமயம் என்று நண்பருடன் வெளியே போய்விட்டிருந் தார். தாமு விளையாட வெளியே போய்விட, நான் நடுக்கூடத்தில் பிர மித்து நின்றபோது, ''அம்மா'' என்ற - குரல்!

சின்னது, ''நான் இந்த அல மாரியை ஒழித்து விட்டேன்!'' என்று குரல் கொடுக்க, நான் பகீரென்ற உணர்வுடன் ஓடினேன்.

வீட்டை ஒழிப்பது என்றால் இப்படித் தான் என்று நினைத்துக் கொண்டதோ என்னவோ, அறை பூராவும் துணிகளை இரைத்துவிட்டு அலமாரியைத்துடைத் கொண்டிருந்தது அது!

நான் அழாக் குறையாக, குப்பை களுக்கு நடுவில் கன்னத்தில் கைவைத்து உட்கார்ந்து விட்டேன்!

நான் வேலை பார்த்து வரும் ஆலயத் தில், தயாரிக்கப்படும் மஞ்சள் குங்கு மத்தில், தங்களால் பக்கம் 70ல்(ஆகஸ்டு, மங்கையர் மலர் '83) விவரிக்கப் பட்டுள்ளது போன்று ஒரு கிலோ மஞ்சளுக்கு 300 மி. லி. வீதம் நல்லெண் ணெயும் சேர்ப்பது முறையாகக் கடை பிடிக்கப்பட்டு வருகிறது. இல்லாவிடில் வெண்காரத்தின் காரமும், எலுமிச்சை யின் அமிலத் தன்மையும் நெற்றிப் புண்ணுக்கு வழி வகுத்துவிடும் என் பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

—ஆர். தியாகராஜன்



ஸ்மார்த்த கன்னட ஹரிதல கோத்ரம், பட்டதாரிகள் அண்ணன், தங்கை 36, 33 வயது உத்திராடம், அவிட்டம். தகுந்த பட்டதாரி வேலையில் உள்ள வரன்கள் தேவை. பெட்டி எண் 936

கௌண்டின்ய கோத்ரம், வடமாள், நடுத்தர குடும்பத்தில் உள்ள குடும்பபாங்கான பெண்ணிற்கு ஏற்ற மணமகன் தேவை. வயது 33. மாநிறம். படிப்பு 9–ம் வகுப்பு. சுமாராக சீர்வரிசை செய்ய இயலும். ஸ்மார்த்தாவில் உட்பிரிவுகள் பரவாயில்லை. இரண்டாம் தாரம் பரவாயில்லை. பெட்டி எண்: 937

குரும்பக் கவுண்டர் இனத்தைச் சார்ந்த 32 வயது உள்ள எல். ஐ. சி. அலுவலகத்தில் பணிபுரியும் மாதம் ரூ. 1000]- வருமானமுள்ள மணமகனுக்கு அதே இனத்தைச் சேர்ந்த அழகும், குணமும் உள்ள பெண் தேவை. வேலையில் இருந்தால் நல்லது. பெட்டி எண்: 938

ஐ. சி. எஃப்பில் மாதம் ரூ. 600]- சம்பளம் பெறும் 34 வயது 'ஹரிஜன்' மாப்பிள்ளைக்கு சென்னை நகரில் வேலை செய்யும் அரிஜன வகுப்பைச் சேர்ந்த மணப்பெண் தேவை. மத்திய மாநில அல்லது ரயில்வேயில் வேலையில் இருந்தால் நலம். பெட்டி எண்: 939

ஆறு லக்ஷம் சொத்து. பி. யூ. சி., ஐ.டி.ஐ. முதல் தேர்வு, வயது 25, சிம்சனில் வேலையிலிருந்து, மின்சார வெட்டினால் தற்காலிகமாக வேலை இல்லாமல் இருக்கும் சோழிய வெள்ளாள பிள்ளை மணமகனுக்கு அழகிய வசதியான பி. யூ. சிக்கு மேல் படிப்பில்லாத மணமகள் தேவை. உட்பிரிவுகள் பரவாயில்லை. பெட்டி எண்: 940.

திருநெல்வேலி சைவ ' வெள்ளாளப் பிள்ளை வகுப்பு, 25 வயது, 153 செ. மீ. உயரம். அரசுடைமை வங்கியில் வேலைபார்க்கும் நல்ல தோற்றம் கொண்ட பட்டதாரிப் பெண்ணுக்கு நல்ல வேலையிலுள்ள தக்க வரன் தேவை. பெட்டி எண்: 941.

Wanted Sengundha Mudaliyar Bride Educated, Homely, and Beautiful for a Handsome Bank Employed Aged 27/160cm Electronically Talented also All India Radio Participant. Reply with Details Including Photograph.

Box No 942

வடமாள், கௌண்டின்ய கோத்ரம். நல்ல வருமானமுள்ள காண்ட்ராக்டர் வேலை பார்க்கும் 36 வயது ஐயர் மணமகனுக்கு, நல்ல லக்ஷணமான குடும்பப் பொறுப்புள்ள பெண் தேவை. ஜாதகம் போட்டோவுடன் அனுப்பவும். பெட்டி எண்: 943.

பக்தியுள்ள சைவ ரெட்டியார், 29 வயது, நல்ல சிகப்பு, நல்ல அழகு. சித்திரத்தில் தேர்ச்சி, கல்லூரியில் பரிசுகளும் பாராட்டுக்களும் பெற்றவள். பி. ஏ. சென்னை தேசிய வங்கியில் வேலை திருவோண நட்சத்திரம். பெண்ணிற்குத் தக்க மணமகன் தேவை. இதர சைவ வகுப்பு சம்மதம். பெட்டி எண்: 944.

கௌண்டின்ய கோத்ரம். பிரஹசரணம் 5'–2'' வயது 29, பி. காம் படித்த மாநிறமுள்ள, வீட்டு வேலையில் நல்ல தேர்ச்சியும் பாரத்கோங்கோவில் பி. ஏ. வாக வேலை செய்யும் பூராட நட்சத்திரம் துலா லக்னத்தில் பிறந்த பெண்ணிற்கு, நல்ல வேலையில் உள்ள வரன் தேவை. பொருத்தமான நட்சத்திர ஜாதகத்துடன் விபரம். பிரஹசரணம் வடமாள் எழுதவும். பெட்டி எண்: 945.

ஹரித கோத்ரம். ப்ரஹசரணம். உத்திரம் வயது 27. ஆஸ்லோ (நார்வே) வில் ஸிஸ்டம்ஸ் அனலிஸ்டாக வேலைபார்க்கும் பையன். இதர வசதிகளுடன் மாதம் 1000]- டாலர்

வருமானம். வரதட்சிணை இல்லை. பட்டதாரி பெண் தேவை. நல்ல தோற்றம். உயரம் 5½', 25 வயதுக்கு மேற்படாமல். உட்பிரிவு சம்மதம். புகைப்படம், ஜாதகம் தேவை. பெட்டி எண்: 946

வடமான், ஸ்ரீவத்ஸ கோத்ரம், பூசம் நட்சத்திரம், 5' உயரம், மாநிறம். வயது 29. பி. யூ. சி. படித்து முடித்துள்ள பிராமண அய்யர் பெண்ணுக்கு நல்ல உத்தியோகத்திலுள்ள மணமகன் தேவை. பெட்டி எண்: 947

சில சந்தர்ப்பவசத்தால் கல்யாணம் ஆகி வாழ முடியாமல் பிறந்த வீடு வந்த பெண்ணிற்கு பையன் தேவை. பெண் பிராமணன் பாரத்வாஜ கோத்திரம். பார்ப்பதற்கு நன்கு லட்சணமாக இருப்பாள். பையன் கல்யாணம் ஆகி மனைவியை இழந்தவரா··னாலும் பாதகமில்லை. அல்லது 40 வயதிற்குள் திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும். பெட்டி எண்: 948.

திருமண மலர்ப்பகுதியில் விளம்பரம் செய்ய கட்டணம் ரு. 30/– தொகையை 'மங்கையர் மலர்' என்ற பெயருக்கு போஸ்டல் ஆர்டராக மட்டுமே அனுப்பவேண்டும். ஒரு விளம்பரத்தில் ஒருவருக்கு 30 வார்த்தைகளுக்குள் விவரங்கள் தர வேண்டும். பதில் அனுப்புபவர்கள் "விளம்பரதாரர், பெட்டி எண்.... c/o மங்கையர் மலர், கிண்டி, சென்னை-600032 என்ற விலாசத்துக்கு அனுப்பவும். தனிப்பட்ட கடிதப் போக்குவரத்து கிடையாது.

நத்தமன் உடையார் குலம், பி. ஏ. படித்த குடும்பப் பாங்கான 28 வயதான மணமகளுக்கு, அதே வகுப்பைச் சார்ந்த அல்லது மற்ற உட்பிரிவைச் சார்ந்த பட்டம் பெற்று உத்தியோகத்தில் இருக்கும் மணமகன் தேவை. பெட்டி எண்: 949.

ஹரித கோத்திரம், பிராமணன் வடமான் அவிட்ட நக்ஷத்திரம். நிரந்தரமான வேலையில் இருக்கும் 33 வயதான பெண்ணிற்கு நல்ல வேலையில் இருக்கும் மணமகன் தேவை. பெட்டி எண்: 950.

வடமான். ஆத்ரேய கோத்திரம். சென்னையில் சொந்த வீடும், சொத்தும் உள்ள தனியார் கம்பெனியில் டைப்பிஸ்ட்டாக வேலை பார்க்கும் எஸ். எஸ். எல். ஸி. படித்த 35 வயது பையனுக்கு சென்னையில் நிரந்தர வேலையில் உள்ள 27 வயதுக்குள் இருக்கும் பெண் தேவை. பையனுடைய மாத வருமானம் ரு. 450. பிறகு ரு. 700 வரும். ஜாதகம் இல்லை. மனப்பொருத்தம். போட்டோவுடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 951

கௌண்டின்ய கோத்திரம், ப்ரஹரசணம் 37 வயது: கேட்டை நட்சத்திரம்: எம். ஏ., சொந்தத் தொழில் புரியும் (Coimbatcre Based) நல்ல குணங்கள் கொண்ட பையனுக்கு உத்தியோகத்தில் உள்ள நற்குணங்கள் உள்ள பட்டதாரி பெண் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். ஜாதகம் இல்லை. போட்டோவுடன் விபரங்கள் எழுதவும். பெட்டி எண்: 952.

"வனத்துறையில் பாரஸ்ட்டராக பணிபுரியும் 30 வயது நிரம்பிய கேரள முதலியார் இனத்தைச் சேர்ந்த பட்டதாரி மணமகனுக்கு குணமும் அழகும் உள்ள மணமகள் தேவை. சாதி மத பேதமோ, வறுமையோ, கல்வியோ பொருட்டல்ல." பெட்டி எண் 953

மாநில அரசு வேலை. 800 ரூபாய். 33 வயது. வசதியான குடும்பத்தை சேர்ந்த ஐயர் பெண்ணுக்கு தகுந்த வரன் தேவை. பிராமண உட்பிரிவுகளில் எதுவும் சம்மதம். பெண் அடக்கமானவள். கல்வித் தகுதி உள்ளவர்களுக்கு உத்தியோகமும் பார்த்துத் தரப்படும். பெட்டி எண்: 954.

"ஹரித கோத்திரம், தமிழ் அய்யர், தமிழ்நாடு அரசில் ւணிபுரிந்து வரும், மாதம் ரு. 920]- வருவாயுள்ள ஏற்கெனவே திருமணமாகி, மனைவியின் உடல்நிலை காரணமாக இரண்டாம் திருமணம் (மனைவியின் சம்மதத்துடன்) செய்து கொள்ள விரும்பும் 35 வயது வரனுக்கு அய்யர் வகுப்பில் 30–க்கு கீழ் குடும்பப் பாங்கான மணமகள் தேவை. குழந்தைகள் இல்லை. எளிய திருமணம். வரதட்சிணை தேவையில்லை. போட்டோவுடன் எழுதவும்." பெட்டி எண்: 955.

வயது 23, 11–ம் வகுப்பு, படிப்ப நற்குணம், சிறப்பான அழகு, உடன்பிறந்தோர் நல்ல அரசுப்பணி, ஹிந்து பிற்பட்ட வகுப்பு சைவம்) குடும்பப்பாங்கான சொத்தும் உள்ள பெண்ணுக்கு ஹிந்துமத திருமணமாகாத (எந்த சாதியும் சம்மதம்) வரன் தேவை. பெட்டி எண்: 956

ஹிந்து, பிற்பட்ட வகுப்பு (சைவம்) வயது 25, போஸ்ட் கிராஜுவேட், இனிமை

பருவ வயதினர் பலரைப் பாதிக்கும் பிரச்னை: பரு... அது பற்றிப் பேசுகிறாள் ஒரு புதுமணக் குமரி.

'பருவ வளர்ச்சி என்றாலே பரு வரும். அதற்கு பரிகாரம் கிளியரெஸில்: பருக்களை கரைத்து கட்டுப்படுத்த உதவுகிறது.'



"அப்போது எனக்கு வயது 13. எனக்கு பரு வரத் தொடங்கியது. பரு வரும் போதெல்லாம் பல்லாண்டுகளாய் பாரா முகமாய் இருந்தேன். பின்பு ஒருநாள் என்னைப் பெண் பார்க்க ஒருவர் வந்தார். பருக்களை முகத்திலே பார்த்த உடனேயே என்னை அவர் வேண்டாம் என்றார். என் தோழி ஜெயாவின் ஆலோசனைப்படி நான் கிளியரெஸில் தடவத் துவங்கினேன். தவறாமல் அன்றாடம் இருமுறை தடவி வந்தேன். அப்புறம் ஒரு நாள் என் தோழி ஒருத்தியின் வீட்டில் மறுபடி 'அவரை' சந்தித்தேன். அவர் என்னை வைத்த கண் வாங்காமல் பார்த்தாரே பார்க்கணும். நீங்களும் நாள் தோறும் இருமுறை கிளியரெஸில் உபயோகியுங்கள். பருக்களைக் கட்டுப் படுத்துங்கள்! இப்போது ஜோடி சேர்ந்து வருகிறது கிளியரெஸில்!"

கிளியரெஸில் வேனிஷிங் மெடிகேஷன் மற்றும் கிளியரெஸில் ஸ்கின் கலர்டு மெடிகேஷன்— ஒப்பற்ற 3-வழிச்செயல் கொண்டவை.



1. உடைய வைக்கிறது பருக்களை
2. கரைக்கிறது பருக்களை
3. காய வைக்கிறது. பருக்களை



புதிய வேனிஷிங் மெடிகேஷன

ஸ்கின் கலர்டு மெடிகேஷன்

கிளியரெஸில் உலக நம்பர் 1 முகப் பரு மருந்து க்ரீம்

OBM/8625R TAM

யாக பழகும் நல்லியல்பு, அழகு, இன்முகம்: கறுகறுப்பு, சென்னையில் மாநில அரசுப்பணி நல்ல குணங்கள், ரொக்க சொத்து, சகோதரர்கள் சகோதரிகள் உயர் பணி, பெண்ணுக்கு ஹிந்து மத (சாதி வேறுபாடில்லை.) தகுதியான வரன் தேவை. பெட்டி எண்: 957

---

28 வயது ஹரித கோத்திரம். எம். எஸ்ஸி படித்து தனியார் கம்பெனி வேலை, ரூ. 2000]- மாத வருமானமுள்ள வாலிபனுக்கு பெண் தேவை. பெட்டி எண்: 958

Catholic (Muthiriyar / Tamilian) Assistant Professor of Madras College, Aged 28, Salary Rs. 1600 Pm, Seeks an Educated Employed / Unemployed Bride From Poor / Middle Class Family. Caste and Language no Bar. Box No. 959

ஹரித கோத்திரம், தெலுங்காணி: புனர்பூசம், 45 வயது தெலுங்கு பிராமணன். வக்கீல் குமாஸ்தாவாகவும் விளம்பர ஆலோசகராகவும் மாதம் ரூ. 750 சம்பாதிக்கும் வாலிபருக்கு இரண்டாந்தாரமாகப் பெண் தேவை. முதல் மனைவிக்கு புத்திரபாக்கியமில்லை. குழந்தைகள் உண்டு. குழந்தைகளை அன்புடன் கவனிக்க வேண்டும். திருமணம் சுருக்கமான முறையில் செய்தால் போதும். வரதட்சணை வேண்டாம். விருப்பமுள்ளவர்கள் போட்டோவுடன் ஜாதகமும் குடும்ப விவரங்களும் தெரிவிக்கவும். பெட்டி எண்: 960

தனியார் கம்பெனியில் பொறுப்பான வேலை, மாத வருமானம் ரூ. 650, 33 வயது. சித்ரகுப்தர் வழி சிர்கருணிகர் சைவான் பையனுக்கு 25 முதல் 31 வயதிற்குள் பி. யூ. சி. அல்லது பட்டப்படிப்பு முடித்து வேலையுடனே வேலையில்லாமலோ குடும்பப் பாங்கான பெண் தேவை. வரதட்சணை, ஜாதகம் தேவையில்லை. பிராமணன் கோத்திரமுடன் எழுதலாம். பெட்டி எண்: 961.

மௌன பார்க்கவ கோத்திரம், ரோகிணி நட்சத்திரம். 36 வயது, மாத்வ பிராமணர், பி.ஏ. ஹானர்ஸ் படித்து டெல்லியில்ரூ.1300 சம்பளத்திலுள்ள பெண்ணிற்கு வரன் தேவை தாரம் இழந்தவர்களும் விண்ணப்பிக்கலாம். பெட்டி எண்: 962.

அஷ்டசஹஸ்ரம்: ஷடமர்ஷண கோத்ரம். தஞ்சை ஜில்லா, கிருத்திகை, மேஷ ராசி 11ம் வகுப்பு. மாநிறம் வயது 33. செவ்வாய் தோஷம். நடுத்தர குடும்பத்திலுள்ள பெண்ணுக்கு வரன் தேவை. உட்பிரிவுகளும் சம்மதம். ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். இரண்டாந்தாரமானாலும் சம்மதம். பெட்டி எண்: 963.

கௌசிக கோத்திரம், வடமாள் ஐயர் பெண்ணிற்கு வயது 26. பூசம் எஸ். எஸ். எல். சி. வரை படித்தவள். வரதட்சணை வாங்காத சிக்கன திருமணத்தை விரும்பும் பரந்த உள்ளம் கொண்ட உத்தியோகத்தில் இருக்கும் மணமகன் தேவை. வயது வரம்பு (27—30) ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 964.

வேளாளர் வகுப்பைச் சேர்ந்த பி. ஏ. பிடி. ஆசிரியையாக தனியார் கல்வி நிலையத்தில் பணிபுரியும் நற்பண்புகளுடைய பெண்ணுக்கு (வயது 36) சிறந்த — பரந்த நோக்குமுள்ள, தகுந்த வரன் தேவை. இந்து மதத்தின் பிற பிரிவுகளும் சம்மதம். குழந்தைகள் இன்றி தாரம் இழந்தவர்களும் விண்ணப்பிக்கலாம். பெட்டி எண்: 965.

ஆத்திரேய கோத்திரம் — பிரஹசரணம் பரணி நட்சத்திரம். வயது 30 — தமிழ் பிராமண வகுப்பு — எஸ். எஸ். எல். சி.,

பூ அலங்காரம் செய்பவர்களுக்கு...

ஒரு 'காக்டெய்ல்' பார்ட்டியின் அழகை அதிகரிக்க வேண்டும் என்றால் அழுத்தமான நிற மலர்களை வைக்கலாம். எல்லோரும் கூடி நிற்கும் மாலை நேர பார்ட்டிகளில் மெல்லிய ரோஸ் நிற மலர்கள், ஆப்பிள் பச்சை நிற மலர்கள் அழகு தரும்.


—லட்சுமி

ஹிந்து தேறிய குடும்பப் பாங்கான பெண்ணுக்கு. நிரந்தர உத்தியோகத்தில் உள்ள தகுந்த வரன் தேவை. பெண் ஜாதகம் செவ்வாய் தோஷம் உண்டு. எந்த உட்பிரிவும் சம்மதம். ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 966.

சென்னையில் பிரபலமான பிரைவேட் கம்பெனியில் எழுத்தர் பணிபுரியும் ஹிந்து பிற்பட்ட வகுப்பு, 28 வயது, நல்ல குணங்களுடைய பையனுக்கு சென்னையில் வேலையில் இருக்கும் நல்ல குணமுள்ள பெண்ணின் பெற்றோர்கள் தொடர்பு கொள்ளவும் (ஹிந்து மத சாதி வேறுபாடில்லை.) எதிர்காலத்தில் பையனுக்கு ரொக்க சொத்து கிடைக்கும். பெட்டி எண்: 967.

அஷ்டசஹஸ்ரம், ஐயர், 33வயது, மூலம், பௌருகுத்ஸ கோத்திரம். தையல் டைப், ஷார்ட்ஹாண்ட் டெலிபோன் ஆபரேட்டிங் தெரிந்த குடும்பப்பாங்கான நடுத்தர குடும்பத்து (முகத்தில் ஆபரேஷன் வடு இருக்கும்) பெண்ணுக்கு வேலையிலுள்ள பையன்தேவை. உட்பிரிவுகள் சம்மதம். இரண்டாம்தாரமோ (அ) உடலில் சிறு ஊனமிருந்தாலும் பரவாயில்லை. பெட்டி எண்: 968.

கண்கள்...



இவற்றினுல் உணர்வுகளை வெளிப்படுத்துங்கள்

சிரிப்பு. மகிழ்ச்சி. சினம்.
சிருங்காரம். அத்தனையும்
சிறப்பாக எடுத்தியம்ப
முடியும்... சிங்கார் டீலக்ஸ்
கண்மையுண்ட உங்கள்
கண்களால். கருமைப்
பளபளப்பு மிக்கது.
சிங்கார்—அடடா! எத்தனை
குளுமை... விசேடமான
தயாரிப்பு சிங்கார்
...ஆகவே அத்தனை
அழகு... கண்களுக்கு
எரிச்சல் இல்லாதது..



சிங்கார்


டீலக்ஸ் கண்மை

இது ஒன்றே கண்களுக்கு
நல்மான கண்மை.


ராசி பலன்

செப்டம்பர் '83.

மேஷம்




இம்மாதம் உறவினர்களின் வருகையாலும், வீட்டில் ஏற்பாடாகும் சுப நிகழ்ச்சிகளாலும் பணம் அதிக அளவில் செலவழியக் கூடும். அலுவலகத்தில் எதிர் பார்த்த அளவு கிடைக்காத வரவேற்பு, பதவி உயர்வு போன்றவற்றால் அதிர்ச்சிகள் ஏற்படலாம். உடல் நிலையும் பாதிக்கக் கூடும். தெய்வத்தின் பேரில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்ட உங்களுடைய மனோபலத்தால் இவற்றை வென்று மேல் நிலைக்குச் சென்றிடுவீர்கள்.




ரிஷபம்

விளையாட்டுத் துறையில் உள்ளவர்களுக்கும், கலைஞர்களுக்கும் மிகுந்த வரவேற்பு உள்ள நாட்கள் இவை. வெளி நாட்டுப் பயணங்களும் ஏற்படக் கூடும். பொது மக்களிடையே புகழ் பரவும். அரசாங்க வேலையில் உள்ளவர்களுக்கு மேலதிகாரிகளின் பரிவான கவனிப்பு ஏற்படும். வீட்டில் குழந்தைகளின் பொருட்டு சுப நிகழ்ச்சிகளும், விருந்தினர்களின் வருகையும் உண்டாகும். பணச் செலவு வரவுக்குள் அடங்கியதாகவே இருக்கும்.

மிதுனம்



நெருங்கிய உறவினர் (அ) நண்பர் ஒருவரின் வெளி நாட்டிலிருந்து வந்த வருகையின் காரணமாக புண்ணிய யாத்திரைகள் மேற்கொள்ள வேண்டிவரும். நிலபுலன்கள் அல்லது வீடு வாசல் பல மாதங்களாக முயற்சித்து வந்தவர்களுக்கு இம்மாதத்தின் இறுதியில் பலன் கிட்டும். இதனால் குடும்பத்தில் நிலவி வந்த சண்டை, சச்சரவுகளும், மனஸ்தாபங்களும் நீங்கி மீண்டும் சுமுக நிலையும் அன்பும் பெருகும்.




கடகம்


நீண்ட நாட்களாகத் தொடர்ந்து அலைச்சல் கொடுத்துக் கொண்டிருந்த வழக்கு விவகாரங்களில் உங்களுக்குச் சாதகமாகத் தீர்ப்புக் கிடைக்கக் கூடிய சாத்தியக் கூறுகள் உண்டாகும். உயர் பதவியில் உள்ள அதிகாரி ஒருவருடன் ஏற்படும் எதிர்பாராத நட்பின் காரணமாக எடுத்த காரியத்தில் வீண் அலைச்சலின்றி வெற்றி உண்டாகும். மாணவர்களுக்குப் படிப்பில் கவனமும் அதனால் பாராட்டுக்களும் பரிசுகளும் கிடைக்கும்.

சிம்மம்

இம்மாதம் கணக்கு வழக்குகளில் மிகவும் கவனமாக இருக்க வேண்டி வரும். நெருங்கிய நண்பர் என்று சொல்லிக் கொள்பவராலேயே எதிர்பாராத நஷ்டமோ, தர்மசங்கடமான நிலைமைகளோ ஏற்படலாம். கூடிய வரை பார்ட்னர்ஷிப்பைத் தவிர்ப்பது நல்லது. குடும்பத்தில் அனுசரணையான உங்களுடைய நடப்பினால் மட்டுமே சுமுக நிலைமை உண்டாகும். மிகுந்த முன் ஜாக்கிரதையுடன் தெளிவான முடிவை எடுத்துவிட்டீர்களானால் பிரச்னைகளை வெகு எளிதில் தீர்த்துவிடலாம்.




கன்னி




உங்களுடைய மென்மையான சுபாவத்தை பார்த்துக்கொண்டு, மனத்தில் உள்ளதைப் 'பளிச்'சென்று வெளியில் சொல்லிவிடுவீர்களானால் நீங்கள் மறுகிக் கொண்டிருக்கும் பல பிரச்னைகளுக்குத் தீர்வு கண்டுவிட முடியும். இம்மாதம் ஓரளவு உடல் நலம் குன்றுவதுடன், குடும்பத்தில் அமைதியும் பாதிக்கப்படலாம். சிறு சிறு நிலையில் மனதைப் பாதிக்கக் கூடிய இவற்றை அலட்சியத்துடன் ஒதுக்கிவிடக் கற்றுக்கொண்டீர்களானால், பெரும் லட்சியங்களைச் சாதிக்கும் ஆற்றலைப் பெறலாம்.

துலாம்

இருமண சம்பந்தங்களில் ஈடுபட்டுள்ளவர்களுக்குச் சுபச் செய்திகளும், முயற்சிகளில் வெற்றிகளும் உண்டாகும். விளையாட்டுத் துறையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு நீண்ட காலமாக எதிர்பார்த்து வந்த வாய்ப்பு ஒன்று கைகூடும். இதனால் வெளி நாட்டுப் பயணங்களும் மேற்கொள்ள நேரிடலாம். குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகளும், கலகலப்பான சூழ்நிலையும் பண வரவும் சரளமாக இருப்பதால் சேமிப்பதற்கு ஏற்ற மாதமிது.




விருச்சிகம்




தெய்வ சிந்தனை நிரம்பிய மாதமாக இம்மாதம் செல்லும். தெய்வ வழிபாடு அல்லது தெய்வத்திற்கு நிகரான பெரியவர்களின் தரிசனம் இவற்றினால் மனநிம்மதி உண்டாகும். இதனால் பல மாதங்களாக இருந்து வந்த சஞ்சலங்களும் துயரங்களும் தீர்ந்து எதிர்காலச் சிந்தனைகளை ஆக்க பூர்வமாகச் சிந்திக்க இயலும். கணவரின் காரணமாக இருந்து வந்த சங்கடங்களும் இம்மாதம் நிவர்த்தியாகும்.

தனுசு

ஓரளவு உடல்நிலை பாதிக்கப்படும் மாதமாக இம்மாதம் விளங்கும். கண், வயிறு சம்பந்தமான கோளாறுகள் உண்டாகலாம். சேமிப்புக்களுக்குச் செலவை வைக்கிற நிகழ்ச்சிகளும் ஏற்படும். மாத இறுதியில் ஏற்படும் ஒரு திருப்பத்தின் காரணமாக நிதி நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டுக் குடும்பத்தில் குழப்பங்களும் குறையும். ஆழ்ந்த தெய்வ பக்தியும், உறுதியான மனமும் சங்கடங்களை எளிதில் கடக்க உதவும்.




மகரம்




மனதுக்கு இனிய உறவு ஒன்று ஏற்பட்டு அதனால் உங்கள் வாழ்க்கையில் பல முன்னேற்றங்களைக் காண்பீர்கள். வேலை தேடி அலைபவர்களுக்கும் இம்மாதம் சாதகமான வாய்ப்புக்கள் கிடைக்கும். குடும்பத்தில், ஆரம்பத்தில் சில விவகாரங்களுக்கு எதிர்ப்புக்களும் பயமுறுத்தல்களும் உண்டானாலும் உங்களுடைய அன்பால் அனைத்தையும் வென்று விடுவீர்கள். எதையும் விளக்கிச் சொல்லி நிலைமையைத் தெளிவாக்கினால், வெற்றி உமதே.

கும்பம்



அடுத்தடுத்துச் சிறு சிறுவெற்றிகளை அடைந்தாலும் அதனால் மகிழ்ச்சி யடைந்து நிலைதவறிவிட வாய்ப்புக்கள் அதிகம். பொறாமையினால் நண்பர்களும் உறவினர்களுமே பகைவர்களாக மாறிவிடக் வாய்ப்புக்கள் உண்டு. எனவே அதிகமான பேச்சுக்களில் ஈடுபடாமல் செயலாற்றுவது நல்லது. வீண் வாக்குவாதங்களைத் தவிர்த்தல் முன்னேற்றத்திற்கு அறிகுறி. சரளமாக வரும் பணத்தைப் பயனுள்ள வகையில் செலவழியுங்கள்.

மீனம்



சொந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும், உலோக சம்பந்தமான தொழில் செய்பவர்களுக்கும் அரசாங்க ஆதரவு கிடைக்கும் மாதமிது. நண்பர்களின் கூட்டுறவினால் பயனுள்ள திட்டங்களை வகுத்து வெற்றிக்கு அடிகோலலாம். குடும்ப விவகாரங்களில் அன்பும் அமைதியும் நிலவும். குழந்தைகளின் படிப்பின் காரணமாக செலவினங்கள் அதிகரிக்கக் கூடும். செலவு வரவுக்குள் அடங்குவதாகவே இருக்கும்.

இம்மாத இல்லத்தரசி போட்டி

பொருள்: ஜாம் வகைகள்

முடிவு தேதி: 15·9·83

சமையல் கூப்பன்

.... என்று தலைப்பில் சமையல் குறிப்பை இத்துடன் அனுப்பியுள்ளேன். இச் சமையல் குறிப்பு இதுவரை எந்தப் பத்திரிகையிலும், எந்தப் புத்தகத்திலும் வெளியானதல்ல என்று உறுதி கூறுகிறேன்.

கையொப்பம்

திருமணம் ஆண்களுக்கும் பாதுகாப்பானதே!



"எல்லாப் பெண்களுமே தன்னுடைய கணவர் இப்படி இப்படி இருக்க வேண்டும் என்று கனவு காண்பார்கள். தன் இல்லற வாழ்க்கை குதூகலமானதாக, ஜாலியாகச் செல்ல வேண்டும் என்றெல்லாம் கற்பனை செய்வார்கள். ஆனால் நீங்களோ பக்திமய மான கணவரை, வாழ்க்கையைத் தேர்ந் தெடுத்தீர்களே, எப்படி?''

என்று கேட்டதற்குச் சிரித்தார் திருமதி. சரோஜா (பீத்துக்குளி) முருகதாஸ்.

''நான் குதூகலமாக, சந்தோஷமாக வாழவில்லை என்று யார் சொன்னது? மிகமிக மகிழ்ச்சியோடு இந்த ஐந்தாண்டு காலமாக மண வாழ்க்கை வாழ்ந்து வரு கிறேன். எனக்கு மட்டுமின்றி, என்னைச் சார்ந்திருக்கிறவர்களுக்கும் ரொம்ப சந் தோஷம்தான். 'நம் குடும்பத்தில் இவளா வது கல்யாணம் செய்து கொண்டாளே' யென்று...''

''அப்படியென்றால் உங்களுடன் பிறந்த வர்கள் யாரும் திருமணம் செய்து கொள்ள வில்லையா...?''.

''இல்லை. நாங்கள் மூன்று சகோதரிகளும் சிறு வயதிலிருந்தே பக்தியில் ஈடுபட்டுவிட் டோம். என் பெரிய அக்கா நன்றாகப் பாடு வார். அடுத்தவளும், நானும் நடனம் கற் றுக் கொண்டோம். எனக்குப் பாட வராது என்று சொன்னதால் நானும் அந்த முடிவில் திருமணம் ஆகும் வரை பாடவில்லை. மிரு தங்கம் கற்றுக் கொண்டு அக்காமார்கள் பாடும்போது வாசிப்பேன். சொந்த ஊரான கேரளாவிலிருந்து தமிழ்நாடு பூராவும் எங் ளுடைய பாட்டுக் கச்சேரி, நடனக் கச்சேரி எல்லாம் நிகழ்ந்து இருக்கிறது. லலிதா, பத்மினி சகோதரிகள் நடனமாடும்போது நாங்கள் பாடுவோம். அவர்களோடு நெருங்கிய தொடர்பு இருந்தது. ஆக, இப்படியே என்னுடைய முப்பத்தியாறுண்டு வாழ்க்கையை வாழ்ந்து விட்டேன்...''

என்று சொல்லும் போது இவருக்கு முப் பத்தியாறு வயதா என்றுதான் ஆச்சரியப்பட வேண்டியதாக இருக்கிறது. இளமையும், அழகும், சுறுசுறுப்பும் அவருடைய பேச் சிலும், செயலிலும் நடனமிடுகிறது.

''அப்புறம், முருகதாஸை எப்படிச் சந்தித் தீர்கள்...?''

''அவர் எங்கள் வீட்டுப் பூஜைக்கு அடிக் கடி வருவார். குடும்ப நண்பரும் கூட. இருவருக்குமே திருமணத்தைப் பற்றிய எண்ணம் எழுந்தது. கேட்டு, சம்மதம் பெற்று திருமணம் செய்து கொண்டு..., அந்த மாதிரியான விஷயங்களையெல்லாம் நாங்கள் தாண்டி விட்டோம். வயதும் இல்லையே! ஒருவரையொருவர் புரிந்து கொண்டோம். திருமணமும் நடந்து விட்டது...''

''திருமணத்திற்கு முந்தைய வாழ்க்கையி லிருந்து இந்த வாழ்க்கை எப்படி மாறுபட்டு இருக்கிறது...?''

''இப்போது நான் ரொம்பவும் பாதுகாப் பாக இருப்பதாக உணருகிறேன். கல்யா ணத்திற்கு முன் என்னைப் பற்றிய விஷயத் தையும் நானே முடிவெடுக்க வேண்டும். ஆனால், என்னைக் கவனித்துக் கொள்ளவும், எனக்குப் பாதுகாப்பாகவும், துணைவர் இருக்கிறார் என்ற நினைப்பிலேயே என் வாழ்க்கை நிம்மதியடைந்தது. அவர் கொடுத்த ஊக்கத்தால் அவருடன் சேர்ந்து பாட ஆரம்பித்து விட்டேன். இனியென்ன வேண்டும்...?''

என்று நிறைவுடன் பேசுகிறார் திருமதி. முருகதாஸ்.

''நாங்களெல்லாம் முருகதாஸை முருக பக்தராகப் பார்க்கிறோம். ஒரு மனைவி என்ற முறையில் அவரைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்...?''

''அவருக்கு மிகவும் இளகிய மனது. இவ்வளவு புகழ் பெற்றிருந்தும் எவ்வித பந்தாவோ, கௌரவமோ இல்லாமல் சாதாரண வேலையைக் கூடச் செய்ய ஆரம்பித்து விடுவார். ஒருமுறை பழைய முருகன் கோவிலுக்குக் கச்சேரிக்குப் போயிருந்தோம். நிறைய கற்கள் சிதறிக் கிடந்தது. சுத்தமாக இல்லை என்று எல்லாவற்றையும் பொறுக்கி ஓரமாகப் போட ஆரம்பித்து விட்டார். ''உங்களுக்கேன் முருகா. இந்த

வாசலில் பூக்களின் அழகு தெரிய...

தண்டுகளையும் முறை

பூக்களையும்.

யாக அடுக்கிய பின் தினமும் 3 அல்லது

4 முறை தண்ணீர் தெளிக்கவும்.

பூக்கிண்ணத்தில் தண்ணீர் தின

மும் மாற்றப்பட வேண்டும்.

எல்லாக் கிளைகளும், இலைகளும் ஒரே

அளவில் அமையக் கூடாது.

மலர்கள் பரவலாக அடுக்கப்பட

வேண்டும்.

இவற்றுடன் கூட சில கலர் கற்

களை, கிளிஞ்சல்களை நெருக்கமில்

லாத வகையில் சேர்த்து வைக்கலாம்.

–லட்சுமி நடராஜன்

வேலையெல்லாம்?'' என்று நான் கூடக் கடிந்து கொண்டேன். 'கோவிலுக்குச் செய்வதில் என்ன கௌரவம்?'' என்கிறார். அதேபோல யாருக்காவது ஒரு உதவி வேண்டுமென்றால் உடனே செய்துவிடுவார்.''

என்று கணவரைப் பார்த்துப் புன்முறுவல் செய்தார் மனைவி.

''அவருடன் நிறைய வெளிநாடு போயிருக்கிறீர்கள் இல்லையா...?''

''ம்... லண்டன் பாரீஸ் என்று போயிருந்தாலும் ஆப்பிரிக்காவில் மிகவும் உள்நாட்டிற்கெல்லாம் போனது நாங்கள்தான். திருமதி இந்திராகாந்தி, அமிதாப்பச்சன், முருகா இவர்கள்தான் அங்கே இதுவரை போக அனுமதித்திருக்கிறார்கள். இவருடைய முயற்சியினால் அங்கு முருகனின் பஜனைகள் நடை பெறுவதைக் கண்டு மெய்சிலிர்த்துப் போனேன்.

எங்களுடைய மறக்க முடியாத வெளிநாட்டு அனுபவம் போன மாதத்திய இலங்கைப் பயணம்தான். நாங்கள் அங்கே இருக்கும்போது தான் கலவரம் ஆரம்பித்தது. மிகச் சிறிய அறையில் நாற்பது பெண்கள், கைக்குழந்தைகளுடன் நான் கழித்த இரவை மறக்கவே முடியாது.

இலங்கைத் தமிழ்ப் பெண்கள் தங்களுடைய விலைமதிப்பற்ற நகைகள், அரும் பொருட்கள், வீடு என எல்லாவற்றையும் இழந்து கட்டிய புடவையோடு அடைக்கலம் வந்த இடத்தில் அவர்கள் காட்டிய பொறுமை என்னால் மறக்கவே முடியவில்லை. பெண்களுக்கு இப்படி ஒரு பற்றற்ற நிலைகூட உண்டா என்றுதான் ஆச்சரியப்பட்டேன்.''

கம்பிகள் பொருத்திய கட்டையால் ஓட ஓடத் துரத்தி அடிக்கப்பட்ட வயதான தமிழருக்கு நான் முதலுதவி செய்தபோது கண்ணீரை அடக்க முடியவில்லை. இங்கே வந்தபிறகும் கூட எங்களால் பதைப்பை அடக்க முடியவில்லை. இங்கே நாம் நிம்மதியாக இருக்கும் இந்த நிமிஷம் அங்கே எத்தனை தமிழர்கள் கொல்லப்பட்டார்களோ சித்திரவதைப்பட்டார்களோ என்று வேதனையாக இருக்கும்...''

''எனக்கு அரசியலைப் பற்றியெல்லாம் தெரியாது... ஆனால் நாங்கள் கண்ணாரக் கண்ட விஷயம்... அக்கம்பக்கத்திலிலுள்ள சிங்களவர்கள் தமிழருக்கு உதவுகிறார்கள். வீடுகளிலுள்ள சிங்களவர்களால் காப்பாற்றப் பட்ட தமிழர்கள் மிகப் பலர். நாங்கள் மாறிமாறி அடைக்கலம் புகுந்திருந்த நான்கைந்து வீடுகளும் சிங்களவர்களுடையது தான். அங்கே ஓடிவந்த தமிழர்கள் ஏராளம் பேர். ஆனால் இந்த உண்மை வெளியுலகிற்குத் தெரிய வாய்ப்பில்லை...''

நீண்ட நேரம் இலங்கையில் தாங்கள் கண்ட, கேட்ட செய்திகளையே துயரத்துடன் பேசிக் கொண்டிருந்த தம்பதிகளைத் திசை திருப்ப முருகதாஸைக் கேட்டேன்.

''உங்கள் மனைவி திருமணத்திற்குப் பிறகு நிறைவான வாழ்க்கை வாழ்வதாகச் சொன்னார். துறவியாக இவ்வளவு ஆண்டுக்காலம் வாழ்ந்த உங்களை இத்திருமண வாழ்க்கை எப்படிப் பாதித்திருக்கிறது...?''

''கற்புள்ள மனைவி ஒருவனின் பக்கத்தில் இருப்பது எவ்வளவு பாதுகாப்பு என்பது இப்போதுதான் புரிந்தது. திருமணம் பெண்ணுக்கு மட்டுமில்லை, ஆணுக்கும் பாதுகாப்பானதுதான். கல்யாணத்திற்கு முன் எப்போதும் பல தரப்பட்ட மனிதர்கள் என்னைச் சூழ்ந்து கொண்டே இருப்பார்கள். பொய் சொல்லி உதவி பெற்றவர்களும் உண்டு. இவள் வந்த பிறகு அவையெல்லாம் போய் ஒரு நெறிமுறைப்பட்ட வாழ்க்கை அமைந்து விட்டது...'' என்கிறார் திரு. பித்துக்குளி முருகதாஸ்.

–மங்களா ரமேஷ்

வண்ணப்படம்: பால்ராஜ்



REGISTERED No. TN MS (S) 231
Registered as a Newspaper in Sri Lanka

